Koviloor Digital Library

புலவர் கபிலவாணன்

ஐந்திலக்கணம்

- வினா
- விடை
- விளக்கம்

எழுத்து

சொல்

பொருள்

யாப்பு

அணி

VTN0114

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஐந்திலக்கணம்

வினா, விடை-விளக்கம்

18252

A. THAMBIDURAI.

VTN0114

புலவர் கபிலவாணன்

தம்பித்துரை.

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 18252

அழகப்பா பல்கலைக்கழகம் ★ வளர் தமிழ் நூலகம் காரைக்குடி ★

புலவர் கபிலவாணன்
'வெற்றிவேல் இல்லம்'
255, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
வண்ணாரப்பேட்டை,
சென்னை-600 021

அன்பளிப்பு

Koviloor Digital Library

நூலின் வரலாறு

- நூலின் பெயர் : ஐந்திலக்கணம். இலக்கண நூல்.
- ஆசிரியர் பெயர் : புலவர் கபிலவாணன், (c)
  தமிழாசிரியர், துணைத் தலைமை ஆசிரியர்
  புனித பீட்டர் உயர்நிலைப் பள்ளி,
  இராயபுரம், சென்னை-600 013.
- ஆறாம் பதிப்பு : மே-94.
- ஓவியர் : அட்டைப் பகுதி,ஓவியர் மா. முத்து
- அச்சிட்ட படிகள் : 2000.
- பயன்படுத்தப் பட்டுள்ள தாள் : 11.6 K. G.
- அச்செழுத்து : 10 புள்ளிகள்.
- அச்சகம் : மணியன் அச்சகம்,
  172, சண்முகம் பிள்ளைத் தெரு,
  மயிலாப்பூர், சென்னை-4.
- நூல் கட்டமைப்பு : தயாளன் பைண்டிங் ஒர்க்ஸ்,
  சென்னை-600 005.
- மேலட்டை அச்சடிப்பு : நீலிமா பிரிண்டர்ஸ்,
  சென்னை-600 004.

நூலின் விலை ரு. : 20-00

மொத்தமாக வாங்கும் பள்ளிகளுக்கு மட்டும் ரு. 16-20

நூல் கிடைக்குமிடம் :

புலவர் கபிலவாணன்,
'வெற்றிவேல் இல்லம்'
255, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
வண்ணாரப் பேட்டை,
சென்னை-600 021.

Koviloor Digital Library

ஓம் சரவண பவ

முன்னுரை

மறக்கருணையால் எம்மை மனமுவந்து தடுத்தாட் கொண்ட குகப் பிரும்மத்தின் பேரருளால், இத்தமிழ்ப் பணி நிறைவேறியுள்ளது! தமிழ் இலக்கணத்தை—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யாகிய ஐந்து முகங்களை—உங்களுக்கு அறிமுகம் செய்திருக்கிறோம் வினா—விடை—விளக்கமாக. அம்மையின் அன்புபோல் குழைந்து, குளிர்ந்து நிற்கிறது இந்த இலக்கண நூல்.

பல தேர்வுகளிலும், காண்டிகை நூல்களிலும் கேட்கப்பட்ட வினாக்களே ஈண்டு இடம் பெற்றுள்ளன. உரை மன்னர் சிவஞான முனிவரும், ஆறுமுக நாவலரும், சடகோபராமானுச்சாரியாரும் செய்த செந்தேன் உரை வரிகளே விடையாக அமைந்து விளங்குகின்றது. எள்ளிலிருந்து எடுக்கப்படுவதே எண்ணெய். இருப்பதைத் தொகுத்தும், விரித்தும், சுருங்கியும் நயமாகச் சொல்வதே இலக்கணம். அப்படி அமைந்ததே இந்த நூல்.

மாணாக்கரின் மனத்தில் பதிய வேண்டும் என்ற நோக்கில்—பாட நூல்கள் காட்டிக்கொண்டிருக்கும் எடுத்துக்காட்டுகளையே யாமும் காட்டியுள்ளோம். இலக்கண வகுப்பென்றால் பேய் கண்ட பிள்ளையாய் மருண்டிருப்பார் பலர். மருட்சியை மாற்றுவதற்கு—சிறப்பு உண்டியும் செரிப்பதற்கு இந்த நூல் பயன்படும். இலக்கணம் இலக்கியத்தின் நாகரிகம் என்பதை உணர்ந்துகொள்ள ஐந்திலக் கணம் பயன்படும்.

தேர்வு இலக்கைத் தாண்டுதற்கும், புள்ளிகள் அதிகம் பெறுதற்கும், பிழையின்றி எழுதுதற்கும் இந்நூல் வழி காட்டியாய் இலங்கும்.

Koviloor Digital Library

வகுப்புகளுக்குரிய வினாக்களை வரிசைப்படுத்தித் தந்துள்ளோம். அவ்வகுப்பினர், கொடுக்கப்பட்டிருக்கும் வினா—விடைப் பகுதிகளையாவது நன்கு கற்றுத் தெளிவடைய வேண்டும்; அப்படிக் கற்றால்தான் ஐயம் நீங்கும்.

கல்விக்கண் விரும்புவார் எல்லாப் பகுதிகளையும் ஆழ்ந்து படித்துணர்வது சிறப்பாகும். கல்விக் கூடங்களுக்குரிய முறையில் படைக்கப்பட்ட இந்நூலைத் தமிழறிஞர்கள்—கல்விக் குடும்பத் தலைவர்கள் தக்காங்கு மாணவர்களுக்கு அறிமுகம் செய்வார்களாக.

இந்த நூலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்வது, இளைய தலைமுறைக்கு நல்வழி காட்டுவதாக அமையும்; மொழி நலம் காப்பதாகவும் இருக்கும்.

தொடர்புடைமை நோக்கியே இந்நூல் சிறுசிறு பகுதியாய்ப் பிரிக்கப்படாமல் ஒரே நூலாக அச்சிடப்பட்டுள்ளது. பாதுகாக்க வேண்டிய நூல் என்பதை மாணவர்கள் அறிவார்கள் எனவும் நம்புகிறோம். அறிவுச் செல்வம் அடைய விரும்பும் மாணவர்கள் இந்நூலை ஏற்றுப் பயனடைவார்களாக.

மற்றொரு செய்தியையும் யாம் ஈண்டு நன்றியுணர்வுடன் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளோம். எம்பள்ளித் தாளாளர் மறைச் சகோதரர் எம். ஏ. தாமஸ் அடிகளாரும், மறைச்சகோதரர் தாமி அடிகளாரும் எம்மைக் காலத்தே கண்டெடுத்தார்கள். இவர்களின் தொலை நோக்குப் பார்வையும் பரிவும் இதயத்தைத் தொட்ட ஞான்று எழுந்தவையே எம் இலக்கண நூல்கள். தூய துறவியர் இருவருக்கும் எம் நன்றியைத் ,தெரிவித்துக் கொள்கிறோம். நூலோடு தொடர்பு கொள்வார் அனைவருக்கும் எம் நன்றி.

இளைய தலைமுறை அறிவு நலம் பெற்று வாழ வேண்டும் எந்தமிழ் உலகெலாம் பரவவேண்டும்.

வாழிய செந்தமிழ்! வாழிய வையகம்!

இங்ஙனம்,

சென்னை–21 **கபிலவாணன்.**

Koviloor Digital Library

அணிந்துரை

முனைவர் பு. மு. கங்காதரன், எம்.ஏ.,பி.டி.,பிஎச்.டி.
டிப். மொழியியல்., வித்துவான்.
தமிழ்ப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை-5.

இலக்கணம் என்பது, குறியென்னும் பொருளைத் தரும் 'இலக்கு' என்னுமொரு சொல்லும், நெருங்குதல் என்னும் பொருள் தரவல்ல— அண்ணுதல் என்ற தொழிற் பெயரின் முதனிலையாகிய 'அண்' என்னும் மற்றொரு சொல்லும், பெருமைப் பொருள் ஈறாக வரும் 'அம்' என்னும் பிறிதோர் இடைச்சொல்லும் கூடிப் பிறந்த முப்பகுப்பு ஒரு சொல் ஆகும். இவ்விலக்கணம் என்னுஞ் சொல் பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பல இடங்களில் பயின்று வந்துள்ளது.

இலக்கணம் என்னும் பொருளைக் குறிக்க வரும் பிற சொற்கள் புலன், பனுவல், குறி, இயல்பு, பண்பு, மரபு, நூல், முறை என்பனவாம். நீண்டகால வாழ்வுடைய தொன்மொழிகளில்தாம் இத்தகு ஒரு பொருள் குறித்த பல சொற்கிளவிகளும், பல பொருள் குறித்த ஒரு சொற்கிளவிகளும் காலப்போக்கில் தோன்றுமென்பது மொழி நூலாரின் முடிந்த முடிபு. இலக்கணமென்பதனைச் சுட்டப் பல சொற்கள் தேனினுமினிய நந்தமிழில் தோற்றம் கொண்டுள்ளமையே மொழியின் தொன்மையையும் இலக்கண இலக்கியங்களின் பழைமையையும் பறைசாற்றுவதாய் அமையும்.

Koviloor Digital Library

தொல்காப்பியர்க்கு முன்னும் தொல்காப்பியர்தம் காலத்தும் இவ்விலக்கணம், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக் கணமென முப்பகுப்புண்டது. பின்னர் வந்த புலவோர், தொல்காப்பி யரின் செய்யுளியல் கருத்துகளை வாங்கிக்கொண்டும், எண்ணிறந்த இலக்கியங்களில் பயின்ற பாடலமைப்புகளை உளங்கொண்டும் யாப்பிலக்கணம் என்னுமொரு வகையை நான்காவது வகையாக—பகுதியாக – பகுப்பாகச் சேர்த்தனர். இதனை, இறையனார் களவியலுரை கொண்டு உணரலாம். மேலும், புலனுழுதுண்ணும் புலமையாளர்,

'எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையிற் றிரிதல் நிலைஇய பண்பே'

என்பது போன்றுவரும் எழுத்ததிகாரச் செய்திகளையும், பொருள் கோள் வகை போன்று சொல்லதிகாரச் செய்திகளையும், உவமவியல் மரபியலுள் இடம் பெறும் சில உத்திகள் போன்ற பொருளதிகாரச் செய்திகளையும், வல்லார்வாய்ப் பிறந்த இலக்கிய நயங்களையும் நோக்கி அணியிலக்கணம் என்னும் ஐந்தாம் வகையையும் கூட்டி அணி சேர்த்தனர். இவ்வகையாய் தமிழ் ஐந்திலக்கணம் உடைய தாயிற்று.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டினராகிய வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் தவறியல்பு, மரபியல்பு, செயல்வகை இயல்பு, நடுநிலை, எதிர்நிலை, அருள்நிலை என்னும் பகுதிகளைத் தன்னகத்தே கொண்ட 'புலமை இலக்கணம்' என்பதாகிய ஆறாம் வகை இலக்கணத்தைப் படைத்தளித்தார். புலமை இலக்கணம் ஒன்றனையும் சேர்த்து இன்று 'அறுவகை இலக்கணம்' எனத் தமிழ்மொழி செம்மாந்து விளங்குகின்றது.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஐந்திலக்கணமே கற்பிக்கப் பெற்றும் அவை தம்முள் வினாக்கள் வினவப் பெற்றும் வருதலான் நன்னர் நெஞ்சத்துப் புலவர்-கவிஞர் பன்னூலாசிரியர் கபிலவாணர் ஐந்திலக்கண வினா,விடை-விளக்கம் யென்னும் நூலை மாணாக்கர்

Koviloor Digital Library

உலகம் பயன்பெற, எளிய சொற்களைக் கொண்டு இனிய முறையில் யாத்துத் தந்துள்ளார். மாணாக்கர் மாட்டு ஆசிரியர் கொண்டுள்ள கண்ணோட்டத்தையும், புலமையையும் வெளிக் கொணடுவதாக இந்நூல் அமைந்துள்ளமையைப் புதுமையெனின் தள்ளுதலும், பழமையெனின் அள்ளூறிப் போற்றுதலும் தவிர்ந்து நடுவுநின்று நன்மையை நோக்குவார் யாவரும் உணர்வர்.

இன்னிதின் யாத்தமைக்குச் சில காட்டுகள் :

அ. இலக்கு—குறிக்கோள்; அணம்—அழகு; எனவே அழகைக் குறிக்கோளாகக் கொண்டது இலக்கணம். (1-ஆம் வினாவின் விடை)

ஆ. ஆங்கில வழியில் பயிலும் மாணாக்கர்களும் பிறரும் தெளிவுறும் வகையில் ஏற்ற—இணையான ஆங்கிலக் குறியீடுகளைத் தருதல் (நூல் முழுவதும் காண்க)

இ. முற்றாய்தம் எட்டு என்பதனை உரையாசிரியன்மார் நெறிநின்று விளக்கியுள்ளமை (37)

ஈ. இன்னிசை அளபெடை— செய்யுளிசை அளபெடை (44); ஏவல்—வியங்கோள் (185); ஆகுபெயர்— அன்மொழி (226); இரட்டைக்கிளவி—அடுக்குத் தொடர் (229); தொழிற்பெயர்—வினையாலணையும் பெயர் (260) ஆகியவற்றிடையே காணும் வேறுபாடுகளை மாணாக்கர் பயன்பெறும் வண்ணம் உரைத்துள்ளமை.

உ. ‘சொற்றொடர் வரலாறு’ என்னும் பகுதி முழுவதும் (263)

ஊ. தமிழுக்குப் புதியனவாக உள்ள நிறுத்தற் குறிகள் நல்ல வண்ணம்-உளங்கொள்ளும் வண்ணம் மொழியப்பட்டுள்ளமை.

எ. இயல்பீறு, விதியீறுகளை விளக்கியுள்ள பாங்கு [255]

ஏ. முறைமையின் உரைத்தல் கருதிச் சிதறுண்ட தேங்காய்போல் ஆங்காங்குக் கூறிச்செல்லும் வலிமிகுமிடங்களையும் [345], வலி மிகா இடங்களையும் (346) தொகுத்து ஓரிடத்துத் தருதல்.

Koviloor Digital Library

ஐ. 'வாரானை' என்பதனை வா+ர்+ஆனை எனப் பகுப்பது கருதி, வருதிர் என்பதனை வா+ர்+த்+இர் எனப் பகுத்த முறைமை [262].

ஆசிரியர் புலவர் கபிலவாணரின் புலமை நலமும், பணி மூப்பும், இலக்கணமெனின் மருளும் மாணாக்கருலகின்மேல் கொண்ட கழிபெருங் காதன்மையும், உயர்ந்தோர் வழக்கத்தையும் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதற்கும் பேசுதற்கும் கருவியாக அமையும் இலக்கணத்தை யாவரும் அறிதல் வேண்டுமென்னும் வேட்கையும் ஒருங்கிணையத் தோன்றிய இந்த 'ஐந்திலக்கண வினா, விடை—விளக்கம்' என்னும் நூலைத் தமிழ் மாணாக்கருலகும், அவர்களைப் பயிற்றுவிப்பாருலகும் போற்றி வரவேற்பதாக.

'இலக்கணமும் இலக்கியமும் அறியாதான்
ஏடெழுதல் கேடு நல்கும்'

என்னும் பாவேந்தரின் மொழியை மனங்கொண்டு யாவரும் இலக்கண அறிவு பெறவேண்டும் என்னும் பேரார்வத்தில் ஆக்கப் பட்டுள்ள இந்த ஐந்திலக்கண நூலை தமிழகம் நன்கு பயன் படுத்துமாக. ஆர்வலர்களும் பிறரும் விரும்பி வரவேற்றுப் பயன்பெற வேண்டி—தமிழறியும் பெருமானின் தனிப்பெருங் கருணையை உன்னுவன்.

வாழ்க வையகம் !

அன்பன்,

சென்னை–5 பு. மு. கங்காதரன்.

Koviloor Digital Library

ஐந்திலக்கணம்

1. எழுத்து
(Orthography—On Letters)

● 1. இலக்கணம் என்றால் என்ன?

நாம் தமிழைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும். தமிழ்ச் சொற்களைக் கையாண்டுள்ள முறைகளையும் அறியவேண்டும். ஆகவே, தமிழின் தன்மைகளையும் மரபுகளையும் விதிப்படி உணர்ந்து பேசுவதற்கும், எழுதுவதற்கும் கருவியாக இருக்கும் நூலே 'இலக்கணம்' ஆகும். இலக்கு = குறிக்கோள். அணம் = அழகு. எனவே, அழகைக் குறிக்கோளாகக் கொண்டது இலக்கணம் எனலாம்.

● 2. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை யாவன : (1) எழுத்து, (2) சொல், (3) பொருள், (4) யாப்பு, (5) அணி.

● 3. எழுத்து (Letters) என்பது யாது?

மொழிக்கு முதற்காரணமாகவும், செவியால் கேட்கப் படும் ஒலியணுத்திரளின் [ஒலி நுட்பத்தின்] காரியமாக வும் தோன்றுகிற ஒலி எழுத்து எனப்படும்.

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே. [ந. சூ.]

Koviloor Digital Library

● 4. எழுத்தின் வடிவம் பற்றிக் குறிப்பிடுக?

எழுத்திற்கு இரண்டு வடிவம் உண்டு என்று கூறலாம். 1. ஒலி வடிவம், 2. வரி வடிவம்.

வாயால் ஒலிக்கப்படுவதும் செவியால் கேட்கப் படுவதும் எழுத்தின் ஒலி வடிவம். எழுதப்படுவது வரி வடிவம். ஒலி வடிவ எழுத்திற்கு ஓர் அடையாள மாகவே, ஒரு குறியீடாகவே எழுத்தின் வரிவடிவம் இருந்து வருகிறது.

● 5. எழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?

எழுத்து இரண்டு வகைப்படும். அவை முதலெ ழுத்து, சார்பெழுத்து என்பவையாம்.

● 6. முதலெழுத்துகள் (Primary Letters) யாவை? அவ்வ ஏன் அப்பெயர் பெற்றன?

உயிரெழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் தமிழ் மொழிக்கு அடிப்படையான ஒலிகள். உயிர்மெய் போன்ற எழுத்துகள் தோன்றுவதற்கு இந்த எழுத்துகளே முதலாகும். ஆகையால், இவற்றை முதலெழுத்துகள் என்று கூறுவர்.

அ, ஆ: இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ; ஒ, ஓ; ஔ—என்ற பன்னிரண்டும் உயிர் எழுத்துகள்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் —என்ற பதினெட்டும் மெய்யெழுத்துகள்.

உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே. [ந. சூ. 59]

● 7. உயிரெழுத்துகளை (Vowels) எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

உயிர் எழுத்துகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன : 1. குற்றெழுத்துகள், 2. நெட்டெழுத்துகள்.

Koviloor Digital Library

[குறிப்பு : குறுகிய ஓசையை உடைய எழுத்துகள் குற்றெழுத்துகள். குற்றெழுத்துகளைக் குறில் எனவும் கூறலாம். நீண்ட ஓசையை உடைய எழுத்துகள் நெட்டெழுத்துகள். நெட்டெழுத்துகளை நெடில் எனவும் கூறலாம்.]

● 8. குற்றெழுத்துகள்(Short Vowels)எத்தனை? அவை யாவை?

குற்றெழுத்துகள் ஐந்து.

அவையாவன : அ, இ, உ, எ, ஒ.

அவற்றுள்,

அ இ உ எ ஒக்குறி லைந்தே. [ந. சூ. 64]

● 9. நெட்டெழுத்துகள் (Long Vowels) எத்தனை? அவை யாவை?

நெட்டெழுத்துகள் ஏழு.

அவையாவன : ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில். [ந. சூ. 65]

● 10. மெய்யெழுத்துகளை (Consonants) எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

மெய்யெழுத்துகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன : 1. வல்லெழுத்துகள், 2. மெல்லெழுத்துகள், 3. இடையெழுத்துகள்.

குறிப்பு : வலிய அல்லது கடுமையான ஓசையுடைய எழுத்துகளை வல்லெழுத்துகள் எனவும், மென்மையான ஓசையுடைய எழுத்துகளை மெல்லெழுத்துகள் எனவும், இவையிரண்டுக்கும் இடைப்பட்ட ஓசையுடைய எழுத்துகளை இடையெழுத்துகள் எனவும் வழங்குகிறோம்.

வல்லெழுத்துகளின் கணத்தை வல்லினம் எனவும், மெல்லெழுத்துகளின் கணத்தை மெல்லினம் எனவும், இடையெழுத்துகளின் கணத்தை இடையினம் எனவும் கூறுவர்.

Koviloor Digital Library

அம்முத லீராறு ஆவி கம்முதல்
மெய் மூவாறென விளம்பினர் புலவர் [ந. சூ. 63]

● 11. வல்லின மெய்கள் (Hard Consonants) யாவை?

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வல்லின மெய்கள்

வல்லினங் க ச ட த ப ற வென வாறே [ந. சூ. 68]

● 12. மெல்லின மெய்கள் (Soft Consonants) யாவை?

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லின மெய்கள்.

மெல்லினம் ஙஞணநமன என ஆறே [ந. சூ. 69]

● 13. இடையின மெய்கள் (Medial Consonants) யாவை?

ய், ர், ல், வ், ழ், ள். என்னும் ஆறும் இடையின மெய்கள்.

இடையினம் ய ர ல வ ழ ள வென வாறே. [ந. சூ. 70]

● 14. உயிர்மெய்யெழுத்து (Vowel Consonants) என்றால் என்ன?

ஒரு மெய்யெழுத்தும், ஓர் உயிரெழுத்தும் ஒன்றாக இணைந்து ஒரே எழுத்தாகும். அந்த எழுத்துக்கு உயிர் மெய்யெழுத்து என்று பெயர்.

(எ.டு) க் + அ = க   ங் + அ = ங   ம் + ஐ = மை
ட் + இ = டி   ல் + ஆ = லா   வ் + ஈ = வீ

● 15. உயிர்மெய்யெழுத்துகள் எத்தனை? எவ்வாறு?

ஒரு மெய்யெழுத்தோடு பன்னிரண்டு உயிர் எழுத்து களையும் இணைத்தால் 1×12 = 12 உயிர் மெய் யெழுத்துகள் கிடைக்கும். இவ்வாறே 18 மெய்யெழுத்து களோடும் இணைத்தால் 18X12 = 216 உயிர்மெய் எழுத்துகள் கிடைக்கும்.

எனவே, உயிர்மெய்யெழுத்துகள் மொத்தம் 216.

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 18252

Koviloor Digital Library

● 16. ஆய்த எழுத்து என்றால் என்ன?

ஃ உருவில் விளங்கும் எழுத்து ஆய்த எழுத்து எனப்படும்.

குறிப்பு : இந்த எழுத்தைத் தனிநிலை என்றும் கூறுவர். இது தனக்கு முன்னே ஒரு குற்றெழுத்தையும், பின்னே ஒரு வல்லின உயிர்மெய்யெழுத்தையும் துணையாகக் கொண்டு வரும்.

(எ.டு) அஃது; எஃகு; பஃறுளி.

● 17. ஆய்த எழுத்து உயிர் எழுத்தா? மெய்யெழுத்தா? உரிய காரணத்தை விளக்கி எழுதுக.

ஆய்த எழுத்து, உயிர் எழுத்தன்று; மெய்யெழுத்தும் அன்று. உயிர் எழுத்து என்றால் தனித்து இயங்க வேண்டும்; பிறமெய்யெழுத்தில் ஏறி உயிர்மெய் யெழுத்தை உண்டாக்க வேண்டும். மெய்யெழுத் தென்றால் ஏனைய் உயிர் எழுத்துகள் சேர இடங் கொடுத்தல் வேண்டும். இவ்விரண்டு செயல்களும் ஆய்த எழுத்திற்கு இல்லை என்பதால், ஆய்த எழுத்து, 'தனி நிலை' என்று பெயர் பெறுகிறது.

● 18. தமிழ்மொழியில் உள்ள மொத்த எழுத்துகள் எத்தனை? எவ்வாறு?

உயிர் எழுத்துகள்	—	12
மெய்யெழுத்துகள்	—	18
உயிர்மெய் எழுத்துகள் 18X12	—	216
ஆய்த எழுத்து	—	1
மொத்த எழுத்துகள்	—	247

குறிப்பு : உயிர்மெய்க் குற்றெழுத்துகள் 18X5 = 90
உயிர்மெய் நெட்டெழுத்துகள் 18X7 = 126
வல்லின உயிர்மெய்யெழுத்துகள் 6X12 = 72

Koviloor Digital Library

மெல்லின உயிர்மெய்யெழுத்துகள் 6X12=72
இடையின உயிர்மெய்யெழுத்துகள் 6X12=72

● 19. சார்பெழுத்து என்று பெயர்பெறக் காரணம் என்ன?

சார்பெழுத்து, முதல் எழுத்துக்களைச் சார்ந்தும் சில மொழிகளைச் சார்ந்தும், முதல் எழுத்துகளின் திரிபு, விகாரத்தாற் பிறக்கின்றன. அதனால், சார்பு எழுத்து எனப்பெயர் பெற்றது.

● 20. சார்பெழுத்துகள் (Secondary Letters) யாவை?

சார்பெழுத்து பத்து வகைப்படும்.

1. உயிர்மெய்	2. ஆய்தம்
3. உயிரளபெடை	4. ஒற்றளபெடை
5. குற்றியலுகரம்	6. குற்றியலிகரம்
7. ஐகாரக்குறுக்கம்	8. ஔகாரக்குறுக்கம்
9. ஆய்தக்குறுக்கம்	10. மகரக்குறுக்கம்.

உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்து ஆகும். [ந. சூ. 60]

● 21. 'சுட்டுதல்' என்றால் என்ன?

ஒரு பொருளைக் கண்ணாலோ, கையாலோ, கருத்தாலோ குறிப்பிட்டுக் காட்டி உணர்த்தும் செயலுக்குச் சுட்டுதல் என்று பெயர்.

● 22. சுட்டெழுத்துகள் (Demonstrative Letters) யாவை?

அ, இ, உ என்ற மூன்று எழுத்துகளும் சுட்டுப் பொருளில் வந்தால் சுட்டெழுத்துகள் ஆகும்.

(எ-டு)	அவன்	இவன்	உவன்
	அவள்	இவள்	உவள்
	அவர்	இவர்	
	அது	இது	உது
	அம்மனிதன்	இம்மனிதன்.	

Koviloor Digital Library

உகரத்தால் சுட்டும் முறை இக்காலத்தில் வழக்கில் இல்லை.

அ, இ, உம் முதல் தனிவரில் சுட்டே [ந. சூ. 66]

23. 'அ' என்னும் சுட்டெழுத்தின் தன்மை யாது?

'அ' என்ற சுட்டெழுத்து சேய்மையில் (தூரத்தில்) உள்ள பொருளைக் குறிக்கும்.

(எ.டு) அவன், அவள், அவர், அது, அவை, அப்பொருள், அப்பையன்.

(குறிப்பு : 'அ' சேய்மையில் உள்ள பொருளைக் குறிப்பதால் சேய்மைச்சுட்டு எனப்படும்)

24. 'இ' என்ற சுட்டெழுத்து தன்மை யாது?

'இ' என்ற சுட்டெழுத்து அண்மையில் (அருகில்) உள்ள பொருளைக் குறிக்கும்.

(எ.டு) இவன், இவள், இவர், இது, இவை,
இப்பொருள், இப்பையன்

குறிப்பு : 'இ' அண்மையில் உள்ள பொருளைக் குறிப்பதால் அண்மைச்சுட்டு எனப்படும்.

25. 'அகச்சுட்டு' என்றால் என்ன?

அ, இ என்னும் சுட்டெழுத்துகள் ஒரு சொல்லின் உள்ளாகவே நின்று சுட்டுப் பொருளைக் காட்டி வந்தால், அகச்சுட்டு எனப்படும். [அகம் — உள்]

(எ.டு) அவன், அவள், அவர், அது, அவை,
இவன், இவள், இவர், இது, இவை.

26. 'புறச்சுட்டு' என்றால் என்ன?

அ, இ என்னும் சுட்டெழுத்துகள் ஒரு சொல்லுக்கு வெளியே நின்று சுட்டுப்பொருளைக் காட்டி வந்தால் புறச்சுட்டு எனப்படும்.

Koviloor Digital Library

(எ.டு) அம்மனிதன், அப்பெண், அப்பொருள்.
இம்மனிதன், இப்பெண், இப்பொருள்.

(குறிப்பு : சில சமயங்களில் அ, இ என்ற சுட்டு எழுத்துகள் அந்த, இந்த என முறையே திரிந்துவரும்.)

(எ.டு) அந்தப் பையன், இந்தப் பெண், எனவே, அந்த, இந்த என்பன சுட்டுத்திரிபுகள் எனப்படும்.

குறிப்பு : அகச்சுட்டையும், புறச்சுட்டையும் கண்டு அறியும் முறை : சுட்டுப் பொருளைத்தரும் சொல்லில் சுட்டெழுத்தைத் தனியே நிறுத்துக. மீதியுள்ள பாகம் வேறொரு முழுச்சொல்லா என்று பாருங்கள். முழுச் சொல்லாக இல்லாவிட்டால் அகச்சுட்டு. முழுச் சொல்லாக இருந்தால் புறச்சுட்டாம்.

(எ.டு) இம்மரம்.

இதிலுள்ள 'இ' என்னும் சுட்டெழுத்தைத் தனியே வைத்த பின் மீதியுள்ள பாகம் 'மரம்' என்பது. இது ஒரு முழுச்சொல். எனவே, இச்சொல்லில் உள்ள சுட்டெழுத்து புறச்சுட்டாகும்-

'அ', 'இ' என்ற எழுத்துகளைத் தவிர 'உ' என்பதும் சுட்டெழுத்தாகும். அது, இரு பொருள்களுக்கு இடையே உள்ள பொருளையும், மேலே உள்ள பொருளையும் குறிக்கும். இது பெரும்பாலும் செய்யுளில்தான் வரும்.

● 27. வினா எழுத்துகள் (Interrogative Letters) யாவை?

ஆ, எ, ஏ, ஒ, யா என்ற ஐந்து எழுத்துகளும், கேள்வி குறித்து வந்தால் வினா எழுத்துகள் ஆகும்.

(எ.டு)	எவன்?	எம்மனிதன்?
	யாவன்?	யாங்ஙனம்?
	அவனா?	செழியனா?
	அவனோ?	செழியனோ?
	ஏது?	நன்றன்றோ? (நல்லதல்லவா)

எயா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இருவழியும் வினா வாகும்மே (ந. சூ. 67)

Koviloor Digital Library

● 28. சொல்லுக்கு முதலில் வரும் வினா எழுத்துகள் யாவை?

எ, யா, ஏ என்னும் மூன்று வினா எழுத்துகளும் சொல்லுக்கு முதலில் வரும்.

(எ.டு) எவன்? எம்மனிதன்?
யாவன்? யாங்ஙனம்?
ஏது?

● 29. சொல்லுக்கு முடிவில் வரும் வினா எழுத்துகள் யாவை?

ஆ, ஏ, ஓ என்னும் மூன்று வினா எழுத்துகளும் சொல்லுக்கு முடிவில் வரும்.

(எ.டு) அவனா? செழியனா?
அவனோ? செழியனோ?
நன்றன்றோ? [நல்லதல்லவா?]

● 30. அகவினா என்றால் என்ன?

வினா எழுத்துக்கள் ஒரு சொல்லுக்கு உள்ளேயே நின்று வினாப்பொருளைக் காட்டி வந்தால் அகவினா எனப்படும்.

(எ.டு) எவன்? யாது? ஏது?
யாவன்? என்ன?

● 31. புறவினா என்றால் என்ன?

வினா எழுத்துகள் ஒரு சொல்லுக்கு வெளியே நின்று வினாப்பொருளைக் காட்டி வந்தால் புறவினா எனப்படும்.

(எ.டு) எம்மனிதன்? செழியனா?
யாங்ஙனம்? செழியனோ?

குறிப்பு : வினாப் பொருளைத் தரும் சொல்லில் வினா எழுத்தைத் தனியே நிறுத்துக. மீதியுள்ள பாகம் ஒரு முழுச் சொல்லானால் அது புறவினா; மீதியுள்ள பாகம் ஒரு முழுச்சொல்லல்ல என்றால் அஃது அகவினா.

Koviloor Digital Library

● 32. இன எழுத்துகள் (Relative Letters) என்றால் என்ன?

எழுத்துகளை உச்சரிக்கும்போது அவை தோன்றும் இடம், ஒலிக்கும் முயற்சி, ஒலிக்கும் கால அளவு, உருவம் ஆகியவற்றில் ஒற்றுமையுள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

தானம் முயற்சி அளவு பொருள்வடிவு
ஆனஒன்று ஆதியோர் புடையொப்பு இனமே. [ந.சூ. 72]

● 33. உயிரெழுத்துகளுள் ஒன்றற்கொன்று இனமாகும் எழுத்துகள் யாவை?

உயிர் எழுத்துகளுள் குற்றெழுத்துகளும், அவற்றிற் குரிய முறையான நெட்டெழுத்துகளும் ஒன்றிற்கொன்று இனமாவன.

அவை முறையே,

குறில் : அ இ, உ எ, ஒ குறிலுக்கு நெடில் இனம்.

நெடில் : ஆ ஈ, ஊ ஏ, ஓ நெடிலுக்குக் குறில் இனம்.

மேலும் ஐ — இ
ஔ — உ என்பனவும் இனமாம்.

● 34. மெய்யெழுத்துகளுள் ஒன்றற்கொன்று இனமாகும் எழுத்துகள் யாவை?

மெய்யெழுத்துகளுள் ஆறு வல்லின மெய்களுக்கும், ஆறு மெல்லின மெய்களும் முறையே இனம் ஆகும்.

அவை முறையே,

வல்லினம் : க ச ட த ப ற வல்லினத்திற்கு
மெல்லினம் இனம்.

மெல்லினம் : ங ஞ ண ந ம ன

இடையின மெய்கள் எல்லாம் ஒரே இனமாகும்.

குறிப்பு : இங்குக் கூறியவை யாவும் உயிர்மெய் எழுத்துகளுக்கும் பொருந்தும்.

● 35. மாத்திரை (Time Unit of Letters) என்றால் என்ன?

Koviloor Digital Library

எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு மாத்திரை என்று கூறுகிறோம்.

நாம் இயல்பாகக் கண் இமைக்க எடுத்துக் கொள்ளும் நேரமே மாத்திரை ஆகும்.

கைந்நொடிக்கும் நேரத்தையும் மாத்திரை எனலாம்.

இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை (ந. சூ. 100)

● 36. எந்தெந்த எழுத்து எவ்வளவு மாத்திரை பெறும்?

குற்றெழுத்துகள் ஒரு மாத்திரையும்,
நெட்டெழுத்துகள் இரண்டு மாத்திரைகளும்,
மெய்யெழுத்துகளும் ஆய்த எழுத்தும்
அரை மாத்திரை பெறும்.

● 37. முற்றாய்தமாவது யாது?

1. குற்றெழுத்துக்கும், வல்லின உயிர்மெய்யெழுத்துக்கும் இடையே வரும் ஆய்த எழுத்து முற்றாய்தம் ஆகும்.

2. அவ்+கடிய=அஃகடிய என்று புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தமும் முற்றாய்தமாகும்.

3. செய்வது போன்ற சொற்கள் செய்வஃது என்பதுபோல் விரிந்து நிற்கும் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தமும் முற்றாய்தமாகும்.

குறிப்பு :	வல்லின வகையால் வரும் முற்றாய்தம்	6
	புணர்ச்சி விகாரத்தால் வரும் முற்றாய்தம்	1
	செய்யுள் விகாரத்தால் வரும் முற்றாய்தம்	1
	ஆக மொத்தம் முற்றாய்தம்	8

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரோடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே (ந. சூ.90)

● 38. அளபெடையாவது (Prolongation) யாது?

Koviloor Digital Library

செய்யுளில் ஓசை குறையும்போது சீரும் தளையும் சிதைந்து இலக்கணக்குற்றம் உண்டாகும். அதனை நிறைவு செய்வதற்காக ஒரு சொல்லின் முதல், இடை, கடை என்ற மூவிடத்திலும் நிற்கும் நெட்டெழுத்துகள், தமக்குரிய இரண்டு மாத்திரை அளவைக் கடந்து ஒலிக்கும். நெட்டெழுத்து நீண்டு ஒலிக்கிறது என்பதை அறிவிப்பதற்கு—அதன் இனமாகிய குற்றெழுத்து அதன் பக்கத்தில் வரி வடிவில் எழுதப்படும். நெட்டெழுத்து நீண்டு ஒலிப்பது அளபெடையாகும்.

இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே. [ந. சூ. 91]

● 39. அளபெடை எத்தனை வகைப்படும்?

அளபெடை, உயிரளபெடை என்றும் ஒற்றளபெடை என்றும் இரண்டு வகைப்படும்.

● 40. உயிரளபெடை (Vowel Prolongation) என்றால் என்ன?

உயிர் நெட்டெழுத்துகள் செய்யுளில் ஓசை குறையும் பொழுது, ஓசையை நிறைப்பதற்காக அளவு எடுத்து (நீண்டு) ஒலிப்பது உயிரளபெடை ஆகும்.

(எ.டு) ஏரின் உழாஅர்
கெடுப்பதூஉம்
உரனசைஇ, வரனசைஇ.

● 41. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

உயிரளபெடை: 1. செய்யுளிசை அளபெடை அல்லது இசைநிறை அளபெடை. 2. இன்னிசை அளபெடை, 3. சொல்லிசை அளபெடை என்று மூன்று வகைப்படும்.

● 42. செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை இவற்றை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

Koviloor Digital Library

1. செய்யுளிசை அளபெடை :

செய்யுளில் ஓசை குறையும்பொழுது நெட்டெழுத்து, தனக்குரிய இரண்டு மாத்திரை அளவைக் காட்டிலும் நீண்டு, அதாவது மூன்று மாத்திரை அளவாய் ஒலிக்கும். இதனைச் செய்யுளிசை அளபெடை என்று கூறுவார்கள்.

(எ.டு) ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆ அதும் என்னும் அவர்.

2. இன்னிசை அளபெடை :

செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிமையான ஓசையைற் தருவதற்காக, ஒரு குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு, அந்த நெட்டெழுத்து அளபெடுக்கும். இஃது இன்னிசை அளபெடையாகும்.

(எ.டு) "கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

இக் குறட்பாவில் ஓசை குறையாத போதும், மேலும் காதுக்கு இனிமையான ஓசையைக் கொடுப்பதற்குக் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என்று அளபெடுத்து வந்துள்ளது.

இன்னிசை அளபெடையில் குறில் நெடிலாகி அந்த நெடில் அளபெடுக்கும்.

3. சொல்லிசை அளபெடை :

செய்யுளில் ஓசை குறையாத போதும் சில சமயங்களில் ஒரு பெயர்ச்சொல் அதனோடு தொடர்புடைய வினையெச்சப் பொருள் தருமாறு மாற்றுவதற்காக அளபெடுத்து வருவது சொல்லிசை அளபெடையாகும்.

(எ.டு) "உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்."

Koviloor Digital Library

இதில் விருப்பம் எனப் பொருள்படும் 'நசை' என்ற சொல், விரும்பி என்று வினையெச்சப் பொருள் தருவதற்கு 'நசைஇ' என்று அளபெடுத்து வந்தது.

● 43. உயிரளபெடையை எவ்வாறு எழுதவேண்டும்?

நெட்டெழுத்துகளே அளபெடுத்து வரும். அவற்றுக்கு இனமான குற்றெழுத்துகளை அந்த நெட்டெழுத்துகளுக்குப் பின்னால் அடையாளக் குறியாக எழுத வேண்டும்.

விளக்கம் : ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ. இவை இரண்டு எழுத்துகளாக எழுதப்பட்ட போதிலும், மூன்று மாத்திரை உள்ள ஓரெழுத்துப் போன்றே ஒலிக்கும். தளை முதலிய செய்யுள் உறுப்புகளுக்கு ஏற்றபடி ஓரெழுத்தாக அல்லது இரண்டு எழுத்துக் களாகக் கணக்கிடப்படும்.

● 44. இன்னிசை அளபெடைக்கும், செய்யுளிசை அளபெடைக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை ?

1. செய்யுளிசை அளபெடை :

1. ஒரு சொல்லில் இயல்பாக உள்ள நெட்டெழுத்து அளபெடுத்து வரும். 2. அளபெடைக் குறியை (குற்றெழுத்தை) நீக்கினால், செய்யுளில் சீர், தளை முதலியன கெடும்.

2. இன்னிசை அளபெடை :

1. சொல்லில் இயல்பாக உள்ள குற்றெழுத்துகள் நெட்டெழுத்துகளாக முதலில் மாறுபடும். பின்னர் அந்த நெட்டெழுத்துக்கள் நீண்டு ஒலிக்கும். (2) அளபெடுக் காமல் இருந்தாலும் செய்யுளின் சீர், தளை கெடாது.

● 45. ஒற்றளபெடையின் (Consonant Prolongation) இலக்கணத்தை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

Koviloor Digital Library

செய்யுளின் ஓசை குறையும் பொழுது தனிக்குறிலை அல்லது குறிலிணையை அடுத்து வரும் ஒற்றெழுத்து அளபெடுத்து ஓசையை நிரப்பும். சீர், தளை சிதையாமல் காக்கும். ஒற்றெழுத்து, அளபெடுத்து (நீண்டு) ஒலிப்பதால் ஒற்றளபெடை என்று கூறுவர்.

(எ.டு) ''எங்ங் கிறைவனுளன் என்பாய் மனனேயான்
எங்ங் கெனத்திரிவா ரில்.''

''இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்.''

இந்த எடுத்துக்காட்டுகளில் ஒற்று அளபெடுத்து வந்துள்ளது.

ஙஞண நமன வயலள ஆய்தம்
அளபாம் குறிலிணை குறிற்கீழ் இடைகடை
மிகலே அவற்றின் குறியாம் வேறே (ந. சூ. 92)

● 46. குற்றியலுகரமாவது (Shortened 'U' உ) யாது?

தனிக் குற்றெழுத்து அல்லாத மற்றை எழுத்து களுக்குப்பின், சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

(குறிப்பு : உச்சரிக்கும் ஓசையில் குறைந்த உகரம் குற்றியலுகரம் என்று சொல்லப்படும்.)

நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலிஇடை
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும்; பிறமேற் றொடரவும் பெறுமே (ந. சூ. 94)

● 47. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை : 1. நெடில் தொடர்க் குற்றியலுகரம், 2. ஆய்தத் தொடர்க் குற்றிய லுகரம், 3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், 4. வன் றொடர்க் குற்றியலுகரம், 5. மென்றொடர்க் குற்றிய லுகரம், 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் என்பன.

Koviloor Digital Library

1. ஒரு சொல்லின் இறுதியில் கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு எழுத்துக்களில் ஒன்று இருக்கவேண்டும். அந்த ஈற்றெழுத்துக்கு முன்னே உள்ள எழுத்து, தனி நெட்டெழுத்தாக இருந்தால் நெடில் தொடர்க்குற்றியலுகரம் எனப்படும்.

(எ.டு) பாகு, காசு, நாடு, தூது, பாபு, தாறு.

2. ஈற்றெழுத்துக்கு முன்னே உள்ள எழுத்து க், ச், ட், த், ப், ற் என்ற ஆறில் ஒன்றாயின், அது வன்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

(எ-டு) பாக்கு, பேச்சு, பட்டு, பத்து, கூப்பு, காற்று.

3. ஈற்றெழுத்துக்கு முன்னே உள்ள எழுத்து, ங், ஞ், ண், ந், ம்,ன் என்ற ஆறில் ஒன்றாயின், அது மென்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

(எ.டு) பங்கு, பஞ்சு, மண்டு, பந்து, கூம்பு, கன்று.

4. ஈற்றெழுத்துக்கு முன்னே உள்ள எழுத்து, ய், ர், ல், வ், ழ், ள் என்ற ஆறில் ஒன்றாயின் அது இடைத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

(எ.டு) கொய்து, பல்கு, இயல்பு.

5. ஈற்றெழுத்துக்கு முன்னே உள்ள எழுத்து உயிரெழுத்தாயின், அஃது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

(எ.டு) முதுகு, பரிசு, பகடு, எழுது, மரபு, கயிறு.

6. ஈற்றெழுத்துக்கு முன்னே உள்ள எழுத்து ஆய்த எழுத்தாயின், அஃது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் எனப் படும்.

(எ.டு) எஃகு, கஃசு, (ஒரு சிறு எடை), அஃது.

● 48. முற்றியலுகரம் என்றால் என்ன?

Koviloor Digital Library

குற்றியலுகரம் அல்லாதன எல்லாம் முற்றியலுகரம் ஆகும். அதாவது, தனியாக நிற்கும் உகரம், தனிக் குற்றெழுத்தைச் சார்ந்து வல்லின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரம், மொழிக்கு முதலில் வரும் உகரம் ஆகியவை முற்றியலுகரங்களாம்.

(எ.டு) உ, கு, து, கடு, கழிவு, விம்மு, உருவம், குடதிசை, துவரை.

● 49. குற்றியலிகரம் என்றால் (Shortened 'I' 'இ') என்ன?

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம். அதாவது தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் இகரம் குற்றியலிகரமாகும்.

குற்றியலுகரத்திற்கு முன்னே யகரம் வந்து சேர்வதால் குற்றியலுகரம், குற்றியலிகரமாகும். கேள் + மியா = கேண்மியா. செல் + மியா = செண்மியா என்று வரும் பொழுது, 'ம்' என்ற எழுத்தின் மீது ஏறிவரும் இகரம் குற்றியலிகரமாகும்.

[எ.டு]	நாடு	+	யாது	=	நாடியாது?
	வரகு	+	யாது	=	வரகியாது?
	மச்சு	+	யாது	=	மச்சியாது?
	விருது	+	யாது	=	விருதியாது?
	வம்பு	+	யாது	=	வம்பியாது?
	நன்று	+	யாது	=	நன்றியாது?

யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய · (ந.சூ. 93)

● 50. குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றிற்கிடையே உள்ள ஒற்றுமை—வேற்றுமையை விவரி.

Koviloor Digital Library

குற்றியலுகரமும் முற்றியலுகரமும் உயிரெழுத்து என்பதே இரண்டிற்குமுள்ள ஒற்றுமையாகும்.

குற்றியலுகரம் : அரை மாத்திரை நேரம் ஒலிக்கும். ஈரெழுத்தொரு மொழியானால் நெடிலைத் தொடர்ந்து வரும். சொல்லின் ஈற்றில் வல்லின மெய்யின்மேல் ஏறி வரும். இடவகையால் ஆறு வகையான பெயர் வேறு பாடுகள் அமைய வரும். தனியெழுத்து, குற்றியலு கரமாகா.

முற்றியலுகரம் : ஒரு மாத்திரை நேரம் ஒலிக்கும். தனி உகரமாகவும் வரும். சொல்லின் மூவிடத்தும் வரும். தனிக்குறிலை அடுத்து வல்லின மெய்யின்மேல் ஏறி வரும் மூவின மெய்யின் மேலும் ஏறி வரும். பெயர் வேறுபாடு இல்லை.

● 51. ஐகாரக் குறுக்கமாவது (Shortened 'Ai' 'ஐ' யாது?

'ஐ' என்னும் எழுத்து, தன்னைக் குறிக்கும் பொழுதும், அளபெடுக்கும் பொழுதும் தன் இரண்டு மாத்திரைகளில் குறையாமல் ஒலிக்கும். மற்றை இடங் களில், சொல்லுக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும்பொழுது தன் ஓசையில் குறைந்து ஒலிக்கும். இதுவே, ஐகாரக் குறுக்கம் எனப்படும்.

(எ.டு) ஐப்பசி—மொழி முதலில் ஐ குறுகியது.

இடையன்—மொழி இடையில் ஐ குறுகியது.

குவளை—மொழி இறுதியில் ஐ குறுகியது.

● 52. ஔகாரக்குறுக்கம் (Shortened 'Au' 'ஔ') என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

'ஔ' என்னும் எழுத்து, தன்னைக் குறிக்கும்போதும் அளபெடுக்கும் போதும் தன் இரண்டு மாத்திரை நேரம் குறையாமல் முழுமையாக ஒலிக்கும். மற்ற இடங்களில்

Koviloor Digital Library

ஔ என்ற எழுத்து, தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்கும். இஃது ஔகாரக் குறுக்கம் எனப்படும்.

(எ.டு) ஔவையார், மௌவல், வௌவினான்.

இங்கு மொழி முதலில் 'ஔ' குறுகியது. இடை கடைகளில் 'ஔ' வாராது.

தற்சுட்டு அளபுஒழி ஐம்மு வழியும்
நையும்; ஔவும் முதலற்று ஆகும் [ந. சூ. 95]

53. மகரக்குறுக்கமாவது (Shortened 'M' 'ம்' யாது?

ணகர, னகர மெய்களின் பின்னும், வகரத்திற்கு முன்னும் வரும் மகரமெய் தனது அரை மாத்திரையிலிருந்து குறைந்து, கால் மாத்திரையாக ஒலிக்கும். இதனை மகரக்குறுக்கம் என்று கூறுவர்.

(எ.டு) மருண்ம், போன்ம், தரும் வளவன்.

54. ஆய்தக்குறுக்கம் என்றால் என்ன? விளக்குக.

தனிக்குறிலை அடுத்து நிற்கும் 'ல்' 'ள்' என்ற இரண்டும் தகரத்தை முதலாக உடைய சொற்களோடு இயையும் போது 'ஃ' ஆக மாறும். இந்த ஆய்தம் 'ஆய்தக் குறுக்கம்' எனப்படும்.

ணன முன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும் (ந. சூ. 96)

(எ.டு) கல் + தீது = கஃறீது

அல் + திணை = அஃறிணை

முள் + தீது = முஃடீது

லளவீற்று இயைபினாம் ஆய்தம் அஃகும் (ந. சூ. 97)

55. மொழிக்கு முதலாக வரும் எழுத்துகள் (Begining Letters of Words) யாவை?

Koviloor Digital Library

பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் உயிரோடு இணைந்த க், ச், த், ந், ப், ம், ய், வ், ஞ், ங் என்னும் பத்து மெய்யெழுத்துகளும் மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளாகும்.

(எ.டு) அன்பு, ஆறு, இயல்பு, ஈகை, உண்மை, ஊக்கம், எழுச்சி, ஏற்றம், ஐந்து, ஒப்புரவு, ஓதுதல், ஔவை.

கருத்து, காலம், கிளை, கீரி, குரல், கூடை, கெண்டை, கேடு, கையறு, கொடை, கோவில், கௌவை, (பொறாமை)

சங்கு, சாறு, சினம், சீறு, சுனை, சூழ்ச்சி, செம்மல், சேய்மை, சைகை, சொக்கு, சோழன், சௌகரியம்.

தமிழ், தாமரை, தினவு, தீவு, துணை, தூண், தெளிவு, தேற்றம், தையல், தொல்லை, தோற்றம், தௌவை, [மூதேவி]

நகை, நாகம், நிரை, நீலம், நுரை, நூல், நெற்று, நேமி, நைதல், நொச்சி, நோன்பு, நௌவி, [மான்]

பண்பு, பாம்பு, பிரிவு, பீடை, புகழ், பூதம், பெருமை, பேதமை, பையன், பொதுமை, போதும், பௌவம் (கடல்)

மணம், மாதர், மிகுதி, முதலை, மூத்தவன், மென்மை, மேன்மை, மையல், மொக்கு, மோர், மௌலி, (கிரீடம்)

வளமை, வானம், விரல், வீக்கம், வெளி, வேலி, வையம், வௌவு, (கவர்ந்துகொள்)

யவனர்-யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

ஞமலி (நாய்), ஞாயிறு, ஞிமிறு (வண்டு), ஞெகிழி (கொள்ளிக்கட்டை), ஞேயம் (நட்பு) ஞொள்கல் (இளைத்தல்)

Koviloor Digital Library

ஙனம் (இடத்தையும் தன்மையையும் உணர்த்தும்.)

பன்னீ ருயிரும் க ச த ந ப ம வ ய
ஞ ங வீ ரைந்துயிர் மெய்யும் மொழி முதல் (ந. சூ, 10)

56. மொழிக்கு முதலில் வாராத எழுத்துக்கள் யாவை?

வு, வூ, வொ, வோ என்ற நான்கும், யி, யீ, யெ, யே, யை, யொ என்ற ஆறும், ஞீ, ஞு, ஞூ, ஞை, ஞோ, ஞௌ என்ற ஆறும் மொழிக்கு முதலில் வாரா. தனி மெய்யெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாரா. 'ங' மாத்திரம் மொழிக்கு முதலில் வரும். 'ங' வருக்கத்தில் மற்ற எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாரா.

57. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் (Ending Letters of Words) யாவை?

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பதினொரு உயிரெழுத்துக்களும் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், என்னும் பதினொரு மெய்யெழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வருமாம்.

இறுதியில் உயிரெழுத்துகள் உள்ள சொற்கள்.

(எ.டு) சில (ல்+அ)—அ
பலா (ல்+ஆ)—ஆ
கிளி (ள்+இ)—இ
தீ (த்+ஈ)—ஈ
நொ (ந்+ஒ)—ஒ
போ (ப்+ஓ—ஓ)
பாட்டு (ட்+உ)—உ
பூ (ப்+ஊ)—ஊ
சே (ங்+ஏ)—ஏ
நகை (க்+ஐ)—ஐ
வெள (வ்+ஔ)—ஔ

இறுதியில் மெய்யெழுத்துகள் உள்ள சொற்கள்.

உரிஞ் (உராய்)	இன்பம்	பார்	தமிழ்
கண்	தேன்	பால்	நாள்
வெரிந் (முதுகு)	பாய்	தெவ் (பகை)	

ஆவி ஞணநமன யரலவழள மெய்
சாயும் உகரம் நாலாறும் ஈறே (ந. சூ. 70)

Koviloor Digital Library

● 58. மொழிக்கு இறுதியில் வாரா எழுத்துகள் யாவை?

'க், ச், ட், த், ப், ற்' என்ற ஆறு வல்லின மெய்களும் 'ங்' என்ற ஒரு மெல்லின மெய்யும் மொழிக்கு இறுதியில் வாரா. 'எ' என்ற உயிரெழுத்தும் மொழிக்கு இறுதியில் வாராது.

● 59. மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் வாரா எழுத்துகள் யாவை?

ட், ற் என்னும் இரு மெய்யெழுத்துகளும் மொழிக்கு முதலிலும் வாரா; மொழிக்கு ஈற்றிலும் வாரா.

● 60. போலி (Interchange of Letters) என்றால் என்ன?

ஒரு சொல்லில் ஓர் எழுத்து நிற்கும் இடத்தில் அதற்கு ஈடாக மற்றோரெழுத்து வந்து நின்றாலும், பொருள் வேறுபடாமல் ஒத்திருக்குமாயின் அதனைப் போலி என்பர்.

● 61. போலி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

போலி முவகைப்படும். அவை 1. முதற்போலி 2. இடைப்போலி, 3. கடைப்போலி என்பன.

குறிப்பு : ஒரு சொல்லில் முதலில் வருவது முதற் போலி; இடையில் வருவது இடைப்போலி; ஈற்றில் வருவது கடைப்போலி.

● 62. முவகைப் போலிகளுக்கும் எடுத்துக் காட்டுத் தருக.

முதற்போலி (Initial Interchange)	இடைப்போலி (Medial Interchange)
மஞ்சு–மைஞ்சு	அமச்சு–அமைச்சு
மயல்–மையல்	இலஞ்சி-இலைஞ்சி
பசல்–பைசல்	அரயர்–அரையர்

Koviloor Digital Library

கடைப்போலி (Final Interchange)

மரம்	—மரன்	கலம்	—கலன்
நிலம்	—நிலன்	வளம்	—வளன்
வண்டு	—வண்டர்	சுரும்பு	—சுரும்பர்
சிறகு	—சிறகர்	பந்தல்	—பந்தர்
சாம்பல்	—சாம்பர்	திறம்	—திறல்
மறம்	—மறல்	பக்கம்	—பக்கல்
கூவம்	—கூவல்.		

● 63. எழுத்துச் சாரியை என்றால் என்ன? எழுத்துகள் சாரியை பெற்றுவரும் விதத்தை விளக்குக.

செய்யுளில் அ, ஆ, க், ஐ என அமைத்துப் பாடுவது இயலாது. அவற்றை அகரம், ஆகாரம், க, ஐகான் என்று வழங்குதல் மரபு. கரம், காரம், கான் என்பன எழுத்துகளை உணர்த்துவதற்காகச் சேர்க்கப்பட்ட இடைச் சொற்கள். இவற்றிற்குத் தனியாகப் பொருள் ஏதும் இல்லை. எழுத்துக்களைச் சார்ந்து நிற்பதனால் எழுத்துச் சாரியை எனப்படும்.

[எ.டு] 1. மெய்யெழுத்துகள் அகரச்சாரியை பெறும். க்-க; ச்-ச.

2. உயிர் நெடில் - காரச்சாரியை பெறும். ஆ-ஆகாரம்; ஔ-ஔகாரம்.

3. ஐ, ஔ-காரம், கான் சாரியைகள் பெறும். ஐகாரம், ஐகான். ஔகாரம், ஔகான்.

4. உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்-கரம், காரம், கான் சாரியைகள் பெற்றுவரும் அகரம்,அகாரம், அஃகான், மகரம், மகாரம், மஃகான் என்று வரும்.

மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்
ஐ ஔக் கானும் இருமைக் குறிலிவ்
விரண்டொடு காரமும் சாரியை பெறும்பிற (ந. சூ. 126)

Koviloor Digital Library

2. சொல் (Etymology on Words)

6 . சொல்லாவது [Word] யாது?

ஓர் எழுத்து, தனித்து நின்றேனும் இரண்டு முதலாகத் தொடர்ந்து நின்றேனும் பொருள் தருமானால்— அது சொல் எனப்படும். (எழுத்து தனித்து நின்றும் தொடர்ந்து நின்றும் பொருள் தராதன சொல்லாக மாட்டா.)

பதம், சொல், மொழி, கிளவி என்பன ஒரே பொருள் உடையன.

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் அதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி இயலும் என்ப. (ந. சூ. 128)

65. பதம் எத்தனை வகைப்படும்?

பகாப்பதம், பகுபதம் என்று பதம் இரண்டு வகைப்படும்.

66. பகாப்பதம் (Indivisible Word or Root Word) என்பது யாது?

பகுத்துக் காண்பதால் பயனற்ற (பொருள் இல்லாத) அல்லது பகுக்க முடியாத சொற்களே பகாப்பதம் எனப்படும்.

[எ.டு] மண், விண், காற்று, நீர், நெருப்பு— பெயர்ப் பகாப்பதம்.

நட, வா, போ, தின், உண்—வினைப்பகாப்பதம்.
மன், கொல், போல், மற்று—இடைப்பகாப்பதம்.
சால, உறு, தவ, நனி, கடி—உரிப்பகாப்பதம்.

பகுப்பால் பயனற்று இடுகுறி யாகி
முன்னே ஒன்றாய் முடிந்தி யல்கின்ற
பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம் (ந. சூ. 131)

Koviloor Digital Library

67. பெயர்ப்பகுபதம் எவற்றின் அடியாகப் பிறக்கும்? வகைக்கோர் எடுத்துக்காட்டுத் தருக.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறின் அடிப்படையில் பெயர்ப்பகுபதம் பிறக்கும்.

(எ.டு)

	அடிப்படை	சொல்	பொருள்
1.	பொருள்	பொன்னன்	பொன்னை உடையவன்
2.	இடம்	குளத்தூரான்	குளத்தூர் என்னும் ஊரைச் சேர்ந்தவன்
3.	காலம்	திருவோணத்தான்	திருவோணத்தில் தோன்றியவன்
4.	சினை	கண்ணன்	கண்ணால் சிறப்புடையவன்
5.	குணம்	கரியன்	கருநிறமுடையவன்
6.	தொழில்	வலைஞன்	வலைவீசும் தொழிலுடையவன்

68. வினைமுற்றுப் பகுபதங்களை விளக்கி எழுதுக.

வினைமுற்றுப் பகுபதங்களை, தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்கள், குறிப்பு வினைமுற்றுப் பகுபதங்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

(எ.டு) நடந்தான். நடக்கிறான். ,நடப்பான் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம்.

வளவன் [இப்போது] பொன்னன்—குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்.

விளக்கம் : காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்றுகள் தெரிநிலை வினைமுற்றுகள்; காலத்

Koviloor Digital Library

தைக் குறுப்பாகக் காட்டும் வினைமுற்றுகள் குறிப்பு வினைமுற்றுகள்.

● 69. கொடுக்கப்பட்டுள்ள பகுபதங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

1) பெயரெச்சப் பகுபதங்கள்

2) வினையெச்சப் பகுபதங்கள்

3) வினையாலணையும் பெயர்ப் பகுபதங்கள்

1. வந்த குதிரை
வருகின்ற குதிரை
வரும் குதிரை
} தெரிநிலைப் பெயரெச்சப் பகுபதங்கள்

கரிய குதிரை— குறிப்புப் பெயரெச்சம். இது காலம் காட்டவில்லை; என்றாலும் குறிப்பாகக் காலம் காட்டு கிறது.

2. படிக்க வந்தான்
படிக்க வருகிறான்
படிக்க வருவான்
} தெரிநிலைவினைப் பகுபதங்கள் இவைகொண்டு முடியும் வினை முற்றால் காலம் காட்டும்.

மெதுவாகப் பேசுக-குறிப்பு வினையெச்சப் பகுபதம்

3. விழுந்தவன் எழுந்தான்.
விழுகிறவன் வருந்துகிறான்
விழுபவன் அழுவான்
} தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதங்கள்.

● 70. பகுபதம் என்பது யாது?

ஒரு சொல்லைப் பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிக்க முடியுமானால் அந்தச் சொற் பகுபதமாகும். பெயர்ப் பகுபதம், வினைப்பகுபதம் என—பகுபதம் இரண்டு வகைப்படும்.

இடைச்சொற்களும், உரிச்சொற்களும் பகுபதமாகா.

பொருள் இடம் காலம் சினைகுணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே (ந. சூ. 132)

Koviloor Digital Library

● 71. பகுபத உறுப்புகள் யாவை?

பகுதி, விகுதி, இடைநிலை. சாரியை, சந்தி, விகாரம் ஆகிய ஆறும் பகுபதவுறுப்புகளாம்.

(எ.டு)

கூனி-கூன்+இ; கூன்-பகுதி, இ-விகுதி.

உண்டான்-உண்+ட்+ஆன்; உண்-பகுதி.

'ட்' இறந்தகால இடைநிலை, ஆன்-விகுதி.

உண்டனன்-உண்+ட்+அன்+அன்; உண்-பகுதி.

அன்-விகுதி, ட்-இறந்தகால இடைநிலை, அன்-சாரியை.

பார்த்தனன்-பார்+த்+த்+அன்+அன். பார்-பகுதி,

அன்-விகுதி, த்-இடைநிலை, அன்-சாரியை, த்-சந்தி.

நடந்தனன்-நட+த்+த்+அன்+அன்; நட-பகுதி.

அன்-விகுதி, த்-இறந்தகால இடைநிலை,

அன்-சாரியை, த்-சந்தி, த், (ந்) மாறியது விகாரம்.

விளக்கம் :

பகுதிக்கும் விகுதிக்கும் இடையே இருப்பது இடைநிலை. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே தோன்றுவது சந்தி. இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே தோன்றுவது சாரியை. சந்தியால் வரும் ஒரெழுத்து மற்றொன்றாகத் திரிவது விகாரம்.

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும் (ந. சூ. 133)

● 72. பகுதியாவது யாது?

ஒரு பகுபதத்தில் முதல் நிலையில் உள்ள, மேலும் பிரிக்க முடியாத பொருட்சிறப்பு உள்ள சொல்லே பகுதியாகும்.

Koviloor Digital Library

(எ.டு) உண்டான்-இதில் 'உண்' பகுதி.

தத்தம் பகாப்ப தங்களே பகுதியாகும் (ந. சூ. 134)

● 73. விகுதியாவது யாது?

ஒரு பகுபதத்தில் ஈற்றுநிலையில் உள்ள பால் காட்டும் .தன்மையோடு, சிறுபான்மை காலம் காட்டி வருகின்ற சொற்களே விகுதிகளாம்.

(எ-டு) உண்டான்—இதில் 'ஆன்' விகுதி.

● 74. பகுதியாக வரும் சொற்கள் யாவை?

பெயர், வினை, இடை, உரி என்ற நான்கு சொற்களும் பகுதியாக வரும்.

(எ.டு)

கூனி–இதில் 'கூன்' என்ற பெயர் பகுதியாயிற்று.

நடந்தான்-இதில் 'நட' என்ற வினை பகுதியாயிற்று.

போன்றான்-இதில் 'போல்' என்ற இடைச்சொல் பகுதியாயிற்று.

சான்றான்–இதில் 'சால்' என்ற உரிச்சொல் பகுதியாயிற்று.

● 75. சில பண்புப் பகுதிகளைக் கூறுக.

செம்மை, சிறுமை, சேய்மை, தீமை, வெம்மை, புதுமை, மென்மை, மேன்மை, உண்மை, நுண்மை, வெண்மை, கருமை, பசுமை, பொன்மை, பெருமை, அண்மை, நன்மை, தன்மை, பழமை, வண்மை, கீழ்மை, நொய்ம்மை, இன்மை, பருமை, இளமை, முதுமை, எளிமை, அருமை, குறுமை, நெடுமை, மடமை, புலமை, வெறுமை நடுமை முதலியன பண்புப் பகுதிகளாம்.

Koviloor Digital Library

76. பண்புப் பகுதிகள் எவ்வாறு விகாரப்படும்? விளக்கி எழுதுக.

1. ஈற்று 'மை' கெடுதல்,
2. இடையில் உள்ள 'உ' என்ற எழுத்து 'இ' ஆக மாறுதல்.
3. முதலெழுத்து நீளுதல்,
4. முதலில் உள்ள 'அ' என்ற எழுத்து 'ஐ' ஆக மாறுதல்,
5. பகுதியின் இடையில் ஒற்று மிகுதல்,
6. விகுதிக்கு முன்னே உள்ள மெய்யெழுத்துத் திரிதல்,
7. வருமொழி முதலில் உள்ள வல்லெழுத்துக்கு இனமான எழுத்து மிகுதல்,
8. இவை போன்ற மற்றும் சில.

இவ்வாறு பண்புப் பகுதிகள் விகாரப்படும்.

(எ.டு)

1. சிறுமை+பொருள்=சிறு+பொருள்=சிறுபொருள் இதில் ஈற்று 'மை' மாத்திரம் கெட்டது.
2. சிறுமை+அன்=சிறு+அன்=சிறி+அன்=சிறியன். இதில் ஈற்று 'மை' கெட்டு, உகரம் இகரமாகியது.
3. முதுமை+ஊர்=முது+ஊர்=முது+ஊர்=மூதூர். இதில் ஈற்று 'மை' கெட்டு முதலில் நின்ற உகரம் நீண்டது.
4. பசுமை+தார்=பசு+தார்=ப+தார்=பை+தார்= பைந்தார். இதில் ஈற்று 'மை' கெட்டு இடை 'சு' கெட்டு முதலில் நின்ற அகரம் 'ஐ' ஆகி மொழிக்கு இனமான 'ந்' தோன்றியது.

Koviloor Digital Library

இதில் 'சு' கெட்டது இவை போன்ற மற்றும் சில என்பதால்.

5. புதுமை + அமுது = புது + அமுது
புத்து + அமுது = முத்தமுது
இதில் ஈற்று 'மை' கெட்டு
இடையில் 'த்' என்று ஒற்று மிகுந்தது.

6. செம்மை + ஆம்பல் = செம் + ஆம்பல் = சேம் + ஆம்பல் = சேத் + ஆம்பல் = சேதாம்பல்.

இதில் ஈற்று 'மை' கெட்டு
முதலில் உள்ள 'செ' நீண்டு 'சே' ஆகி
'ம்' திரிந்து 'த்' ஆகியது.

ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்
தன்னொற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இணையவும் பண்பிற்கு இயல்பே. (ந. சூ. 135)

● 77. தெரிநிலை வினைக்குப் பகுதிகளாக வரும் சொற்களைப் பட்டியல் இட்டுக் காட்டுக.

நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்று சொல்லப்படுகிற இவையாவும் தெரிநிலை வினைச் சொல்லின் பகுதியாக வரும்.

நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரிஞ் உண்பொருந் திரும்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென்று
எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே (ந. சூ. 137)

Koviloor Digital Library

● 78. விகுதியாவது யாது?

பகுபதத்தின் இறுதியில் நிற்கும் உறுப்பு விகுதி யாகும். இதனை இறுதி நிலை என்றும் சொல்லுவர். பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இரண்டு சொற்களிலும் விகுதி உண்டு. திணை, பால், எண், இடம் போன்றவற்றை விகுதி காட்டி நிற்கும்.

● 79. பொதுவான விகுதிகள் யாவை?

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், அ, ஆ, கு, டு, து, று. என், ஏன், அல், அன், அம், ஆம், எம், ஏம், ஒம், ஓம், கும், டும், தும்,

ஐ, ஆய், இ, மின், இர், ஈர், ஈயர், க, ய என்பவும் இவை போன்ற பிறவும் பொதுவான விகுதிகளாம்.

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம் மார்
அ ஆ குடு துறு என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓ மொடு உம் மூர்
கட தற ஐ ஆய் இம் மின் இர் ஈர்
ஈயர் கயவும் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே (ந. சூ. 140)

● 80. ஆண்பால் விகுதிகள் யாவை?

அன், ஆன் என்பன ஆண்பாலைக் காட்டும் விகுதிகள்.

[எ.டு] வருகின்றனன், வருகிறான்.

அன் ஆன் இறுமொழி ஆண்பால் படர்க்கை (ந. சூ. 325)

● 81. பெண்பால் விகுதிகள் யாவை?

அள், ஆள் என்பன பெண்பாலைக் காட்டும் விகுதிகள்.

(எ.டு) வருகின்றனள். வருகிறாள்

அள் ஆள் இறுமொழி பெண்பால் படர்க்கை [ந. சூ. 326]

Koviloor Digital Library

● 82. பலர்பால் விகுதிகள் யாவை?

அர், ஆர், ப, மார், என்பன பலர்பால் விகுதிகள்.

[எ.டு] வந்தனர், வந்தார், உண்ப, உண்மார்.

அர் ஆர் பவ்வூர் அகரமார் ஈற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிவே (ந. சூ. 327)

● 83. ஒன்றன்பால் விகுதிகள் யாவை?

து, று என்பன ஒன்றன்பால் விகுதிகள்.

(எ.டு) வந்தது, போயிற்று.

● 84. பலவின்பால் விகுதிகள் யாவை?

அ, ஆ என்பன பலவின்பால் படர்க்கையில் வினைமுற்று விகுதிகளாக வரும்.

(எ.டு) நடந்தன, நடவா.

● 85. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் யாவை?

அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும் என்பன தன்மைப் பன்மை விகுதிகளாம்,

(எ.டு) நடப்பம்-அம். நடப்பாம்-ஆம். நடப்பெம்-எம். நடப்பேம்-ஏம். நடப்போம்-ஓம். நடக்கும்-கும். உண்டும்-டும். நடந்தும்-தும். சேறும்-றும்.

● 86. முன்னிலை வினைமுற்று விகுதிகள் யாவை?

ஐ. ஆய்—இ—முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்.

(எ.டு) நடந்தனை—ஐ. நடந்தாய்—ஆய்.
நடத்தி—இ.

மின்-இர்-ஈர் என்பன முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்.

(எ.டு) நடமின்-மின். நடந்தனிர்-இர், நடந்தீர்-ஈர்.

Koviloor Digital Library

● 87. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

க—இய—ஈயர் என்பன வியங்கோள் வினைமுற்று விகுதிகள்.

[எ-டு] வாழ்க. வாழிய. நிலீயர்.

● 88. பெயர் விகுதிகள் யாவை?

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், து, இ என்னும் பத்து விகுதிகளோடு மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அள், ன், ள், ர். வ் என்னும் பதின்மூன்றும் பிறவும் பெயர் விகுதிகளாம்.

பொன்னன்—அன், வானத்தான்—ஆன்

குழையள்—அள், வானத்தாள்—ஆள்

நல்லர்—அர், நல்லார்—ஆர், தேவிமார்—மார்

குழையன—அ, யாது—து, பொன்னி—இ

வடமன்—மன், கோமான்—மான்,

கோக்கள்—கள், அவை—வை, எந்தை—தை,

எங்கை—கை, எம்பி—பி, எம்முன்—முன்

தோன்றல்—அல், பிறன்—அன், பிறள்—ள்

பிறர்—ர், அவ்—வ்.

● 89. தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் யாவை?

தெரிநிலைப் பெயரெச்சத்திற்கு அ, உம், என்னும் இரண்டு விகுதிகள் மட்டுமே ஈறாக அமைந்து வரும்.

(எ.டு) செய்த—அ, செய்கின்ற அ, செய்யும்—உம்

● 90. குறிப்புப் பெயரெச்ச விகுதியாவது யாது?

குறிப்புப் பெயரெச்ச விகுதி 'அ' மட்டுமேயாகும்.

Koviloor Digital Library

உம் விகுதி இடைநிலை ஏலாது; தானே எதிர்காலம் காட்டும். எனவே, குறிப்புப் பெயரெச்சத்திற்கு உம் விகுதியாகாது.

கரிய—அ, நல்ல— அ.

● 91. தெரிநிலை வினையெச்ச விகுதிகள் யாவை?

உ, இ, ய், பு, ஆ, ஊ, என, அ, இன்
ஆல், கால், ஏல், எனின், ஆயின், எனும்
கு, இய, இயர், வான், பான், பாக்கு
கடை, வழி, இடத்து, உம், மல், மை, மே
என்னும் இருபத்தெட்டும் பிறவும் தெரிநிலை
வினையெச்ச விகுதிகளாக வரும்.

(எ.டு) நடத்து—உ, ஓடி—இ, போய்—ய்
உண்பு—பு, உண்ணா—ஆ, உண்ணூ—ஊ
உண்ணென—என, உண்ண —அ
உண்ணின்—இன், உண்டால்—ஆல்
உண்டக்கால்—கால், உண்டானேல்—ஏல்
உண்டானெனின்—எனின்
உண்டானாயின்—ஆயின்
உண்டானேனும்—ஏனும், உணற்கு—கு
உண்ணிய—இய, உண்ணியர்—இயர்
வருவான்—வான், உண்பான்—பான்
உண்பாக்கு பாக்கு, செய்தக்கடை—கடை
செய்தவழி -வழி, செய்தவிடத்து—இடத்து
காண்டலும்—உம், உண்ணாமை—மை
உண்ணாமல்—மல், உண்ணாமே—மே.
(இவை எதிர்மறை)

● 92. குறிப்பு வினையெச்ச விகுதிகள் யாவை?

அ, றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து என்னும் ஒன்பதும் பிறவும் குறிப்பு வினையெச்ச விகுதிகளாம்.

Koviloor Digital Library

[எ.டு] மெல்ல—அ, அன்றி—றி, அல்லது—து,
அல்லால்—ஆல், அல்லாமல்—மல்
அல்லாக்கால்—கால், அல்லாக்கடை—கடை
அல்லாவழி—வழி, அல்லாவிடத்து—இடத்து.

● 93. தொழிற்பெயர் விகுதிகள் யாவை?

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆணை, மை, து, ஆல், இல், மதி முதலியன தொழிற்பெயர் விகுதிகள்.

(எ.டு) நட+தல்=நடத்தல் — போ+கு=போக்கு
ஆடு+அல்=ஆடல் — நட+பு=நடப்பு
வாடு+அம்=வாட்டம் — வா+உ=வரவு
கொல்+ஐ=கொலை — மற+தி=மறதி
வாழ்+கை=வாழ்க்கை — பயில்+சி=பயிற்சி
பார்+வை=பார்வை — புரள்+சி=புரட்சி
விக்கு+உள்=விக்குள் — கல்+வி=கல்வி
கோள்+பாடு=கேட்பாடு — சா+காடு=சாக்காடு
பாய்+து=பாய்த்து — தோற்று+அரவு=தோற்றரவு
கட்டு+அடம்=கட்டடம் — பொறு+மை=பொறுமை
வெகுள்+இ=வெகுளி — தழுவு+ஆல்=தழால்
ஏற்று+மதி=ஏற்றுமதி — எழு+இல்=எழில்

● 94. பண்புப் பெயரின் விகுதிகள் யாவை?

மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், பம், நர், து என்பன பண்புப் பெயர் விகுதிகளாம்.

(எ.டு) நன்மை—மை, தொல்லை—ஐ, மாட்சி—சி
மாண்பு—பு, மழவு—உ, நன்கு—கு, நன்றி—றி
நன்று—று, நலம்—அம், நன்னர்—நர்.

● 95. பிறவினை விகுதிகள் யாவை?

வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் எட்டும் பிறவினை விகுதிகளாக வரும்.

Koviloor Digital Library

(எ.டு) செய்வி -- வி, நடப்பி—பி, போக்கு—கு
பாய்ச்சு—சு, உருட்டு—டு, நடத்து—து
எழுப்பு—பு, பயிற்று—று.

● 96. காலம் காட்டும் உறுப்புக்கள் யாவை?

இடைநிலையும், சில பகுதிகளின் திரிபும், சில விகுதிகளும் காலம் காட்டும்.

● 97. இடைநிலையாவது யாது?

பகுதியையும் விகுதியையும் பகுத்துப் பார்த்தபின் இடையில் நிற்பது எதுவோ, அதுவே இடைநிலையாகும். பெயர்ச் சொல்லில் வரும் இடைநிலை காலம் காட்டாது. வினைச்சொல்லின் இடைநிலை காலம் காட்டும்.

பெயர்— வலைஞன் — வலை+ஞ்+அன் — ஞகரம் இடைநிலை. வினை—உண்டான் -- உண்+ட்+ஆன்— டகர இடைநிலை இறந்தகாலம் காட்டியது.

● 98. இறந்தகாலம் காட்டும் இடைநிலைகள் யாவை?

தகர, டகர, றகர (ட்த்ற்) மெய்களும், இன் என்பதுமாக நான்கு இடைநிலைகளும் இறந்த காலத்தை ஐந்து பால்களிலும், மூவிடத்திலும் காட்டும்.

[எ.டு] 1. நடந்தான்—நடந்தாள்—நடந்தார்.
நடந்தது - நடந்தன—தகரமெய்.
2. உண்டான்—உண்டாள்—உண்டார்
உண்டது—உண்டன—டகரமெய்.
3. கற்றான்-வென்றான்-வென்றார்-றகரமெய்.
4. உறங்கினாள்—உறங்கினார்—இன்
5. போயினான்—போ+இன்+ஆன் —இன்.
6. போயது—போ+ய்+அ+து—ய்.
7. என்றிசினோர்—என்று+இசின்+ஓர்—இசின்

Koviloor Digital Library

எனவே த், ட், ற், இன், ய், இசின் என்பவை இறந்த காலம் காட்டும் இடைநிலைகளாய் வரும் என நாம் அறியலாம்.

தடற ஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தருந்தொழில் இடைநிலை (ந. சூ. 142)

99. நிகழ்காலம் காட்டும் இடைநிலைகள் யாவை?

கிறு, கின்று, ஆநின்று என்ற மூன்றும் நிகழ்காலம் காட்டும் இடைநிலைகளாகும்.

(எ.டு) வருகிறான், வருகின்றான். வாராநின்றான்.

ஆநின்று கின்று கிறுமு விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு தறைவினை யிடைநிலை. (ந. சூ. 143)

100. எதிர்காலம் காட்டும் இடைநிலைகள் யாவை?

ப், வ், க் என்ற மூன்றும் எதிர்காலம் காட்டும் இடைநிலைகளாம்.

[எ.டு) படிப்பான், செய்வான், உரைக்கேன்.

ப வ் வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை இடைநிலை யாமிவை சிலஇல [ந. சூ. 144)

101. பெயரிடை நிலையாவது யாது?

பகுதிக்கும், விகுதிக்கும் இடையே இரண்டையும் இணைப்பதற்குரிய இணைப்பாக சில எழுத்துகள் வருவதுண்டு. அவை பெயர்ச்சொற்களை உண்டாக்க உதவுகின்றன அவற்றைப் பெயரிடைநிலை என்பர்.

(எ.டு)	அறிஞன், கவிஞன்	— ஞ்
	ஓதுவார், பாடுவார்	— வ்
	இடைச்சி, வலைச்சி	— ச்
	வண்ணாத்தி, பாணத்தி	— த்
	பொருநன், அனுப்புநர்	— ந்

பெயரிடை நிலையாக ஞ், வ், ச், த், ந் ஆகிய எழுத்துகள் வருகின்றன.

Koviloor Digital Library

● 102. பகுதி காலம் காட்டுதலை விளக்குக?

கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்யீற்றுச் சில பகுதிகள்— தம் ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டும்.

(எ.டு)

புகு	—	புக்கான்	இவை பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டின.
தொகு	—	தொக்கான்	
நகு	—	நக்கான்	
தொடு	—	தொட்டான்	
நடு	—	நட்டான்	
விடு	—	விட்டான்	
உறு	—	உற்றான்	
பொறு	—	பெற்றான்	

● 103. காலம் காட்டு விகுதிகள் யாவை?

1. று, றும், து, தும் என்ற விகுதிகள் இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டுவன.

(எ.டு) சென்று (சென்றேன்); சென்றும்(சென்றோம்)
சேறு (செல்வேன்); சேறும் (செல்வோம்)
வந்து (வந்தேன்); வந்தும் (வந்தோம்)
வருது (வருவேன்); வருதும் (வந்தோம்)

2. டு, டும் என்ற விகுதிகள் இறந்த காலம் காட்டும்.

(எ.டு) உண்டு (உண்டேன்); உண்டும் (உண்டோம்)

3. கு, கும் என்ற விகுதிகள் எதிர்காலம் காட்டும்.

(எ.டு) உண்கு (உண்பேன்); உண்கும் (உண்போம்)

4. ஏவல் விகுதிகள், வியங்கோள் விகுதிகள், மின், இ, மார் என்பன எதிர்காலம் காட்டும்.

(எ.டு) உண்ணாய், உண்ணீர், உண்ணும்— ஏவல் விகுதிகள் எதிர்காலம் காட்டின.

Koviloor Digital Library

வாழ்க, வாழிய, வாழியர்—வியங்கோள் விகுதிகள் எதிர்காலம் காட்டின.

உண்மின்—'மின்' விகுதி எதிர்காலம் காட்டியது.

சேறி செல்வாய்—'இ' விகுதி எதிர்காலம் காட்டியது.

உண்மார் உண்பார்-- 'மார்' விகுதி எதிர்காலம் காட்டியது.

5. 'ப' என்னும் விகுதி இறந்தகாலத்தையும், எதிர் காலத்தையும் காட்டும்.

(எ.டு) உண்ப (உண்டார், உண்பர்)

6. 'உம்' என்னும் விகுதி நிகழ்காலத்தையும் காட்டும்.

[எ.டு] உண்ணும் (உண்ணுகிறான், உண்ணுவான்)

7. எதிர்மறை விகுதிகள் முக்கர்லத்தையும் காட்டும்.

[எ.டு] உண்ணா—'ஆ' என்ற எதிர்மறை விகுதி இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலத்தையும் காட்டியது.

றவ்வோடு உகர உம்மைநிகழ் பல்லவும்
தவ்வொடு இறப்பும் எதிர்வும் டவ்வொடு
கழிவும் கவ்வொடு எதிர்வும் பாந்தம்
செலவோடு வரவும் செய்யும் நிகழ்பு எதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே. (ந. சூ. 145)

● 104. தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி இவற்றை விளக்கி எழுதுக.

1. ஒரு சொல்லாய் வந்து, ஒருபொருள் தருவது தனிமொழி.

2. இரண்டு முதலிய சொற்கள் தொடர்ந்து பல பொருள் தருவது தொடர்மொழி.

3. ஒரு சொல்லாய் நின்று ஒரு பொருள் தரும்மொழி, பல சொல்லாய்ப் பிரிந்து நின்று, பலபொருள் தருவது பொதுமொழி.

Koviloor Digital Library

[எ.டு] மண், மரம், கடல்—தனிமொழி.

கண்ணன் வென்றான் —தொடர்மொழி.

வேங்கை, எட்டு—பொதுமொழி.

வேங்கை ஒருவகை விலங்கு. எட்டு ஓர் இலக்கம். இவ்வாறு வருவது தனிமொழியாகும். இந்தத் தனி மொழியே, வேம்+கை=வேகின்ற கை என்றும் எள்+து=எள்ளை உண் என்றும் பிரிந்து நின்று பொருள் தருகிறது.

இவ்வாறு, தனிமொழியாகவும் தொடர்மொழி யாகவும் பொருள் கொள்வதற்கு இடம்தரும் மொழி, பொதுமொழி ஆகும்.

ஒருமொழி ஒருபொருள னவாம்; தொடர்மொழி
பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன. (ந. சூ. 260)

● 105. சொற்கள் (Words) எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச் சொல் என்று சொற்கள் நான்கு வகைப்படும். இந்த நான்கு சொற்களும்—வழங்கும் முறை பற்றி இயற்சொல் என்றும், திரிசொல் என்றும் இரண்டு வகையாகும். திசைச்சொல், வடசொல் என்று மேலும் இரண்டு வகை யான சொற்கள் உண்டு.

● 106. இயற்சொல், திரிசொல் இவற்றை விளக்கி எடுத்துக் காட்டுகள் தருக.

இயற்சொல் [Easy words] செந்தமிழ்ச் சொல்லாய் மாறுபாடு இல்லாமல் கற்றவர்க்கும், கல்லாதவர்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.

[எ.டு] மண், நீர், மரம்—பெயரியற்சொல்.

சென்றான், உண்டான்—வினையியற்சொல்.

Koviloor Digital Library

கண்ணனால்—ஆல்—வேற்றுமையுருபு—இடையியற்சொல்.

சாலவும் நன்று, கடிது செல்க—உரியியற்சொல்.

செந்தமி ழாகித் திரியா தியார்க்கும்
தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல் [ந.சூ. 271]

திரிசொல் [Literary words] ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களாகவும், பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்லாகவும் அமைந்து, கற்றவர்கள் மட்டுமே முயன்று பொருள் உணர்ந்து கொள்ளக் கூடியதாய் அமைந்த சொற்கள் திரிசொற்களாகும்.

[எ.டு] வரை, ஓங்கல், கோடு, பிறங்கல்—மலை என்னும் பொருளை இந்தச் சொற்கள் உணர்த்தும். இவை ஒரு பொருள் உணர்த்தும் பல திரிசொற்கள்.

கடி—காப்பு, கூர்மை, மணம், விரைவு என்று பொருள் உணர்த்தும். கடி என்பது பலபொருள் உணர்த்தும் ஓர் திரிசொல்லாகும்.

ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும் (ந. சூ. 272)

107. வடசொல் (Sanskrit words) என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

சமஸ்கிருத மொழிச் சொற்கள் தமிழில் வந்து, தமிழின் இயல்புக்கேற்ப வழங்கி வருகின்றன. வடசொல் தற்சமம் தற்பவம் என்று இருவகைப்படும்.

தற்சமம் : தத் + சமம் = அதற்குச் சமமானது. தமிழிலும், வடமொழியிலும் பொதுவாக உள்ள எழுத்துகளால் அமையப் பெற்ற வடமொழிச்சொல் தமிழில் வந்து வழங்கும்போது எத்தகைய மாற்றமும் இல்லாமல் இயல்பாய் வழங்கும். இது தற்சமம் எனப்படும்.

Koviloor Digital Library

(எ.டு) கமலம், காரணம், குங்குமம்.

தற்பவம் : தற்+பவம் = அதிலிருந்து பிறந்தது. சமஸ்கிருதத்துக்கே உரிய சிறப்பு எழுத்துக்களாலான சமஸ்கிருதச் சொல் தமிழில் வந்து வழங்கும் போது தமிழ் இயல்புக்கேற்ப மாறுபடும். இவ்வாறு மாற்றமடைந்து வழங்குவது தற்பவம் எனப்படும்.

(எ.டு) விஷம்—விடம். பங்கஜம்—பங்கயம்.

பொதுவெழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல் [ந. சூ. 274]

● 108. திசைச்சொல் [Loan words apart from Sanskrit] என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

செந்தமிழ் நிலத்தைச் சார்ந்த பன்னிரண்டு நாடுகளில் வழங்கும் சொற்களும், பிறமொழிச்சொற்களும், ஆங்கிலம் முதலான அயல்நாட்டுச் சொற்களும் தமிழ் மொழியில் வந்து அவ்வப் பொருளிலேயே வழங்கி வருகின்றன. இவை திசைச் சொற்களாம்.

(எ.டு) பெற்றம்—பசு : தென்பாண்டிச் சொல்.

அச்சன்—தந்தை : குடநாட்டுச் சொல்.

சிக்கினான்—அகப்பட்டான் : கன்னடச் சொல்.

சாவி, அலமாரி—போர்த்துக்கீசியச் சொல்.

பஸ்—பேருந்து, மார்க்கெட்—சந்தை

ஆங்கிலச் சொற்கள்.

சிப்பந்தி, சிபாரிசு—பாரசீகச் சொற்கள்.

ஆசாமி, அனாமத்து—அரபுச் சொற்கள்.

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப [ந. சூ. 273]

Koviloor Digital Library

● 109. பெயர்ச்சொல் [Noun] என்றால் என்ன? விளக்கி எழுதுக.

இடுகுறியாகவோ, காரணமாகவோ ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல்லாகும். பெயர்ச்சொல் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்தி வரும்; வேற்றுமையேற்கும்; காலம் காட்டாது.

● 110. பெயர்சொல் எத்தனை வகைப்படும்? எடுத்துக் காட்டுகள் தருக.

பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவை பொருட் பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப் பெயர், தொழிற்பெயர் என்பனவாம்.

[எ.டு] 1. மனிதன், விலங்கு, மரம்—பொருட்பெயர். (Nouns of Things)

2. நாடு, ஊர், வீடு—இடப்பெயர் [Nouns of Places]

3. ஆண்டு, திங்கள், கிழமை, நாள்—காலப்பெயர். [Nouns of Days, years etc.)

4. தலை, கை, கால், விரல்—சினைப்பெயர். [Nouns of Parts of a whole]

5. செம்மை, கருமை, வட்டம்—பண்புப்பெயர். (Abstract Noun or Noun of qualities)

6. படிப்பு, வாழ்வு, ஆட்டம்—தொழிற்பெயர். [Verbal Noun or Noun of Actio n]

● 111. பெயர்ச்சொல் இடவகையால் எத்தனை வகைப்படும்?

பெயர்ச்சொல் இடவகையால் மூவகைப்படும்.

1. தன்மைப் பெயர் : நான், யான்.
தன்மைப்பன்மைப் பெயர்—நாம், யாம், நாங்கள், யாங்கள்.

2. முன்னிலைப் பெயர் : முன்னிலை ஒருமைப்பெயர்—நீ
முன்னிலைப் பன்மைப்பெயர்—நீர், நீயிர், நீவிர், நீங்கள், எல்லீர்.

Koviloor Digital Library

3. படர்க்கைப் பெயர் :

ஆண்பாற் பெயர்கள் - அவன், கண்ணன்.

பெண்பாற் பெயர்கள்—அவள், கோதை.

பலர்பாற் பெயர்கள்—அவர், மாணவர்.

ஒன்றன்பாற் பெயர்கள்—அது, மாடு, மரம்.

பலவின்பாற் பெயர்கள்—அவை பசுக்கள், மாடுகள்

● 112. இடுகுறிப் பெயரென்றால் (Arbitrary Noun) என்ன? விளக்கி எழுது.

எந்தப் பொருளுக்கு எந்தச் சொல்லை வழங்க, எந்தக் காரணத்தையும் நம்மால் கூற முடியவில்லையோ, அந்தப் பெயர்—இடுகுறிப் பெயர் எனப்படும்.

[எ.டு] கல்—மண். நாய்—மனிதன்.

● 113. காரணப் பெயர் [Derivative Noun] என்றால் என்ன?

ஏதேனும் ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கும் பெயர் காரணப் பெயராகும்.

அணியப்படுவதாகிய காரணம் பற்றி அணி காரணப் பெயராயிற்று.

[எ.டு] பறவை, வளையல், பூ, நடிகர்.

● 114. காரண இடுகுறிப் பெயர் என்றால் என்ன?

காரண இடுகுறிப் பெயரில் காரணம் இருக்கும். மற்றொரு வகையில் அப்பெயர் காரணமாகாது, இடுகுறிப் பெயராகவும் இருக்கும். இப்படி, காரணப் பெயராகவும், இடுகுறிப் பெயராகவும் வரும் சொல் காரண இடுகுறிப் பெயர் என்று வழங்கப்படும்.

[எ.டு] காற்றாடி. முள்ளி, முக்கண்ணன்.

● 115. திணை (Clase) என்பதன் பொருள் யாது?

Koviloor Digital Library

திணை என்பதற்குக் குலம், அல்லது ஒழுக்கம், பிரிவு என்று பொருள்.

● 116. திணை எத்தனை வகைப்படும்?

திணை உயர்திணை எனவும், அஃறிணை எனவும் இருவகைப்படும்.

● 117.. உயர்திணையாவது [Rationals) யாது?

மக்களையும், தேவரையும், நரகரையும் குறிக்கும் சொற்கள் உயர்திணையாகும்.

[எ.டு] முருகன், கமலம், பாண்டியன், நம்பி.

● 118. அஃறிணையாவது [Irrationals) யாது?

மக்களையும் தேவரையும் தவிர மற்றவைகள் யாவற்றையும் குறிக்கும் சொல் அஃறிணையாகும்.

[எ.டு] நாய், வீடு, மரம்.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை [ந. சூ 261]

● 119. பால் (Gender) எத்தனை வகைப்படும்? என்னென்ன?

பால் ஐந்து வகைப்படும். அவையாவன:

1. ஆண்பால், 2. பெண்பால், 3. பலர்பால், 4. ஒன்றன்பால் 5. பலவின்பால்.

● 120 உயர்த்திணைக்குரிய பால்கள் யாவை?

உயர்திணைக்குரிய பால்கள் 1. ஆண்பால், 2. பெண்பால், 3. பலர்பால்.

● 121. ஆண்பால் [Masculine Gender]என்பது யாது?

ஆடவரைக் குறிக்கும் சொல் ஆண்பாற் சொல் ஆகும்.

[எ.டு] நல்லான், முருகன், வடவன், கோமான்.

Koviloor Digital Library

குறிப்பு : ஆண்பாற் பெயர்கள் பெரும்பாலும் அன், ஆன் என்று முடியும்.

● 122. பெண்பால் (Feminine Gender) என்பது யாது?

பெண்டிரைக் குறிக்கும் சொல் பெண்பாற் சொல் ஆகும்.

(எ.டு) நல்லாள், அவள்.

குறிப்பு : பெண்பாற் பெயர்கள் பெரும்பாலும் அள், ஆள் என முடியும்.

● 123. பலர்பால் (Common Gender) என்பது யாது?

பல ஆடவர்களையும் பல பெண்களையும் தொகுதியாகக் குறிக்கும் சொல் பலர்பால் ஆகும்.

[எ.டு] பலர், மங்கையர், பெரியோர்.

குறிப்பு : 1. ஆண்கள் மாத்திரம் உள்ள தொகுதி.
2. பெண்கள் மாத்திரம் உள்ள தொகுதி
3. ஆண்களும், பெண்களும் உள்ள தொகுதி ஆகிய மூன்றுமே பலர் பால் ஆகும்.

● 124. அஃறிணைக்கு உரிய பால்கள் யாவை?

அஃறிணைக்கு உரிய பால்கள் 1. ஒன்றன்பால் [Neuter Singular) 2. பலவின்பால் (Neuter Plural]

● 125. ஒன்றன்பால் என்றால் என்ன?

ஒரே ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல் ஒன்றன்பால் ஆகும்.

[எ.டு] அது, இது, எது, மரம்.

● 126. பலவின்பால் (Neuter Plural) என்றால் என்ன?

பலவற்றைக் குறிக்கும் பெயர்ச்சொல் பலவின்பால் ஆகும்.

Koviloor Digital Library

[எ.டு] அவை, இவை, எவை, மரங்கள்.

● 127. பால்பகா அஃறிணைப் பெயர்கள் என்றால் என்ன?

இன்ன பால் என்று பிரித்துச் சொல்ல முடியாத பெயர்ச்சொற்கள் பால்பகா அஃறிணைப் பெயர்கள் எனப்படும்.

குறிப்பு : ஒன்றன் பாலைக் காட்டும் 'து' விகுதியையும் பலவின் பாலைக் காட்டுகின்ற 'வை, அ, கள்' என்னும் விகுதிகளுள் ஒன்றையும் பெறாத அஃறிணைப் பெயர்கள், பால்பகா அஃறிணைப் பெயர்கள் ஆகும். இவை ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் பொதுவாய் வரும்.

(எ.டு) குதிரை, மாடு, பறவை, மரம்.

● 128. ஒருமை (Singular) என்றால் என்ன?

ஒரே ஒரு பொருளைக் குறிக்கும் சொல் ஒருமை ஆகும்.

[எ.டு] மரம், மனிதன், குதிரை.

● 129. பன்மை (Plural) என்றால் என்ன?

பல பொருள்களைக் குறிக்கும் சொல் பன்மை ஆகும்.

[எ.டு] மரங்கள், குரங்குகள், கதிர்கள்.

குறிப்பு : ஒன்று அல்லாத எல்லாம் பலவாகும்.

ஒன்றே பலவென்று இருபாற்று அஃறிணை. (ந. சூ. 263)

● 130. ஒருமைக்குரிய பால்கள் யாவை?

ஒருமைக்கு உரிய பால்கள் 1. ஆண்பால், 2. பெண்பால், 3. ஒன்றன்பால் என்ற மூன்றுமே ஆகும்.

[எ.டு] ஒருவன், ஒருத்தி, ஒன்று.

Koviloor Digital Library

131. பன்மைக்குரிய பால்கள் யாவை?

பன்மைக்கு உரிய பால்கள் 1. பலர்பால், 2, பலவின் பால் என்னும் இரண்டுமே ஆகும்.

(எ.டு) ஆண்கள், பெண்கள், குதிரைகள், அவை.

132. இடம் எத்தனை வகைப்படும்? என்னென்ன?

இடம் மூன்று வகைப்படும். அவை 1. தன்மை 2. முன்னிலை, 3. படர்க்கை என்பன.

133. தன்மை இடமாவது (Frist person) யாது?

தன்னை அல்லது தம்மைக் குறிக்கும் பெயர்கள் தன்மையிடம் ஆகும்.

[எ.டு] யான் நான்
யாம் நாம் நாங்கள்.

134. முன்னிலையிடமாவது (Second person) யாது?

ஒருவன் சொல்வதை எதிரே நின்று கேட்பவனை அல்லது கேட்பவர்களைக் குறிக்கும் பெயர்கள் முன்னிலையிடம் ஆகும்.

(எ.டு) நீ, நீர். நீங்கள்

135. படர்க்கை [Third person] இடமாவது யாது?

தன்மைப் பெயர்களும் முன்னிலைப் பெயர்களும் அல்லாத மற்றைப்பெயர்கள் யாவும் படர்க்கை இடப் பெயர்களாவன.

(எ.டு) அவன் அவர் அவர்கள்
மரம் மரங்கள் கண்ணன்

தன்மை முன்னிலை படர்க்கைமு விடனே [ந. சூ. 266]

136. வினைச்சொல்லாவது [Verb] யாது?

ஒரு பெயர்ச் சொல்லின் செயலைத் தெரிவிக்கும் சொல் வினைச்சொல் ஆகும்.

Koviloor Digital Library

[எ.டு] கந்தன் உண்டான்.

இதில் கந்தன் செய்யும் உண்ணுதல் என்னும் தொழிலை உணர்த்துதலால், 'உண்டான்' என்பது வினைச்சொல்லாகும்.

குறிப்பு : வினைச்சொல் காலத்தைக் காட்டும்.

● 137. காலம் (Tense) எத்தனை வகைப்படும்? அவை யாவை?

காலம் 3 வகைப்படும். அவை 1. இறந்தகாலம், 2. நிகழ்காலம், 3. எதிர்காலம் என்பன.

● 138. இறந்த காலம் என்றால் என்ன?

ஒரு காரியம் நிகழ்ந்து முடிந்துவிட்டதைத் தெரிவிப்பது இறந்த காலம்.

(எ.டு)	சென்றான்	கேட்டேன்	நின்றாய்
	வந்தான்	படித்தேன்	குதித்தாய்.

● 139. நிகழ்காலம் என்றால் என்ன?

ஒரு காரியம் நிகழ்கிறதைத் தெரிவிப்பது நிகழ்காலம்.

(எ.டு)	செல்கிறான்	கேட்கிறேன்	நிற்கிறாய்
	வருகிறான்	படிக்கிறேன்	குதிக்கிறாய்.

● 140. எதிர்காலம் என்றால் என்ன?

ஒரு காரியம் இனி நிகழப்போகிறது என்பதைத் தெரிவிப்பது எதிர்காலம்.

(எ.டு)	செல்வான்	கேட்பேன்	நிற்பாய்
	வருவான்	படிப்பேன்	குதிப்பாய்.

● 141. பண்புப் பெயராவது யாது?

வண்ணம், வடிவு, அளவு, சுவை ஆகிய நான்கின் அடிப்படையில் குணத்தைக் குறிக்கும் பெயர், பண்புப்

Koviloor Digital Library

பெயராம். அறிவு, இயல்பு, சிறப்பு, பிறப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் பண்புப் பெயர் அமையும்.

(எ.டு) செம்மை—வெண்மை—நிறப்பண்புப் பெயர்
வட்டம்—கோளம் —வடிவப்பண்புப் பெயர்
இருமை—மும்மை —அளவுப்பண்புப் பெயர்
இனிமை—உவர்ப்பு —சுவைப்பண்புப் பெயர்
புலமை—அறிவால் வந்த பண்புப்பெயர்
நன்மை—இயல்பால் வந்த பண்புப்பெயர்
தலைமை—சிறப்பால் வந்த பண்புப்பெயர்
குடிமை—பிறப்பால் வந்த பண்புப்பெயர்

● 142. பண்புப் பெயர் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களை விவரி.

விடை-பக்கம் 37இல் 76ஆம் வினாவிற்கான விடையில் காண்க.

● 143. தொழிற் பெயராவது யாது?

தொழிலுக்குப் பெயராகும் முறையில் வினைச் சொல்லிலிருந்து வந்த பெயரே தொழிற் பெயர் என்றாகும்.

வினை	பெயர்
வாழ்	வாழ்வு
விழி	விழிப்பு

● 144. தொழிற் பெயர் எத்தனை வகையாக வரும்? அவை யாவை?

தொழிற் பெயர் ஆறு வகையாக வரும்.

1, வினைச் சொல்லின் பகுதி தொழிற் பெயர் விகுதியோடு சேர்ந்து உண்டாகும் தொழிற் பெயர்.

நட+தல்=நடத்தல். செய்+கை = செய்கை.

Koviloor Digital Library

2. விகுதி பெறாத தொழிற் பெயர்.
அமர், தொண்டு.

3. பகுதி மட்டுமே நின்று திரிபடையாமல் வரும் முதல் நிலைத் தொழிற் பெயர். ஒரு தட்டுத் தட்டு. ஒரு சுற்று ஓடு. தட்டு-தட்டுதல் என்றும் சுற்று சுற்றுதல் என்றும் பொருள் தந்தன.

4. முதனிலை திரிந்த தொழிற் பெயர்.
பேறு [பெறுதல்] கேடு [கெடுதல்]

5. காலம் காட்டும் தொழிற் பெயர்.
செய்தது. படிக்கின்றது. வருவது.

6. எதிர்மறைத் தொழிற் பெயர்.
நடவாதது. முயலாதது. முயலாமை.

● 145. வினையாலணையும் பெயர் [Personal noun in the form of a finite verb] என்றால் என்ன? எடுத்துக் காட்டுத் தந்து விளக்குக.

ஒரு வினைமுற்று வினையைக் குறிக்காமல் வினையைச் செய்த கருத்தாவைக் குறிக்குமானால், அது வினையாலணையும் பெயர் எனப்படும். வினையாலணையும் பெயர் காலங்காட்டும். தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும்.

[எ.டு]

கண்டேனை, காண்கின்றேனை, காண்பேனை —
தன்மையிடம்.

உண்டாயை, உண்கின்றாயை, உண்பாயை —
முன்னிலையிடம்.

சென்றானை, செல்கின்றானை, செல்வானை —
படர்க்கையிடம்.

Koviloor Digital Library

● 146. தொழிற்பெயருக்கும், வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

தொழிற்பெயர்	வினையாலணையும் பெயர்
1. தொழிலுக்குப் பெயராய் வரும்.	தொழிலைச் செய்த கருத்தாவுக்குப் பெயராய் வரும்.
2. படர்க்கை இடத்தில் மட்டும் வரும்.	தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும்.
3. காலம் காட்டாது.	காலம் காட்டும்.

● 147. ஆகுபெயர் [Metonymy] என்றால் என்ன?

ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றுக்குப் பெயராக, பழங்காலத்திலிருந்தே வழங்கி வருவது ஆகுபெயராகும்.

[எ.டு] உலகம் சிரிக்கிறது. பூமியைக் குறிக்கும். உலகம் என்னும் சொல் சிரிக்கிறது என்ற சொல்லால் உலகத்திலுள்ள மக்களைக் குறிப்பதால், இஃது ஆகு பெயராயிற்று.

● 148. ஆகுபெயரின் வகைகள் யாவை?

ஆகுபெயர் பதினாறு வகைப்படும். அவையாவன;

1. பொருளாகு பெயர், 2. இடவாகு பெயர், 3. காலவாகு பெயர், 4. சினையாகு பெயர், 5. பண்பாகு பெயர், 6. தொழிலாகு பெயர், 7. எண்ணல் அளவையாகு பெயர், 8. எடுத்தல் அளவையாகுபெயர், 9. முகத்தல் அளவை ஆகுபெயர், 10. நீட்டல் அளவை ஆகுபெயர், 11. சொல்லாகு பெயர், 12. தானியாகு பெயர், 13. கருவியாகு பெயர், 14. காரியவாகு பெயர், 15. கருத்தாவாகுபெயர், 16. உவமையாகுபெயர்.

Koviloor Digital Library

● 149. பொருளாகு பெயராவது யாது?

(எ.டு) தாமரை போன்ற முகம்— தாமரை என்பது முதற்பொருளாகிய தாமரைக் கொடியின் பெயராகும். அந்த முதற்பொருளின் பெயர், கொடியை உணத்தாமல் அதன் உறுப்பாகிய மலருக்கு ஆகி வந்தமையால் இது பொருளாகு பெயராயிற்று.

● 150. இடவாகு பெயராவது யாது?

ஓர் இடத்தின் பெயர், அந்த இடத்திலுள்ள பொருளுக்கு ஆகிவருவது இடவாகு பெயராகும்.

(எ.டு) உலகம் வருந்தியது— இதில் 'உலகம்' என்ற பூமியின் பெயர் பூமியில் வாழும் மக்களுக்கு ஆகிவந்தது. அதனால், இஃது இடவாகு பெயராயிற்று.

● 151. காலவாகு பெயர் என்றால் என்ன?

ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தில் உள்ள பொருளுக்குப் பெயராகி வருவது காலவாகு பெயராம்.

[எ.டு]கார் அறுத்தான் —இதில் கார் என்ற காலத்தின் பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்துள்ளது.

● 152. சினையாகு பெயராவது யாது?

சினைப்பொருளின் பெயர் அதன் முதற் பொருளுக்குப் பெயராகி வருவது சினையாகு பெயராம்.

(எ.டு) வெற்றிலை நட்டான்—இலை என்னும் சினையின் பெயர் அதன் முதற்பொருளாகிய கொடிக்கு ஆகிவந்தது.

● 153. பண்பாகு பெயராவது யாது?

ஒரு குணத்தின் பெயர் அதனை உடைய பொருளுக்குப் பெயராகி வருவது பண்பாகு பெயராகும்.

Koviloor Digital Library

(எ.டு) வெள்ளை அடித்தான்— வெள்ளை என்ற பண்பின் பெயர், வெள்ளை நிறமுள்ள சுண்ணாம்புக்குப் பெயராகி வந்துள்ளது.

● 154. தொழிலாகு பெயராவது யாது?

ஒரு தொழிலின் பெயர், அத்தொழிலை உடைய பொருளுக்குப் பெயராகி வருவது தொழிலாகு பெயராம்.

(எ.டு) வளவன் வற்றல் உண்டான்—வற்றல் என்ற தொழிலின் பெயர் வற்றுதலை உடைய உணவுக்குப் பெயராகி வந்தது.

● 155. எண்ணல் அளவை ஆகுபெயர் என்றால் என்ன?

எண்ணுப் பெயர்கள் அவ்வளவைக் கொண்ட பொருளுக்குப் பெயராகி வருவது எண்ணலளவையாகு பெயர்.

(எ.டு) ஆளுக்கு இரண்டு கொடுத்தான்— இரண்டு என்னும் எண்ணுப்பெயர் பொருளுக்குப் பெயராகி வந்தது.

● 156. எடுத்தலளவையாகு பெயர் என்றால் என்ன?

நிறுத்து அளக்கின்ற கிலோ, கிராம் முதலியவற்றின் பெயர்கள் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவது எடுத்தலளவையாகு பெயராகும்.

(எ.டு) நான்கு கிலோ கொடு -- கிலோ என்பது கிலோகிராம் எடையுள்ள பொருளுக்குப் பெயராகி வந்தது.

● 157. முகத்தலளவையாகு பெயர் என்றால் என்ன?

முகந்து அளக்கின்ற லிட்டர், படி, நாழி முதலிய பெயர்கள் அவ்வளவைக் கொண்ட பொருளுக்குப் பெயராகி வருவது முகத்தலளவையாகு பெயராம்.

Koviloor Digital Library

[எ.டு] ஐந்து லிட்டர் கொடு—லிட்டர் என்னும் முகத்தலளவையின் பெயர் அவ்வளவுடைய பொருளுக்குப் பெயராகி வந்தது.

● 158. நீட்டலளவையாகு பெயர் என்றால் என்ன?

நீட்டி அளக்கின்ற முழம், மீட்டர், கிலோமீட்டர் முதலிய பெயர்கள் அவ்வளவைக் கொண்ட பொருளுக்குப் பெயராகி வருவது, நீட்டலளவையாகு பெயராகும்.

[எ.டு] சட்டைக்கு இரண்டு மீட்டர் வாங்கி வா—மீட்டர் என்னும் நீட்டல் அளவு அவ்வளவுள்ள துணிக்குப் பெயராகி வந்தது.

● 159. சொல்லாகு பெயர் என்றால் என்ன?

ஒரு சொல்லின் பெயர் அதன் பொருளுக்குப் பெயராகி வருவது சொல்லாகு பெயராகும்.

[எ.டு] என் சொல்லைக் கேள்—என் சொல் என்ற சொல்லின் பெயர் அறிவுரைக்குப் பெயராகி வந்தது.

● 160. தானியாகு பெயராவது யாது?

ஒரு தானத்தில் [இடத்தில்] உள்ள பொருளின் பெயர் அதற்குத் தானமான (அமர்வதற்கிடமான) பொருளுக்குப் பெயராகி வருவது தானியாகு பெயராம்.

(எ.டு) விளக்கு ஒடிந்தது—விளக்கு என்னும் தீச்சுடரின் பெயர் அதற்கிடமான தண்டுக்குப் பெயராகி வந்தது.

● 161. கருவியாகு பெயராவது யாது?

காரணத்தின் பெயர் காரியத்துக்குப் பெயராகி வருவது கருவியாகு பெயராம்.

Koviloor Digital Library

(எ.டு) வீணை கேட்டேன். இசை உண்டாவதற்குக் காரணமான வீணை என்னும் பெயர் அதன் காரியமாகிய இசைக்குப் பெயராகி வந்தது.

● 162. காரியவாகு பெயர் என்றால் என்ன?

காரியத்தின் பெயர் காரணத்திற்குப் பெயராகி வருவது காரியவாகு பெயராம்.

(எ.டு) அலங்காரம் படித்தேன்—அலங்காரம் என்று இலக்கணமாகிய காரியத்தின் பெயர், அதனை அறிவித்தற்குக் காரணமான நூலுக்குப் பெயராகி வந்தது.

● 163. கருத்தாவாகு பெயராவது யாது?

ஒன்றைச் செய்தவன் பெயர், அவனால் செய்யப்பட்ட பொருளுக்குப் பெயராகி வருவது கருத்தாவாகு பெயர் எனப்படும்.

(எ.டு) திருவள்ளுவர் படித்தேன் — வள்ளுவரின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலுக்கு ஆகி வந்தது.

● 164. உவமையாகுபெயர் என்றால் என்ன?

உவமையின் பெயர் விளக்கப்படும் பொருளுக்குப் பெயராகி வருவது உவமையாகு பெயராம்.

(எ.டு) சிங்கம் வந்தான்— சிங்கம் என்னும் உவமையின் பெயர், சிங்கம் போன்ற இளைஞனுக்குப் பெயராகி வந்தது.

பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதை
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே. [ந. சூ. 290]

Koviloor Digital Library

● 165. பொதுப்பெயர்கள் யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.

எல்லாம், தாம், தான் என்னும் பெயர்கள் உயர் திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக வருவதால் பொதுப் பெயர்களாம். அவற்றுள் எல்லாம் என்பது மூவிடங்கட்கும் பொதுவாக வரும்.

(எ.டு) நாம் எல்லாம், நீங்கள் எல்லாம், அவர்கள் எல்லாம்—'எல்லாம்' என்பது மூவிடத்திலும் வந்துள்ளது.

அவர்கள் எல்லாம், அவை எல்லாம்—உயர்திணை அஃறிணையில் வந்துள்ளது.

அவன்தான், அதுதான், அவர்தான், அவைதாம்—தான், தாம் இரண்டும் உயர்திணையிலும், அஃறிணை யிலும் வந்துள்ளன.

● 166. வேற்றுமை [Case] என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்.

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாகும். பெயர்ச்சொல்லின் பொருளை வேறு படுத்த, பெயர்ச்சொல்லின் இறுதியில் வரும் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன போன்ற சொற்கள் வேற்றுமை உருபுகளாகும்.

வேற்றுமை எட்டு வகைப்படும்.

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை [ந. சூ. 291]

பெயரே ஐ ஆல் குஇன் அதுகண்
விளியென் றாகும் அவற்றின் பெயர்முறை [ந. சூ. 292]

● 167. உருபு [Case endings] இல்லாத வேற்றுமை எவை?

முதல் வேற்றுமையும், எட்டாம் வேற்றுமையும் உருபு இல்லாத வேற்றுமைகள் ஆகும். முதல் வேற்

Koviloor Digital Library

றுமைக்கு எழுவாய் வேற்றுமை என்றும், எட்டாம் வேற்றுமைக்கு விளிவேற்றுமை என்றும் பெயர் உண்டு.

● 168. முதல் வேற்றுமையாவது (Nominative—case) யாது?

பொருளின் இயல்பான பெயரே முதல் வேற்றுமை யாகும்.

(எ.டு) கந்தன் வந்தான்.

குறிப்பு : இதனை எழுவாய் வேற்றுமை எனவும் கூறலாம்.

அவற்றுள்,
எழுவாய் உருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே [ந. சூ. 295]

● 169. இரண்டாம் வேற்றுமைக்கு (Objective—case) உருபு என்ன? பொருள் என்ன?

இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ'. அதன் பொருள் செயப்படு பொருள் ஆகும்.

(எ.டு) குடத்தைச் செய்தான்.
யானையை வென்றான்.

இரண்டா வதனுருபு ஐயே அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி யாகும். [ந. சூ. 296]

● 170. மூன்றாம் வேற்றுமைக்குரிய (Instrumental—case) உருபுகள் யாவை?

மூன்றாம் வேற்றுமை உருபுகள் 'ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன்' என்பன.

[எ.டு] பேனாவால் எழுதினான்.
நண்பனோடு விளையாடினான்.
மனைவியுடன் வந்தான்.

Koviloor Digital Library

முன்றா வதனுருபு ஆல் ஆன் ஒடுஓடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருளே [ந. சூ. 297]

● 171. நான்காம் வேற்றுமை (Dative-case) உருபு யாது?

நான்காம் வேற்றுமை உருபு 'கு'

(எ.டு) கூலிக்கு வேலை செய்தான்.
தந்தைக்குப் பணம் கொடுத்தேன்.
அர்ச்சுனனுக்கு மகன் அபிமன்யு.

நான்கா வதற்குரு பாகும் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டு முறையாதியின் இதற்கிதெனல் பொருளே (ந. சூ. 298)

● 172. ஐந்தாம் வேற்றுமை (Ablative-case) உருபுகள் யாவை?

ஐந்தாம் வேற்றுமை உருபுகள் 'இன், இல், நின்று, இருந்து, விட்டு' என்பனவாம்.

(எ.டு) மலையின் வீழருவி.
மரத்தினின்று இறங்கு.
வீட்டிலிருந்து வந்தான்.
மிதிவண்டியை விட்டு இறங்கினான்.

ஐந்தா வதனுருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே (ந. சூ. 299)

● 173. ஆறாம் வேற்றுமை (Possessive-case) உருபுகள் யாவை?

ஆறாம் வேற்றுமை உருபுகள் 'அது', 'உடைய' என்பவை. ஆது, அ-என்பவையும் உருபாக வரும்.

[எ.டு] பசுவினது கன்று.
கந்தனுடைய வீடு.

Koviloor Digital Library

● 174. ஏழாம் வேற்றுமை (Locative-case) உறுபுகள் யாவை?

ஏழாம் வேற்றுமை உருபுகள் 'இல், இடத்தில், கண்' என்பன.

(எ.டு) மரத்தில் கூடு இருக்கிறது.
ஆசிரியரிடத்தில் பணிவுடன் இரு.
காட்டின் கண் புலி வாழும்.

ஏழன் உருபுகண் ணாதி யாகும்
பொருள்முத லாறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன் பொருள்என்ப (ந. சூ. 301)

● 175. எட்டாம் வேற்றுமையை (Vacative-case) விளக்குக.

எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் இல்லை. படர்க்கைச் சொற்களை முன்னிலையாக்கி விளித்து அழைப்பதற்கேற்பச் செய்யப்படும் சிறுசிறு மாற்றங் களே எட்டாம் வேற்றுமையைக் காட்டும். அம்மாறுதல் களாவன :

சொல்லின் இறுதி திரிதல், கெடுதல், மிகுதல் ஈற்றய லெழுத்துத் திரிதல், இயல்பாதல்.

● 176. விளியேலாத பெயர்கள் யாவை?

1. யான், யாம் முதலிய தன்மைப் பெயர்கள்.
2. நீ, நீர், நீங்கள் ஆகிய முன்னிலைப் பெயர்கள்.
3. அவன், அவள், அவர் முதலிய சுட்டுப்பெயர்கள்.
4. எவன், எவள், எவர் முதலியனவாக வரும் வினாப் பெயர்கள்.
5. நுமன், நுமள், நுமர் முதலிய கிளைப் பெயர்கள்.
6. எல்லாம், தான், தாம் என்னும் பொதுப் பெயர்கள்.
7. பிறன், பிறள். மற்றையன் என்னும் பெயர்கள் விளியேற்று வாரா.

Koviloor Digital Library

● 177. விளியேற்கும் போது பெயர்ச்சொற்கள் எத்தகைய மாற்றங்களை அடையும்?

எட்டாம் வேற்றுமைக்கு உருபு இல்லை. படர்க்கையிடத்தில் உள்ளவரைத் தன்முகமாக அழைப்பது விளியாகும். பெயர்ச்சொல்லின் ஈறுகெடுதல், மிகுதல், திரிதல், ஈற்றயல், திரிதல் ஆகிய விகாரங்களை ஏற்று விளிவேற்றுமை வரும்.

[எ.டு] வளவ வாழி — ஈறு கெடுதல்.
தாயே வருக — ஈறு மிகுதல்.
அன்னாய் வருக — ஈறு திரிதல்
மக்காள் எழுக — ஈற்றயல் திரிதல்.

● 178. உருபு மயக்கம் என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக.

ஒரு வேற்றுமை உருபு நிற்க வேண்டிய இடத்தில் வேறொரு வேற்றுமை உருபு மயங்கி வந்திருந்தாலும் பொருள் மாறுபடாமல் இருந்தால், அஃது உருபு மயக்கம் அல்லது வேற்றுமை மயக்கம் எனப்படும்.

(எ.டு) காலத்தினாற் செய்த நன்றி, என்ற தொடரில் காலத்தில் செய்த நன்றி என்று ஏழாம் வேற்றுமை உருபு நிற்க வேண்டிய இடத்தில், 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு மயங்கி வந்தது. மூன்றாம் வேற்றுமை உருபை, ஏழாம் வேற்றுமை உருபாக மாற்றிப் பொருள் கொள்கிறோம். இது வேற்றுமை மயக்கம் எனப்படும்.

யாதன் உருபில் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும் [ந. சூ. 317]

● 179. வினைச்சொல்லின் (Verb) இலக்கணம் யாது?

ஒன்றன் தொழில் நிகழ்ச்சியை உணர்த்தி வரும் சொல் வினைச்சொல்லாகும். வினைச்சொல் காலம்

Koviloor Digital Library

காட்டும்; வேற்றுமை ஏற்காது; திணை, பால், எண் இடங்களை உணர்த்தி வரும்.

● 180. தெரிநிலை வினைமுற்று (Finite Verb) என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்யப்படு பொருள் ஆகிய ஆறனையும் வெளிப்படையாக உணர்த்தும் வினைச்சொல், தெரிநிலை வினை முற்றாகும்.

(எ.டு) வனைந்தான்—இத் தெரிநிலைவினைமுற்றிலிருந்து நாம் அறிந்துகொள்வன: செய்பவன்—குயவன்; கருவி-தண்டச் சக்கரம்; நிலம்—குயவன் வீடு; செயல்—வனைதல்; காலம்; இறந்த காலம்; செய்யப்படு பொருள்—மண்குடம். இவ்வாறு, ஆறு பொருள்களையும் வனைந்தான் என்ற சொல் தெரிவித்து வருவதால், இது தெரிநிலை வினைமுற்று ஆயிற்று.

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே (ந. சூ. 320)

● 181. குறிப்பு வினைமுற்றாவது (Symbolic Verb) யாது? எடுத்துக்காட்டுத் தந்து விளக்கி எழுதுக.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்களின் அடியாகத் தோன்றி செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்யப்படு பொருள் என்னும் ஆறனுள்— செய்பவனை மட்டும் வெளிப்படையாக உணர்த்தி மற்றவற்றைக் குறிப்பாக உணர்த்தும் வினைச்சொல் குறிப்பு வினைமுற்றாகும்.

(எ.டு) வளவன் இன்று செல்வன். இன்று என்னும் குறிப்பால் செல்வம் உடையவனாக இருக்கிறான் என நிகழ்காலமும், உடையவனாம் தொழிலும் குறிப்பாக விளங்குகின்றன. உயர்திணை, ஆண்பால் என்பது

Koviloor Digital Library

மட்டுமே வெளிப்டையாகவே தெரிகிறது. அதனால் இது செல்வம் என்னும் பொருட்பெயரடியாய்ப் பிறந்த குறிப்பு வினைமுற்றாகும்.

பொருள்முத லாறினும் தோற்றி முன்னாறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே (ந. சூ- 321)

● 182. வினைமுற்றின் இலக்கணம் யாது?

தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ உணர்த்தி, திணை, பால் காட்டும் விகுதியோடு முற்றுப்பெற்று நிற்கும் சொல் வினைமுற்று ஆகும். வினைமுற்று ஆறுவகைப் பெயர்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

● 183. ஏவல் வினைமுற்றின் (Imperative Verb) இலக்கணம் யாது? எடுத்துக்காட்டுத் தந்து விளக்கம் தருக.

முன்னிலை இடத்தில் கட்டளைப் பொருளை உணர்த்தி வரும்வினைமுற்று ஏவல் வினைமுற்று எனப்படும். ஏவல் வினைமுற்று— ஏவல் ஒருமை வினைமுற்று, ஏவல் பன்மை வினைமுற்று என்று இரு வகைப்படும்.

ஏவல் ஒருமை வினைமுற்று ஆய், இ என்னும் விகுதிகளைப் பெற்று வரும். ஏவல் பன்மை வினைமுற்று மின், உம், கள் என்னும் விகுதிகளைப் பெற்றுவரும்.

(எ.டு) நீ காண்பாய்; நீ காணுதி; ஆய், இ ஒருமை விகுதியாக வந்தது.

நீவிர் உண்மின்; நீவிர் உண்ணுங்கள்; மின் கள் விகுதி—பன்மை வினைமுற்றிற்கு வந்தது.

● 184. வியங்கோள் வினைமுற்றின் (Operative Verb) இலக்கணம் யாது? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

Koviloor Digital Library

க, இய, இயர் என்னும் விகுதிகளைப் பெற்று இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவாய் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்றாகும். வாழ்த்துதல், வைதல், வேண்டிக்கொள்ளுதல், ஏவுதல் முதலிய பொருள்களில் வியங்கோள் வினைமுற்று வரும். எதிர்காலம் காட்டும்.

(எ.டு) நான் வாழ்க; நாம் வாழ்க; நீ வாழ்க; நீவிர் வாழிய; அவன் வாழியர்; அவள் வாழ்க; அவர் வாழிய; அது வாழ்க; அவை வாழிய.

குறிப்பு : தல், அல். ஈயர், வேண்டும், தகும், படும், இ என்பனவும் வியங்கோள் விகுதிகளாக வரும்.

கயவோடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப (ந. சூ. 338)

● 185. வியங்கோளுக்கும் ஏவலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

ஏவல்	வியங்கோள்
1. முன்னிலையில் வரும்.	1. இருதிணை, ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.
2. ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு.	2. ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.
3. கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும்	3. வாழ்த்துதல், வைதல், வேண்டிக் கோடல், ஏவுதல் முதலிய பல பொருள்களை உணர்த்தும்

Koviloor Digital Library

● 186. செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றின் இலக்கணம் கூறி எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

உம் என்னும் விகுதியை, சொல்லின் ஈற்றில் பெற்று எதிர்காலம் உணர்த்தி வரும் வினைமுற்று, செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றாகும். இவ்வினை முற்று படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்கு பால்களிலும் வரும்.

படர்க்கைப் பலர்பாலிலும், தன்மை முன்னிலை யிலும் செய்யும் என்னும் வினைமுற்று வாராது.

(எ.டு) அவன் உண்ணும்; அவள் உண்ணும்; அது உண்ணும்; அவை உண்ணும்.

மலை நிற்கும், ஆறு ஓடும் எனச் சிறுபான்மை இவ்வினைமுற்று நிகழ்காலத்திலும் வரும்.

● 187. பொதுவினைகள் யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.

1. வியங்கோள் வினைமுற்று, வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுகள் ஆகியன இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவாக வரும்.

2. செய்யும் என்னும் முற்று, படர்க்கைப் பலர்பால் தவிர ஏனைய நான்கு பால்களுக்கும் பொதுவாக வரும்.

3. யார் என்னும் வினா, குறிப்புவினைமுற்று, உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாக வரும்.

4. எவன் என்னும் வினா, குறிப்பு வினைமுற்று, அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால்களுக்குப் பொதுவாக வரும். இவ்வாறு, பலவற்றிற்கும் பொதுவாக வரும் வினைமுற்றுகள் பொதுவினைகளாம்.

Koviloor Digital Library

(எ.டு) நான், நாம், நீ, நீவிர், அவன், அவள், அவர், அது, அவை.

வேறு, இல்லை, உண்டு, வாழ்க, வாழிய, வாழியர்.
(பெயரொடு வினையைப் பொருத்துக.)

அவன், அவள், அது, அவை—உண்ணும்.

அவன் யார்? அவள் யார்? அவர் யார்?—யார்?

அது எவன், அவை எவன்—எவன்.

தன்மை முன்னிலை வினைமுற்றுகள் ஆண்பால் பெண்பால், ஒன்றன் பால்களுக்கும் பொதுவாக வரும் பொதுவினைகளாம்.

தன்மைப்பன்மை வினைமுற்றுகள் பலர்பால், பலவின்பால் ஆகிய இரண்டு பால்களுக்கும் பொதுவாய் வருதலின் இவ்வகை வினைமுற்றுகளும் பொது வினைகளே.

● 188. பெயரெச்சம் (Adjective Participle) என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.

- திணை, பால்காட்டும் விகுதி குறைந்து எச்சமாய் நின்று, செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் ஆறனுள் ஒன்றைக் குறிக்கும் பெயரைக் கொண்டு முடியும் வினைச்சொல் பெயரெச்சம் எனப்படும்.

அது காலவகையால் இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம் என்று மூன்று வகைப்படும்.

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமும் செயலும் தோன்றிப் பாலொடு
செய்வதாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. (ந. சூ. 340)

Koviloor Digital Library

(எ.டு) வந்த மனிதன், வருகின்ற மனிதன், வரும் மனிதன்.

● 189. வினையெச்சம் (Adverbial Participle) என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.

தொழிலையும், காலத்தையும், உணர்த்தி திணை, பால் காட்டும் விகுதி குறைந்து—வினையைக் கொண்டு முடியும் எச்சவினை, வினையெச்சம் எனப்படும்.

வினையெச்சம் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், தொழிற்பெயர், வினையாலனையும் பெயர் ஆகியவற்றுள் ஒன்றைக் கொண்டு முடியும். வினையெச்சம் கால வகையால் மூவகைப்படும். அவை: இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என்பனவாம்.

(எ.டு) கண்டு சென்றான். (இறந்தகாலம்)

கோழி கூவப் பொழுது விடிகிறது. (நிகழ்காலம்)

வந்தால் மகிழ்வான். (எதிர்காலம்)

உண்டு சென்றான்.(வினைமுற்று கொண்டு முடிந்தது)

வந்து சென்ற மனிதன். [பெயரெச்சம் கொண்டு முடிந்தது]

கற்றுத் தேர்ந்து வந்தான். [வினையெச்சம் கொண்டு முடிந்தது]

எழுந்து நின்றவன் [வினையாலணையும் பெயர் கொண்டு முடிந்தது]

நடந்து செல்லல்[தொழிற்பெயர் கொண்டு முடிந்தது]

தொழிலும் காலமும் தோற்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே. [ந. சூ. 342]

● 190. பலவகை வினையெச்ச வாய்பாடுகள் யாவை? அவை எக்காலங்களை உணர்த்தும்?

Koviloor Digital Library

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென ஆகிய ஐந்து வாய்பாடுகளும் இறந்தகாலம் காட்டி வரும் வினையெச்சங்களாகும்.

செய என்னும் வாய்பாடு ஒன்று மட்டும் நிகழ்காலம் காட்டும் வினையெச்சமாகும்.

செயின், செய்யிய, செய்யியர் என்னும் வாய்பாட்டு விகுதிகளை உடைய வினையெச்சங்களும் எதிர்காலம் காட்டும்.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறும்முக் காலமும் முறைதரும் (ந. சூ. 343)

● 191. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்கம் தருக.

எதிர்மறைப் பொருளை உணர்த்தி வரும் பெயரெச்சம் ஈற்றெழுத்து (விகுதி) கெட்டு வருமானால், அஃது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகும்.

[எ.டு] ஓடாக்குதிரை, பாயாவேங்கை.

ஓடாத, பாயாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சங்கள் 'த' என்னும் ஈறுகெட்டு வந்தன.

● 192. ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக.

எதிர்மறைப் பொருளை உணர்த்தி வரும் வினையெச்சத்தின் ஈற்றெழுத்து (விகுதி) கெட்டு வருமானால்— அஃது ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாகும்.

(எ.டு) பெய்யாக் கொடுக்கும்; தோன்றாக்கெடும்.

இச்சொற்றொடர்களில் பெய்யாது, தோன்றாது என்னும் எதிர்மறை வினையெச்சங்கள் 'து' என்னும் விகுதிகெட்டு வந்தன.

Koviloor Digital Library

193. செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் எவ்வாறு வரும்? எடுத்துக்காட்டுத் தருக.

செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் எதிர்மறைப் பொருளை உணர்த்தாமல், செய்து என உடன்பாட்டுப் பொருளை உணர்த்தி வரும். அது செய்யா என்பது போல வருதலால், செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் எனப்பட்டது.

(எ.டு) பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு—இது பெய்து கொடுக்கும் எனப் பொருள்படுதலால், பெய்யா என்பது செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் ஆகும்.

குறிப்பு: பெய்யா என்பது பெய்யாமல் என்ற பொருளைத் தருமானால், அஃது ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாகும்.

194. முற்றெச்சமாவது யாது? உதாரணம் தந்து விளக்குக.

வினைமுற்று எச்சப்பொருள்பட வருவது முற்றெச்சம் எனப்படும். தெரிநிலை வினைமுற்று வினையெச்சப் பொருளிலும், குறிப்பு வினைமுற்று வினையெச்சம், பெயரெச்சம் ஆகிய இருபொருள்களிலும் வரும்.

(எ.டு) பாடினன் வந்தான்—பாடினன் என்னும் தெரிநிலை வினைமுற்று, பாடி என்னும் வினையெச்சப் பொருளைத் தந்தது.

வில்லினன் வீரன் வந்தான்— வில்லினன் என்னும் குறிப்பு வினைமுற்று வில்லை உடைய (வீரன்) என பெயரெச்சப் பொருளைத் தந்தது.

வீரன் வில்லினன் வந்தான்— என்னும் குறிப்பு வினைமுற்று வில்லை உடையவனாய் என வினை யெச்சப் பொருளைத் தந்தது.

வினைமுற் றேவினை யெச்ச மாகலும்
குறிப்புமுற் றீரெச்ச மாகலும் உளவே [ந. சூ. 351]

Koviloor Digital Library

● 195. சினைவினை, முதல்வினை இவற்றை எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குக.

சினையின் தொழிலைக் குறிக்கும் வினை, சினை வினையாகும். சினை என்பது உறுப்பு என்று பொருள் படும்.

முதலின் தொழிலைக் குறிக்கும் வினை முதல் வினையாகும். முதல் என்பது உறுப்புகளை உடைய முழுப்பொருள் என்று பொருள்படும்.

சினைவினை சினைவினையைக்கொண்டு முடியும். முதல்வினை முதல் வினையைக் கொண்டு முடியும். அவ்வாறில்லாமல், சினைவினை முதல் வினையைக் கொண்டு முடிவதும் உண்டு.

(எ.டு) கண்ணன் கால், ஒடிந்து விழுந்தது-ஒடிந்து என்பது காலாகிய சினையின் வினை. விழுந்தது என்பதும் சினையின் வினையே. எனவே, சினைவினை சினையைக் கொண்டு முடிந்துள்ளது.

கண்ணன் தடுமாறி விழுந்தான்— தடுமாறுதல் கண்ணனாகிய முதலின் வினை. விழுதலும் முதலின் வினையே. ஆகவே, முதல்வினை முதல்வினையைக் கொண்டு முடிந்தது.

கண்ணன் கால் ஒடிந்து விழுந்தான்— ஒடிந்து என்பது காலாகிய சினையின் வினை. விழுந்தான் என்பது கண்ணனாகிய முதலின்வினை. சினைவினை முதலின் வினையைக் கொண்டு முடிந்தது.

சினைவினை சினையொடும் முதலொடும் செறியும் (ந. சூ. 345)

சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை ந. சூ. 346)

● 196. செய்வினை செயப்பாட்டு வினைகளை விளக்கி எழுதுக.

கருத்தா (எழுவாய்) செய்யும் தொழிலைத் தெரிவிக்கும் வினை செய்வினையாகும்.

Koviloor Digital Library

செயப்படுபொருள் எழுவாயாய் அது செய்யும் தொழிலைக் குறிக்கும் வினை செயப்பாட்டு வினை ஆகும்.

[எ.டு] கம்பர் இராமாயணத்தைப் பாடினார்—
செய்வினை [Active verb]

இராமாயணம் கம்பரால் பாடப்பட்டது—
செயப்பாட்டு வினை. [Passive verb]

● 197. தன்வினை [Verb denoting direction] பிறவினைகளை [Causative verb] விளக்கி எழுதுக.

கருத்தா தானே செய்யும் வினை, தன்வினை எனப்படும். கருத்தா பிறரைக் கொண்டு செய்விக்கும் வினை, பிறவினை எனப்படும்.

தன்வினைப் பகுதியோடு வி அல்லது பி சேர்த்தால் பிறவினைப் பகுதியாகும். சில தன் வினைப் பகுதியோடு கு, சு, டு, து, பு, று என்னும் வல்லின உகரங்களைச் சேர்த்தால் பிறவினையாகும். சில தன்வினைப் பகுதி களில் உள்ள மெல்லினத்தை, வல்லினமாக்கினால் பிறவினையாகும்.

[எ.டு] வளவன் செய்தான்—தன்வினை.

வளவன் செய்வித்தான்— பிறவினை.

வளவன் கண்டான், வளவன் காண்பித்தான்.

போனான், போக்கினான், வருந்தினான், வருத்தினான்.

இவ்வாறு, தன்வினை வரும்.

● 198. உடன்பாட்டு வினை [Affirmative verb], எதிர்மறை வினை [Negative verb]— இவற்றை விளக்குக.

ஒரு தொழில் நிகழ்வதை, அறிவிப்பது உடன்பாட்டு வினையாகும். தொழில் நிகழாமையையும், தொழிலை

Koviloor Digital Library

மறுப்பதையும் உணர்த்தும் வினை எதிர்மறைவினை ஆகும்.

[எ.டு] கண்டான்—உடன்பாட்டு வினைமுற்று.

காணான்—தொழில் நிகழாமையை உணர்த்துவதால் எதிர்மறை.

காணேன்—தொழிலை மறுப்பதை உணர்த்துவதால் எதிர்மறை.

கண்ட—உடன்பாட்டுப் பெயரெச்சம்.

காணாத—எதிர்மறைப் பெயரெச்சம்.

கண்டு—உடன்பாட்டு வினையெச்சம்.

காணாது— எதிர்மறை வினையெச்சம்.

● 199. இடைச்சொல்லின் [Participle] இலக்கணம் யாது?

பெயர் வினைகளைப் போல தனித்து வந்து பொருள் உணர்த்தாமல் பெயர் வினைகளை அடுத்து முன்னும் பின்னும் வந்து பொருள் உணர்த்தும் சொற்கள், இடைச் சொற்களாம். பெயர் வினைகளை இடமாகக்கொண்டு அவற்றினிடையே வருவதால் இச்சொற்கள் இடைச் சொற்கள் எனப்பட்டன.

வேற்றுமை உருபுகள், வினையுருபுகள், பண்பு உருபுகள், உவமஉருபுகள், சாரியைகள், சுட்டு, வினாக்கள், அசைநிலைகள் ஆகிய யாவும் இடைச் சொற்கள் ஆகும்.

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பெனேன் பகுதி தனித்தியல் இன்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்து
ஒன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல் [ந. சூ. 420]

● 200. ஏகார இடைச்சொல் எவ்வெப் பொருளில் வரும்?

Koviloor Digital Library

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருள் களில் வரும்.

201. இடைச்சொல் எந்தெந்தப் பொருள்களை விளக்கி வரும்? சான்றுக் காட்டி விளக்குக.

1. தெரிநிலை—கண்டேன்; காண்பேன்.
2. ஐயம்—கிட்டுமோ? கிட்டாதோ?
3. தெளிவு—அறிவே சிறந்தது.
4. முற்று—முற்றும், முற்றிற்று.
5. எண்—அறமும் பொருளும் இன்பமும்.
6. சிறப்பு—வெண்பாவிற் புகழேந்தி.
7. எதிர்மறை—சொல்லாது சென்றான்.
8. எச்சம்—கோதையும் வந்தாள்.
9. வினா—இந்தியாவின் தலை நகரம் எது?
10. விருப்பம்—மழையே வேண்டும்.
11. ஒழிவு—கழிந்தது வேனில்.
12. பிரிவு—விட்டுப் பிரிந்தான்.
13. நீக்கம்—உதிர்ந்தன இலைகள்.
14. ஆக்கம்—குவிந்தது செல்வம்.
15. இரக்கம்—ஆ! அந்தோ.
16. இடம்—வீடு தோறும்,
17. காலம்—இனி.

தெரிநிலை தேற்றம் ஐயம்முற் றுஎண் சிறப்பு
எதிர்மறை எச்சம் வினாவிழைவு ஒழியிசை
பிரிப்பு கழிவு ஆக்கம் இன்னன இடைப்பொருள் [ந. சூ. 421]

Koviloor Digital Library

● 202. இடைச்சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

இடைச்சொற்கள் ஒன்பது வகைப்படும்.
அவையாவன :

1. வேற்றுமை உருபுகள் :
ஐ, ஆல், கு. இன், அது, கண்.

2. பகுதிகள் தவிர்த்த பிறவினை உருபுகள் :
அன், ஆன், அள், ஆள் போன்ற விகுதிகள்

கரம், கான், காரம் போன்ற எழுத்துச் சாரியைகள்.

அத்து, அம், அல், இல் போன்ற சொற்சாரியைகள்
ச், ஞ், த், வ் போன்ற பெயரிடை நிலைகள்.

த், ட், ற் ப், வ், கின்று. கிறு, ஆநின்று போன்ற வினையிடை நிலைகள். விகாரங்கள்.

3. உவம உருபுகள் :
அன்ன, இன்ன, நேர, நிகர, ஒப்ப, போல, உறழ.

[எ.டு] பால்போலும் இன்சொல்.

4. சுட்டெழுத்துகள் :
அ, இ, உ, அவன், இவன், உவன்.

5. வினாவெழுத்துகள் : எ, யா, ஆ, ஓ, ஏ.
என்ன, யார், வந்தானா, வந்தானோ, ஏன்.

6. பல்வகைப் பொருளில் வரும் உம்மைகள் :
வெற்றிலையும் பாக்கும் கொடு.

7. இசைநிறை : செய்யுளில் இசையை நிறைக்க வரும் ஏ, ஓ, அர் முதலியன.

8 அசைச்சொற்கள் : யா, கா, பிற, பிறக்கு, அரோ, மாதோ, போலும், தாம், தான், ஏ, ஓ, முதலிய அசைகள்.

[எ.டு] சென்றானரோ

Koviloor Digital Library

9. குறிப்பால் பொருள் உணர்த்தும் சில சொற்கள்.

ஒலிக்குறிப்புச் சொற்கள் : சலசல, மடமட, ஒல், கொல்.

அச்சக் குறிப்புச் சொற்கள் : துண்ணென, துடுக்கென.

விரைவுக் குறிப்புச் சொற்கள் : பொள்ளென, பொருக்கென, சட்டென.

பண்புக் குறிப்பு : பசேலென, வெளேரென, கரேலென.

இரக்கக் குறிப்பு : ஐயோ, அச்சோ, ஆ.

வியப்புக் குறிப்பு : அடடா, ஆகா.

203. ஏகார இடைச்சொல் எவ்வெப்பொருளில் வரும்?

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்னும் ஆறு பொருள்களில் வரும்.

(எ.டு) 1. வில்வீரர்களில் அர்ச்சுனனே சிறந்தவன். ஏகாரம் இங்கு அர்ச்சுனனை மட்டும் பிரித்துக் காட்டுவதால் பிரிநிலை.

2. வினா : மன்னன் தானே கட்டளையிட்டான்?

3. எண் : கல்வியே செல்வமே நல்வாழ்வே. இம் மூன்றும் வேண்டும்.

4. அசைநிலை : அறம், பொருள், இன்பம், வீடென உறுதிப் பொருள் நால்வகைத்தே.

5. தேற்றம் : நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

6. இசைநிறை : ஏஏ இவளொருத்தி பேடியோ.

பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை எனவாறு ஏகா ரம்மே. [ந. சூ. 422]

Koviloor Digital Library

● 204. ஒகார இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் யாவை?

ஒகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு என்னும் எட்டுப் பொருள்களை உணர்த்தி வரும்.

[எ.டு] அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்—ஒகாரம், இல்லை என்ற எதிர்மறைப் பொருளைத் தருவதால், இஃது எதிர்மறையின் கண் வந்தது.

1. ஒழியிசை : படித்தற்கோ இங்கு வந்தாய்? படித்தற்கன்று விளையாடுதற்கு என்று ஒழிந்த பொருளை ஒகாரம் தருதலால்—ஒழியிசை.

2. வினா : கல்வியில் நீ பெரியவனோ?

3. சிறப்பு-ஒஒ பெரியவர். உயர்வு சிறப்பு. ஒஒ கொடியவன். இழிவு சிறப்பு.

4. எதிர்மறை : யானோ அரசன்?

5. தெரிநிலை : அலியை நோக்கி ஆணோ, [அன்று] பெண்ணோ, [அன்று]-தெரிவிப்பது.

6. கழிவு : கண்ணகிக்கோ இக்கதி நேர்ந்தது?

7. அசைநிலை : வேறு பொருளின்றி நிற்பது. சொல்வது கேண்மினோ!

8. பிரிநிலை : வள்ளுவர் குறளோ மிகச் சிறப்பானது. ஒன்றைச் சிறப்பாகப் பிரித்துச் சொல்வது.

9. ஐயம் : பாம்போ? கயிறோ? (சந்தேகம்)

10. ஓசை : ஒவென்று கத்தினான்.

ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப்பு எட்டு ஒவே. (ந. சூ. 423)

Koviloor Digital Library

● 205. உம்மை இடைச்சொல்லுக்குரிய பொருள்கள் யாவை?

உம்மை இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவு, தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருள்களை உணர்த்தி வரும்.

(எ.டு) அறமும், பொருளும், இன்பமும், வீடும் அளிக்க வல்லவன் இறைவன்.

இங்கு வந்துள்ள உம்மை எண்ணும்மையாகும். அதனால், அளவு என்ற பொருளைக் குறிக்கும்.

1. எதிர்மறை : நடந்தாலும் நடக்கும். (நடவாமலும் இருக்கும் என எதிர்மறைப் பொருளைத் தருவதால் எதிர்மறை)

2. சிறப்பு : குறவரும் மருளும் குன்றம். உயர்வு சிறப்பு. நாயும் விரும்பா அழுகல். இழிவு சிறப்பு.

3. ஐயம் : துணிந்து சொல்லாமையால் ஐயம் பத்தாயினும் எட்டாயினும் கொடு.

4. இறந்தது தழுவிய எச்சம் : கண்ணனும் வந்தான். (முருகன் இதற்குமுன் வந்தான் என முன் நடந்த செய்தியைக் குறிப்பதால் இறந்தது தழுவியது)

   கண்ணனும் வந்தான். இனி முருகனும் வருவான். என்பதைக் குறிப்பதால் எதிரது தழுவியது.

5. முற்று : எல்லாரும் கற்றனர். (நிறைவான பொருள் தருவது)

6. அளவை : இயலும் இசையும் நாடகமும் கற்றார்.

7. தெரிநிலை : ஆணும் அன்று; பெண்ணும் அன்று [அலி எனத் தெரிவிக்கின்றது]

Koviloor Digital Library

8. ஆக்கம் : பால் உணவும் ஆயிற்று. (மருந்தும் ஆயிற்று என, ஆதல் பொருளில் வருவதால் ஆக்கம்)

9. விரைவு : உண்டதும் சென்றான்.

எதிர்மறை சிறப்பு ஐயம்; எச்சமுற்று அளவை
தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே (ந. சூ. 435)

● 206. மற்று என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்று, அசை நிலை, பிறிது, பின் என்னும் நான்கு பொருள்களை உணர்த்தி வரும்.

1. வினைமாற்று : கெடுப்பதூஉம் கெட்டாக்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை—மற்று வினைமாற்றுப் பொருளில் வந்துள்ளது.
2. அசைநிலை : மற்றென்னை ஆள்க (மற்று வேறு பொருளின்றி வந்துள்ளது)
3. பிறிது : ஒன்று நீலம்; மற்றொன்று சிவப்பு—பிறிது என்னும் பொருளில் வந்துள்ளது.
4. பின் : மற்று இவனும் உடன் சென்றான்.

வினைமாற்று அசைநிலை; பிறிதெனும் மற்றே (ந. சூ. 433)

● 207. மன் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

மன் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் ஆறு.

1. அசைநிலை : மாலை என்மனார் மயங்கினோரே
2. ஒழியிசை : முன் ஆண்ட வேந்துமன். இப்போது வறியன் !

Koviloor Digital Library

3. ஆக்கம் : பண்டு காடுமன் [இன்று வயல்]

4. கழிவு : சிறியகள் பெரினே எமக்கியும் மன்னே, இப்பொழுது கழிந்தது.

5. மிகுதி : எந்தை எமக்கருளுமன் (மிகுதியும் அருளுவன்.)

6. நிலைபேறு : மன்னா உலகத்து மன்னியது புரிமோ? நிலையானது.

மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்
கழிவு மிகுதி நிலைபே றாகும் (ந. சூ. 432)

● 208. கொல் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

கொல் என்னும் சொல் ஐயம், அசைநிலை, வினா ஆகிய மூன்று பொருள்களையும் உணர்த்தி வரும்.

1. ஐயம் : இவ்வளவிற் செல்லுங்கொல்?
2. அசைநிலை : கற்றதனாலாய பயன் என் கொல்?
3. வினா : சென்றவன் நீகொல்?

கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே (ந. சூ. 439)

● 209. உரிச்சொல்லின் இலக்கணம் (Attribute) யாது? அதன் வகைகளை விளக்குக.

பெயர், வினைகளைப் போல—தனித்து வந்து பொருள் உணர்த்தாமல், அவற்றை அடுத்து வந்து அவற்றின் குணங்களை உணர்த்தி வரும் சொற்கள் உரிச்சொற்களாகும். இச் சொற்கள் செய்யுளுக்கே உரியதாய் வழங்கி வருகின்றமையால் உரிச்சொற்கள் எனப்பட்டன.

உரிச்சொற்கள் குணம், தொழில், இசை, குறிப்பு என பல்வேறு வகைப்பட்ட பண்புகளை விளக்கு

Koviloor Digital Library

வனவாய் ஒரு குணம் உணர்த்தும் பல சொற்களாவும், பல குணம் உணர்த்தும் ஒரு சொல்லாகவும் வரும்.

பலவகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல் (ந. சூ. 442)

● 210. ஒருகுணம் தழுவிய பல உரிச்சொற்கள், பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல்—இவற்றை விளக்குக.

சாலப் பேசினான்; நனி தின்றான்; கழிபேருவகை. இவற்றுள் சால, நனி, கழி என்பன உரிச்சொற்கள். இவை யாவும் மிகுதி என்னும் ஒரே பொருள் உணர்த்தி வந்தமையால் ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்களாம்.

கடிஅரன்; கடிவாள்; கடிமலர்; கடிமார்பு—கடி என்ற சொல் காவல், கூர்மை, மணம், விளக்கம் என்ற பொருள்களில் கையாளப்பட்டுள்ளது. கடி என்பது பல பொருள் உணர்த்தி வருதலின் இவ்வுரிச்சொல் பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல்லாகும்.

● 211. வெளிப்படை, குறிப்பு என்றால் என்ன?

சொற்கள் வெளிப்படையாய்ப் பொருள் உணர்த்துதல் வெளிப்படை எனப்படும். குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள், குறிப்பு எனப்படும்.

● 212. குறிப்பால் பொருள் உணர்த்துவன யாவை?

குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள் ஒன்றொழிபொதுச்சொல், விகாரம், தகுதிவழக்கு, ஆகுபெயர், அன்மொழித் தொகை, குறிப்பு வினைமுற்று, முதற்குறிப்பு, தொகைக்குறிப்பு ஆகியனவும், இவை போல்வன பிறவுமாம்.

● 213. ஒன்றொழி பொதுச்சொல் என்றால் என்ன?

Koviloor Digital Library

ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டனுக்கும் பொதுவாக நிற்கும் பெயர்ச் சொல்லும், வினைச் சொல்லும் வாக்கியங்களில் அமையும் போது குறிப்பினால் இன்னபால் என்பதைத் தெளிவுபடுத்தும். அந்தச் சொற்களை ஒன்றொழி பொதுச்சொல் என்பர்.

(எ.டு) ஆயிரம் மக்கள் போர் செய்தனர்.

மக்கள் என்னும் பொதுப் பெயரும், செய்தனர் என்னும் பொதுவினையும் போர் என்ற குறிப்பால் பெண்பாலை ஒழித்து, ஆண்பாலைக் காட்டின.

இப்பெற்றங்கள் பால் சொரிந்தன. பெற்றங்கள் என்னும் பொதுப்பெயரும், சொரிந்தன என்ற பொது வினையும் பால் என்ற குறிப்பால், ஆண்பாலை ஒழித்துப் பெண்பாலைக் காட்டின.

இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்
பெயரும் வினையும் குறிப்பி னானே. (ந. சூ. 352)

● 214. இடைப்பிறவரல் என்றால் என்ன?

வேற்றுமை உருபுகள், வினைமுற்றுகள், பெயரெச்ச வினையெச்சங்கள் ஆகிய இவற்றுக்கும், இவைகொண்டு முடியும் பெயர் அல்லது வினைச் சொற்களுக்கும் இடையே அவ்விடத்திற்குப் பொருத்தமான வேறு சில சொற்கள் வரலாம். அச்சொற்களுக்கு இடைப்பிறவரல் என்பது பெயர்.

(எ.டு) இராமன் (வயிறு நிரம்ப) உண்டான்.

அறத்தை (அழகுபெறச்) செய்தான்.

வாளால் (மாய) வெட்டினான்.

தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பு எடுத்தான்.

Koviloor Digital Library

மலையினின்று (உருண்டு) விழுந்தான்.

இராமனது (பெருங்கை) யானை.

ஊர்க்கண் (உயர்ந்த ஒளி) மாடம்.

இராமா (விரைந்து ஓடி) வா.

இவற்றில், வேற்றுமை உருபுகளுக்கும் அவை கொண்டு முடியும் வினைச் சொற்களுக்கும் இடையில் பொருத்தமான சில சொற்கள் வந்துள்ளன.

வருந்தினான் [மான்பின் போன] ராமன்.

இதில் வினைமுற்றுக்கும் அது கொண்டு முடியும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே பொருத்தமான சொற்கள் வந்துள்ளன.

வந்த [வடகாசி] மன்னன்.

இதில் பெயரெச்சத்திற்கும் அது கொண்டு முடியும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே பொருத்தமான சொற்கள் வந்துள்ளன.

வந்து (பட்டினம்) திரும்பினான்.

இதில் வினையெச்சத்திற்கும் அது கொண்டு முடியும் வினைச்சொல்லுக்கும் இடையே பொருத்தமான சொற்கள் வந்துள்ளன.

உருபு முற்றீ ரெச்சம் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமாம் ஏற்பன [ந. சூ. 356]

● 215. தொகை நிலைத்தொடர் (Elliptical Pharases) என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

பெயரோடு பெயரும், பெயரோடு வினையும் தொடர்ந்து வரும்போது இடையில் வேற்றுமை உருபுகள்,

Koviloor Digital Library

வினையுருபுகள், பண்புருபு, உவம உருபு, உம் என்னும் இடைச்சொல் முதலியன மறைந்து நிற்க, ஒரு சொல் போலத் தொடர்ந்து வருதல் தொகை நிலைத் தொடராகும்.

அது வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறு வகைப்படும்.

பெயரோடு பெயரும் வினையும் வேற்றுமை.
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்(ந. சூ.361)

● 216. இயல்பு வழக்கு (Netural usage) என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

எந்தப்பொருளை, எந்தச் சொல்லால் குறிப்பிட வேண்டுமோ, அத்தச் சொல்லால் அந்தப் பொருளைக் குறிப்பிட்டு வழங்குவதே இயல்பு வழக்கு ஆகும்.

[எ.டு] ஒன்றே குலம்; ஒருவனே தேவன்.

இயல்பு வழக்கு மூன்று வகைப்படும். 1. இலக்கண முடையது; 2. இலக்கணப் போலி; 3. மருஉ.

● 217. இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மருவு இவற்றை விளக்கி எழுதுக.

1. இலக்கணத்தில் அமைந்தவாறே சொற்களை வழங்குவது இலக்கணமுடையதாகும் (Grammatical form)

[எ.டு] தமிழ் உயர்தனிச் செம்மொழியாகும்.

இவற்றிலுள்ள சொற்கள் யாவும் அவற்றிற்குரிய பொருளையே உணர்த்துகின்றன. ஒவ்வொரு சொல்லும் இயல்பு கெடாமல் நின்று பொருளைத் தருகின்றது.

Koviloor Digital Library

2. இலக்கணப்போலி (Apparent Grammatical form) என்பது இலக்கணம் இல்லாததாயினும் இலக்கணம் உள்ளது போலத் தொன்றுதொட்டு வழங்கி வருவதாகும்.

(எ.டு) வாயில்—இல்வாய் என்பது வாயில் என முன் பின்னாக மாறி வழங்குகிறது. சதை=தசை.

சதை என்ற சொல் மாறி வழங்குகிறது. தசை என்றே வழங்க வேண்டும். இவ்வாறு வருவது இலக்கணப் போலி.

3. மருஉ [Corrupt form] சொற்கள் இடையில் இலக்கண முறையில் திரிந்தும், சிதைந்தும், மருவியும் வழங்குவது.

[எ.டு] சோழநாடு என்பது சோணாடு என்றும் பெயர் என்பது பேர் என்றும் வழங்குவது மருவு மொழி யாகும்.

● 218. தகுதி வழக்கு [Appropriate usage] என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறுக.

ஒருபொருளை அதற்குரிய சொல்லால் வழங்குவது தக்கதன்று, அப்பொருள் விளங்கும்படி வேறொரு சொல்லால் கூறுவதே தகுதி என்று எண்ணி வழங்குவ தால் தகுதி வழக்காம். அஃது இடக்கர் அடக்கல்,மங்கலம், குழூஉக்குறி என மூவகைப்படும்.

இடக்கர் அடக்கல் : [Decent form] அவையில் கூறத் தகாதவற்றை மறைத்துக் கூறுவது.

(எ.டு) மலம் கழுவி வந்தேன் என்பதைக் கால் கழுவி வந்தேன் எனல்.

மங்கலம் :[Euphemism] அமங்கலமானவற்றை மங்கல மாக வழங்குதல்.

[எ.டு] இறந்தார் என்பதைச் சிவபதம் அடைந்தார் எனவும், ஓலையைத் திருமுகம் எனவும் வழங்குதல்.

Koviloor Digital Library

குழூஉக்குறி : (Conventional form) ஒரு கூட்டத்தார் தமக்குள் இட்டு வழங்கும் அடையாளப் பெயர்.

(எ.டு) பொற்கொல்லர் பொன்னைப் பறி எனவும், மது உண்போர் மதுவைச் சொல்விளம்பி எனவும் வழங்குதல்.

இலக்கணம் உடைய திலக்கணப் போலி
மருஉவென் றாகும் மூவகை இயல்பும்
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோடு ஆறாம் வழக்கியல் (ந. சூ. 267)

219. வேற்றுமைத் தொகையின் இலக்கணம் கூறி விளக்குக.

ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் இரண்டு முதலாக ஏழு வரையுள்ள வேற்றுமை உருபுகள் இடையில் மறைந்து நிற்க, இரண்டு சொற்கள் தொடர் வது வேற்றுமைத் தொகையாம்.

(எ.டு) நீர் பருகினான் —'ஐ' என்னும் இரண்டனுருபு இடையில் மறைந்துள்ளது. இரண்டாம் வேற்றுமைத் தொகை.

என் புத்தகம்—அது என்னும் ஆறனுருபு இடையில் மறைந்துள்ளது, ஆறாம் வேற்றுமைத் தொகை.

குறிப்பு ; பொற்குடம் என்பது பொன்னால் செய்யப் பட்ட குடம் என விரியும். ஆல் என்னும் மூன்றனுருபும் செய்யப்பட்ட என்னும் அதன் பொருளை விளக்கும் சொல்லும் இடையில் மறைந்துள்ளன. இவ்வாறு வருவன உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும். இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாம்.

இரண்டு முதலாம் இடைஆ றுருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே (ந, சூ. 363)

Koviloor Digital Library

● 220. வினைத்தொகையின் இலக்கணம் யாது? எடுத்துக் காட்டுத் தருக.

ஒரு பெயரெச்சத்தில் காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப் பகுதி மட்டும் ஒரு பெயரைத் தொடர்ந்து வருவது வினைத்தொகையாம்.

(எ.டு) சுடுசோறு, எறிதிரை, வளர்பிறை.

காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை (ந. சூ. 364)

● 221. பண்புத்தொகை என்றால் என்ன? உதாரணம் தருக.

பண்புச் சொல்லுக்கும், பண்பையுடைய பொருளைக் குறிக்கும் சொல்லுக்கும் இடையில் 'ஆகிய' என்னும் பண்புருபு மறைந்து வருவது பண்புத் தொகையாம்.

(எ.டு) செஞ்ஞாயிறு (செம்மையாகிய ஞாயிறு)
வெண்டிங்கள் (வெண்மையாகிய திங்கள்)

● 222. இரு பெயரொட்டுப் பண்புத்தொகை எவ்வாறு வரும்? எடுத்துக்காட்டுத் தருக.

சிறப்புப் பெயரும் பொதுப்பெயருமாய் இயைந்து ஒரு பொருளைக் குறிக்கும் இரு சொற்களுக்கு இடையே 'ஆகிய' என்னும் பண்புருபு மறைந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

(எ.டு) மார்கழித்திங்கள் (மார்கழி ஆகிய திங்கள்)
தமிழ்மொழி (தமிழாகிய மொழி)

பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை (ந. சூ 365)

● 223. உவமைத்தொகையின் இலக்கணத்தை உதாரணம் தந்து விளக்குக.

Koviloor Digital Library

உவமைச்சொல், உவமேயச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் போல, புரைய முதலிய உவம உருபுகள் மறைந்து வருவது உவமைத் தொகையாம்.

(எ.டு) மதிமுகம் (மதி போன்ற முகம்)
பவளவாய் (பவளம் போன்ற வாய்)

உவம உருபிலது உவமத் தொகையே (ந. சூ. 366)

● 224. உவமானம் உவமேயம்—இவற்றை விளக்குக.

ஒரு பொருளை விளக்குவதற்கு ஒப்பாக வரும் பொருளை உவமம், உவமை, உவமானம் என்று சொல்கிறோம். விளக்கப்படும் அல்லது சிறப்பிக்கப் படும் பொருளை—உவமேயம், பொருள் என்னும் சொற்களால் சுட்டுகிறோம்.

(எ.டு) வேல் போன்ற கண். வேல்—உவமை.
கண்—உவமேயம், பொருள்.

● 225. உவமை எவற்றின் அடிப்படையில் அமைந்து வரும்?

பண்பு, தொழில், பயன், வடிவம் ஆகிய நான்கின் அடிப்படையில் உவமை அமைந்து வரும்.

பவளம் போன்ற வாய்—பண்பு உவமை.

குயில்போல் பாடினாள்—தொழில் உவமை.

மாரிபோல் வண்கை —பயன் உவமை.

துடிபோன்ற இடை—வடிவ உவமை.

● 226. விரியுவமம் தொகையுவமம்—இவற்றை விளக்குக.

உவமை பொருள் இவற்றிற்கு இடையே இணைப்புச் சொல்லாகிய உவம உருபு வெளிப்படையாக வருமானால் அது விரியுவமம் எனப்படும்.

மலர் போன்ற முகம். மலர் உவமை, முகம் சிறப்பிக்கப்படும் பொருள். இரண்டிற்கும் இடையே வந்துள்ள போன்ற என்னும் சொல்—உவம உருபு.

Koviloor Digital Library

இவ்வாறு வருவது விரியுவமம் அல்லது உவமை விரி எனப்படும்.

உவம உருபு இடையில் தொக்கு (மறைந்து) வருவது தொகை உவமம் அல்லது உவமத் தொகையாகும். மதி முகம். உவமைக்கும் பொருளுக்கும் இடையே உவம உருபு மறைந்து வருகிறது.

● 227. உவம உருபுகள் யாவை?

போல, புரைய, ஒப்ப, உறழ, மான
கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர,
அன்ன, இன்ன, என்பன உவம உருபுகளாம்.

● 228. உம்மைத் தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து வரும் போது இடையிலும் ஈற்றிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகையாம்.

(எ.டு) ஆடல்பாடல் (ஆடலும் பாடலும்)
இராப்பகல் (இரவும் பகலும்)

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனும்நான் களவையுள் உம்மிலது அத்தொகை (ந. சூ. 368)

● 229. அன்மொழித்தொகை எவ்வாறு வரும்? உதாரணம் தருக.

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மைத் தொகைகளை அடுத்து ஈற்றில் வேறொரு சொல் மறைந்து வருவது அன்மொழித்தொகையாம். எத் தொகையை அடுத்து வருகிறதோ அதைக்கொண்டு அதன் பெயர் கூறப்படும்.

(எ.டு) சேயிழை கணவன் — சேயிழை என்பது செம்மையாகிய இழை என விரியும்; பண்புத்தொகை. அஃது இங்குச் செம்மையான இழைகளை அணிந்தவள்

Koviloor Digital Library

என்று பொருள் தருகிறது. அணிந்தவள் என்னும் சொல் ஈற்றில் மறைந்துள்ளது. இது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி (ந. சூ. 369)

● 230. ஆகுபெயருக்கும், அன்மொழித்தொகைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

□ ஆகுபெயர் :

1. ஒரு சொல்லாய் வரும்.
2. முதல், சினை முதலிய சம்பந்தத்தால் வேறு பொருள் உணர்த்தும்.
3. நியதிப் பெயராய் வரும்.
4. தொன்றுதொட்டு வரவேண்டும் என்னும் நியதி உண்டு.

□ அன்மொழித் தொகை :

1. பல சொல்லாய்த் தொடர் மொழியில் வரும்.
2. வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத்தொகை ஆற்றலால் வேறு பொருள் உணர்த்தும்.
3. நியதிப் பெயராய் வாராது.
4. தொன்றுதொட்டு வரவேண்டும் என்ற நியதி இல்லை. புதிதாகவும் வரும்.

● 231. தொகாநிலைத்தொடர் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

ஒரு சொல்லோடு மற்றொரு சொல், இடையில் பிற சொற்கள் மறைதல் இல்லாமல் தொடர்வது தொகா நிலைத் தொடராகும். அது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர், அல்வழித் தொகாநிலைத்தொடர் என இரு வகைப்படும். வேற்றுமை உருபுகள் இடையில் விரிந்து நிற்கத் தொடர்வது வேற்றுமைத் தொகாநிலைத் தொடராகும்.

Koviloor Digital Library

அஃது ஆறுவகைப்படும். வேற்றுமை அல்லாத வழியில் தொடர்வது அல்வழித்தொடராம். அஃது ஒன்பது வகைப் படும்.

(எ.டு) 1. முருகன் வந்தான்—எழுவாய்த் தொடர்.

2. முருகா வா—விளித்தொடர்.

3. படித்தான் வளவன்—தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.

4. நல்லன் இராமன்—குறிப்பு வினைமுற்றுத்தொடர்.

5. படித்தபாடம்—பெயரெச்சத் தொடர்.
பெரிய புராணம்—குறிப்புப் பெயரெச்சத் தொடர்.

6. தொடுத்து முடித்தாள்—வினையெச்சத் தொடர்.
மெல்லச் சென்றான்—குறிப்பு வினையெச்சத் தொடர்.

7. மற்றொன்று—இடைச்சொல் தொடர்.

8. கடிநகர்—உரிச்சொல் தொடர்.

9. வருக வருக—அடுக்குத் தொடர்.

முற்றீ ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடைஉரி அடுக்கிவை தொகாநிலை (ந. சூ. 374)

● 232. அடுக்குத்தொடர் என்றால் என்ன?

விரைவு, வெகுளி, மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள்களை உணர்த்துவதற்காகவும், அசை நிலையாக வும், செய்யுளில் இசை நிறைத்தற்காகவும் ஒரு சொல் இரண்டு, மூன்று, நான்குமுறை வரை அடுக்கி வருவது அடுக்குத் தொடராகும்.

[எ.டு] வாழ்க! வாழ்க! (மகிழ்ச்சி)
ஓடு, ஓடு, ஓடு, (விரைவு)

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை அடுக்கும் (ந. சூ. 395)

Koviloor Digital Library

233. இரட்டைக்கிளவியாவது யாது? விளக்குக.

இரட்டைக்கிளவி பூவிரட்டையும் இலையிரட்டையும் போலப் பிரிக்க இயலாத, பிரித்தால் பொருள் தராத இரட்டைச் சொற்களாகவே வரும். அது வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருளை உணர்த்தி வரும். இரட்டைக்கிளவி என்பது இரண்டு சொற்கள் அல்ல; இரண்டு சொற்களைப் போலத் தோன்றும் ஒரே சொல்.

(எ,டு) மரம் மடமட என்று முறிந்தது.
மழை சலசல என்று பொழிந்தது.

இரட்டைக்கிளவி இட்டிற் பிரிந்திசையா (ந. சூ. 396)

234. இரட்டைக்கிளவிக்கும், அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

இரட்டைக்கிளவி	அடுக்குத்தொடர்
1. எப்போதும் இரட்டைச் சொல்லாகவே இருக்கும்	1. இரண்டு, மூன்று நான்கு முறை வரை அடுக்கி வரும்.
2. பிரித்தால் பொருள் தராது.	2. பிரித்தால் ஒவ்வொரு சொல்லும் பொருள் தரும்.
3. வினைக்கு அடைமொழி யாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வரும்.	3. விரைவு, அச்சம், வெகுளி, உவகை முதலிய பொருள்களை உணர்த்தி அடுக்கி வரும்.

235. ஒரு பொருட்பன்மொழி என்றால் என்ன? எடுத்துக் காட்டுத் தருக.

Koviloor Digital Library

ஒரு பொருளைக் குறிக்கப் பல மொழிகளை வழங்குவது ஒரு பொருட்பன்மொழி எனப்படும். அவ்வாறு கூறுவது வழுவாயினும் சொல்லின்பம் தோன்ற சிறந்து நிற்றலின் மரபு வழுவமைதியாகக் கொள்ள வேண்டும்.

கழி உவகை (மிகுந்த மகிழ்ச்சி)

உயர்ந்து ஓங்கிய வரை [மிக உயரமான மலை]

ஒரு பொருட் பன்மொழி சிறப்பி னின்வழா (ந. சூ. 398)

● 236. இனம் குறித்தல் என்றால் என்ன? விளக்குக.

ஒரு சொல் அதன் பொருளை மட்டும் உணர்த்தாமல் அதற்கு இனமானவற்றையும் சேர்த்து உணர்த்துவது இனம் குறித்தலாம். அது வடமொழியில் உபலட்சணம் எனப்படும்.

(எ.டு) சோறு உண்டான். சோறு என்பது அதற்கு இனமான காய், கறி முதலியவற்றையும் சேர்த்துக் குறிப்பது இனம் குறித்தலாம்.

● 237. மரபு என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.

எந்தப் பொருளை எந்தச் சொல்லால் முன்னோர்கள் வழங்கினரோ, அங்ஙனமே அந்தப் பொருளை அந்தச் சொல்லாலேயே நாமும் வழங்குவதே மரபாகும்.

யானைப் பாகன்	ஆட்டு இடையன்
வாழை இலை	பனை ஓலை

● 238. வழுக்கள் [Deviation] எத்தனை வகைப்படும்?

வழுக்கள் திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, வினாவழு, விடைவழு, மரபுவழு என ஏழு வகைப்படும்.

திணையே பாலிடம் பொழுது வினாஇறை
மரபாம் ஏழும் மயங்கினும் வழுவே [ந. சூ. 375]

Koviloor Digital Library

● 239. வழுவமைதி [Sanctioned Deviation] என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்?

வாக்கிய அமைப்புகள் திணை, பால், இடம், காலம், மரபு ஆகியவை பற்றிச் சிறிதே வழுவாயினும் அவற்றை வழுவற்றது போலவே ஆன்றோர் வழங்குவர். அவ்வாறு ஆன்றோரால் வழங்கப்படுவனவற்றை 'வழுவமைதி' என்று ஏற்றுக் கொள்கிறோம். இதுவே வழுவமைதி ஆகும்.

[எ.டு] ''திங்களும் சான்றோரும் ஒப்பர்''

இதில் 'திங்கள்' அஃறிணை. 'சான்றோர்' உயர் திணை. இரண்டும் கலந்து உயர்திணை முடிவைப் பெற்றது. எனவே, திணை வழுவமைதி.

திணை வழுவமைதி, பால்வழுவமைதி, இடவழுவமைதி, காலவழுவமைதி, மரபுவழுவமைதி என அது பலவகைப்படும்.

திணைபால் பொருள் பல விரவின சிறப்பின்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே [ந. சூ. 378]

● 240. திணைவழுவமைதி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

உவப்பு, உயர்வு, சிறப்பு, மிகுதி, இழிவு முதலிய பல காரணங்களுள் ஒன்று பற்றி உயர்திணை அஃறிணையாகவும், அஃறிணை உயர்திணையாகவும் கூறப்படும். இவ்வாறு கூறுவது திணைவழுவமைதியாம்.

(எ.டு) திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் — சிறப்புக் கருதி அஃறிணை, உயர்திணை முடிவு கொண்டது.

பசுவை 'என் அம்மை வந்தாள்'—என்பது உவப்பினால் அஃறிணை, உயர்திணை முடிவு கொண்டது.

● 241. பால்வழுவமைதி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

Koviloor Digital Library

உவப்பு, உயர்வு, சிறப்பு ஆகிய காரணங்களால் ஒரு பாலை மற்றொரு பாலால் கூறுவது பால்வழுவமைதி ஆகும்.

[எ.டு] ஒருத்தி தன் மகனை 'என் அம்மை வந்தாள், என்று கூறுமிடத்து, உவப்பு காரணமாக ஆண் பால், பெண்பாலாயிற்று.

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே (ந. சூ. 379)

● 242. இடவழுவமைதியாவது யாது? விளக்கம் தருக.

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களில் ஓர் இடத்தில் பிற இடம் வருமாறு கூறுவது இடவழுவமைதியாகும்.

(எ.டு) இராமன் தாய் இவை செய்வேனோ? என்ற இடத்தில், தாயாகிய நான் என்ற தன்மையிடத்திற்குப் பதிலாகத் தாய் என்ற படர்க்கை இடம் வந்துள்ளது.

ஒருமையும் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே (ந. சூ. 380)

● 243. காலவழுவமைதியாவது யாது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு ஆகிய காரணங்களால் ஒரு காலத்தை மற்றொரு காலத்தால் கூறுவதும் உண்டு. முக்காலத்திலும் ஒரு தன்மையவாய் நிகழும் பொருளை நிகழ்காலத்தால் கூறுவது காலவழுவமைதி ஆகும்.

[எ.டு] 1. எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது— மழை பெய்யும் என்று எதிர் காலத்தில் கூறவேண்டும். ஆனால் தெளிவு பற்றி இங்கு இறந்த காலத்தால் கூறப் பட்டுள்ளது.

Koviloor Digital Library

2. மலை நிற்கிறது; ஆறு ஓடுகிறது; கடல் அலை வீசுகிறது. முக்காலத்திலும் ஒத்தியல் பொருள்கள் நிகழ்காலத்தில் வைத்துக் கூறப்பட்டன.

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே. (ந. சூ. 383)

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமும் ஏற்புழி (ந. சூ. 384)

● 244. மரபுவழுவமைதி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

1. வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்கள் சேர்ந்து வரும்பொழுது, அவற்றிற்குரிய பொது வினையைக்கொண்டு முடிக்காமல் சிறப்பு வினையைக் கொண்டு முடித்தலும் உண்டு.

2. கேட்காதனவும், பேசாதனவுமாகிய அஃறிணை களைக் கேட்பன போலவும், பேசுவன போலவும் கொண்டு கூறுதலும் உண்டு.

3. செயப்பாட்டு வினையைச் செய்வினை வாய் பாட்டால் கூறுவதுமுண்டு. இவை யாவும் மரபு வழுவமைதியாம்.

[எ. டு] 1. மாலையும் முடியும் கவித்தான். மாலை சூடினான்; முடிகவித்தான் என்று சொல்லுதல் வேண்டும். சிறப்புக் கருதி கவித்தான் என்னும் ஒருவினை கொண்டு முடிந்தன.

2. நெஞ்சே உரையாய்; பேசாத நெஞ்சை பேசுவ தாகக் கொண்டு கூறப்பட்டுள்ளது.

3. இவ்வோவியம் யான் வரைந்தது— என்னால் வரையப்பட்டது எனக்கூற வேண்டும். செயப்படு பொருளைச் செய்ததுபோலக் கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

● 245. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை? விளக்குக.

அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல் வினா, கொடைவினா, ஏவல்வினா என்று வினா ஆறு வகைப்படும்.

1. ஆசிரியர் மாணவனை நோக்கி, 'இப்பாடற்குப் பொருள் யாது?' என்று வினாவுவது அறிவினா. தனக்குத் தெரிந்த ஒன்றைப் பிறருக்குத் தெரியுமா என்று அறியக் கேட்பது அறிவினா.

2. மாணவன் ஆசிரியரை நோக்கி 'இப்பாடலின் பொருள் யாது? எனக் கேட்பது அறியாவினா. தனக்குத் தெரியாத ஒன்றைப் பிறரிடம் அறிந்து கொள்வதற்காகக் கேட்பது அறியாவினா.

3. 'அங்குக் கிடப்பது பாம்போ கயிறோ?' என்று வினாவுவது ஐயவினா. தனக்குச் சந்தேகமாய் இருக்கும் ஒன்றை அச்சந்தேகம் தீர்த்துக் கொள்ளக் கேட்பது ஐயவினா.

4. 'அரிசி இருக்கிறதா?' எனக் கடையில் ஒருவன் கேட்பது கொளல் வினா. தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளக் கருதி, அப்பொருள் இருத்தலைப் பற்றி வினாவுவது கொளல் வினா,

5. 'பயணச் செலவிற்குப் பணம் இருக்கிறதா?' என்று பணம் இல்லாதவனுக்குக் கொடுக்கும் கருத்தோடு ஒருவன் வினாவுவது கொடைவினா. தான் ஒரு பொருளைக் கொடுப்பதற்காக அப்பொருள் இருத்தலைப் பற்றி வினாவுவது கொடைவினாவாகும்.

6. மகனை நோக்கித் தந்தையார், 'கணக்குகளைப் போட்டு விட்டாயா?' என்று கேட்பது ஏவல் வினா. ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவுவதற்காக அத்தொழில் நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்பது இவ்வினாவாகும்.

அறிவறி யாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார் (ந. சூ. 385)

Koviloor Digital Library

● 246. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை? விளக்குக.

விடை எட்டு வகைப்படும். அவை யாவன :

1. சுட்டுவிடை, 2. மறைவிடை, 3, நேர்விடை, 4. ஏவல்விடை, 5. வினாஎதிர் வினாதல்விடை, 6. உற்ற துரைத்தல்விடை, 7. உறுவதுகூறல்விடை, 8. இன மொழிவிடை.

இவற்றுள் சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை ஆகிய மூன்றும் வினாவுக்கேற்ற விடைகளாகும். ஏனைய ஐந்தும் குறிப்பால் விடைப்பொருள் உணர்த்து தலின் விடையாகக் கொள்ளப்படும்.

1. 'மதுரைக்கு வழியாது?' என்று கேட்டால், இது என்று சுட்டிச் சொன்னால் அது சுட்டுவிடையாகும்.

2. 'இதனைச் செய்வாயா?' என்றால், செய்யேன் என்று கூறுவது மறைவிடை. ஒன்றை மறுத்துக் கூறுவதால் மறைவிடை ஆயிற்று.

3. 'இதனைச் செய்வாயா?' என்றால், செய்வேன் என்று விடை கூறுதல் நேர்விடை. ஒன்றை உடன் பட்டுக் கூறும் விடை நேர்விடையாம்.

4. 'இதனைச் செய்வாயா?' என்றால், நீயே செய் என்பது ஏவல்விடை. விடுத்த வினாவுக்கு எதிராக ஏவுதல் மூலம் விடைகொடுத்தல் ஏவல்விடையாகும்.

5. 'நீ நாளை வருவாயோ?' என்னும் வினாவுக்கு, வாரேனோ என்று விடை கூறுதல், வினா எதிர் வினாதல் விடை. விடுத்த வினாவுக்கு எதிரான வினாவின் மூலம் விடை கொடுத்தல் வினா எதிர் வினாதல் விடையாம்.

6. 'நீ ஏன் வரவில்லை?' என்பதற்குத் தலை வலித்தது என்று கூறுவது, உற்றது உரைத்தல் விடை. தனக்கு நேர்ந்த ஒன்றைக் கூறி விடையைக் குறிப்பாகப் பெற வைப்பது உற்றதுரைத்தல் விடையாம்.

Koviloor Digital Library

7. 'கல்லைக் குத்துவாயோ?' என்பதற்குக் 'கை நோகும்' என விடை கூறுதல், உறுவது கூறல் விடை. தனக்கு நேரக்கூடிய ஒன்றைக் கூறி விடையைக் குறிப்பாகப் பெற வைத்தல் உறுவதுகூறல் விடையாகும்.

8. 'பயறுளதோ?' என்பதற்கு உளுந்து உள்ளது என விடை கூறுதல் இனமொழி விடை. வினாப் பொருளுக்கு இனமான ஒன்றைக் கூறி, விடையைக் குறிப்பாகப் பெறவைப்பது இனமொழி விடையாம்.

சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற துரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனுமெண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்துமப் பொருண்மையின் நேர்ப (ந. சூ. 386)

● 247. செவ்வன் இறை, இறைபயப்பன என்றால் என்ன?

சுட்டுவிடை, எதிர்மறைவிடை, நேர்விடை ஆகிய மூன்றுவிடைகளும் வினாவுக்கு ஏற்ற விடைகள். வினாவிற்கேற்ற விடையைச் செவ்வன் இறை என்று கூறுவர் :

ஏவல்விடை, வினாஎதிர் வினாதல்விடை, உற்றது உரைத்தல்விடை, உறுவது கூறல்விடை, இனமொழி விடை ஆகிய ஐந்தும் குறிப்பால் விடைப்பொருள் தருவன. ஆகையால் இவைகளும் விடைகளாகக் கொள்ளப்படும். விடைகளாகக் கொள்ளப்படுவனவற்றை இலக்கண நூல், இறைபயப்பன என்று கூறும்.

● 2'8. அடைமொழி (Epithet) என்றால் என்ன? எடுத்துக் காட்டுத் தந்து விளக்குக.

ஒரு பொருளைச் சிறப்பிப்பதற்காக அதனை அடுத்து வரும் மொழி, அடைமொழியாகும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும்

Koviloor Digital Library

அறுவகைப் பெயரும் ஒன்றற்கு இனமுள்ள அடைமொழியாகவும் இனமில்லா அடைமொழியாகவும் வரும்.

(எ.டு) 1. தயிர்க்குடம் : தயிர் என்னும் பொருட்பெயர் அடைமொழியாக வந்துள்ளது. இதற்கு இனமாக மோர்க்குடம், நெய்க்குடம் முதலியன உள்ளன. அவற்றை விலக்கவே இந்த அடைமொழி வந்துள்ளது. ஆதலால், இஃது இனமுள்ள அடைமொழி.

2. செஞ்ஞாயிறு : செம்மை என்னும் பண்புப்பெயர் அடைமொழியாக வந்துள்ளது. செஞ்ஞாயிற்றுக்கு இனமான கருஞாயிறு என ஒன்று இல்லை. செம்மை என்னும் அடை, இனத்தை விலக்க வந்ததன்று. இஃது இனமில்லா அடைமொழியாம்.

249. இனமுள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழி- இவை ஆறுவகைப் பெயர்களைக் கொண்டு முடியும். எவ்வாறு?

பெயர்		□ இனமுள்ள அடைமொழி
1.	பொருள் :	நெய்க்குடம் (பாற்குடம்)
2.	இடம் :	மலை நெல் (வயல் நெல்)
3.	காலம் :	கார்த்திகைப்பிறை (தைப்பிறை)
4.	சினை :	பழமரம் (பூ மரம்)
5.	பண்பு :	வெண்பட்டு (செம்பட்டு)
6.	தொழில் :	ஊன்றுகோல் (ஊதுகோல்)

□ இனமில்லா அடைமொழி

உப்பளம்—தென்குமரி—வேனிற்காலம்.

இலைமரம்—வெண்திங்கள்—தோய்தயிர்.

குறிப்பு : 'அளம்' என்பது உப்பு விளையும் இடத்தைக் குறிக்கும். அதற்கு இனமாக வேறொன்று விளையும் இடத்தை அளம் எனக் கூறுவது இல்லை. எனவே, உப்பு என்ற அடைமொழி இனத்தை விலக்க

Koviloor Digital Library

வராமல் பொருளைச் சிறப்பிக்கவே வந்தது. ஆதலால், அஃது இனமில்லா அடைமொழியாகும்.

வடகுமரி என்று இல்லாதிருந்தும் தென்குமரி என்றும், மழைக்காலத்து மலரும் கோங்கம் என ஒன்று இல்லாதிருந்தும் வேனில் கோங்கம் என்றும், இலையில்லாத மரம் என ஒன்று இல்லாமலிருந்தும் இலைமரம் என்றும், கருந்திங்கள் இல்லாதிருந்தும் வெண்திங்கள் என்றும், தோயாத தயிர் இல்லாதிருந்தும், தோய்தயிர் என்றும் அடைமொழி கொடுத்துக் கூறப்பட்டவை யாவும் இனமில்லா அடைமொழிகளேயாம்.

● 250. பொருள்கோள் (Modes of Constructing Verses) என்பது யாது?

செய்யுளில் பொருள் செல்லும் தன்மைக்கேற்பச் சொற்களை வரிசைப்படுத்திப் பொருத்தமான பொருளைக் கொள்ள வேண்டும். இதனையே பொருள் கோள் என வழங்குவர்.

● 251. பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பொருள்கோள் எட்டு வகைப்படும். அவையாவன : 1. யாற்றுநீர்ப் பொருள்கோள், 2 மொழிமாற்றுப் பொருள்கோள், 3. நிரல்நிறைப் பொருள்கோள், 4. பூட்டுவிற் பொருள்கோள், 5. தாப்பிசைப் பொருள்கோள், 6. அளைமறிபாப்புப் பொருள்கோள், 7. கொண்டு கூட்டுப்பொருள்கோள், 8. அடிமறி மாற்றுப் பொருள்கோள்.

யாற்றுநீர் மொழிமாற்று நிரல்நிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டு கூட்டு
அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே (ந. சூ. 411)

● 252. யாற்று நீர்ப்பொருள்கோள் எவ்வாறு வரும்? எடுத்துக் காட்டுத் தருக.

Koviloor Digital Library

யாற்று நீர், ஒரே திசையை நோக்கி ஓடுவது போலச் செய்யுளில் சொற்கள் அமைந்துள்ள அம்முறையிலேயே பொருள் கொள்ளும்படி இயல்பாக அமைந்திருப்பது யாற்றுநீர்ப் பொருள்கோள் ஆகும்.

(எ.டு)

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

இதில் சொற்கள் அமைந்துள்ள முறையிலேயே பொருளும் தெளிவாகக் கிடைக்கின்றது.

மற்றைய நோக்காது அடிதோறும் வான்பொருள்
அற்றற்று ஒழுகும் அஃதியாற்றுப் புனலே (ந. சூ. 412)

253. மொழிமாற்றுப் பொருள்கோள் என்பது யாது? எடுத்துக் காட்டுடன் விளக்குக.

செய்யுளில் கருத்துக்குப் பொருந்தும் வகையில் ஓரடிக்குள்ளேயே உள்ள சொற்களைப் பொருட் பொருத்தமுற மாற்றியமைத்து உண்மைப் பொருளைக் காண்பது மொழிமாற்றுப் பொருள்கோள்.

(எ.டு) சுரைஆழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்தும் முயற்கு நிலைஎன்ப
கானக நாடன் சுனை.

இதில் சுரை மிதப்ப, அம்மி ஆழ எனவும் யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனவும் ஒரடியுள் மொழிகளை மாற்றித் தக்க பொருள் கொள்கிறோம். இது மொழி மாற்றுப் பொருள்கோள்.

ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை
மாற்றியோர் அடியுள் வழங்கல் மொழிமாற்றே (ந. சூ.413)

254. நிரல்நிறைப் பொருள்கோள் என்பது யாது? தக்க எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

Koviloor Digital Library

எழுவாய்ச் சொற்களை ஒரு வரிசைப்படி எழுதி அம்முறையிலேயே அவ்வவற்றிற்குரிய பயனிலைகளையும் எழுதி முறையே பொருள் பெற வைப்பது நிரல் நிறைப் பொருள்கோள் எனப்படும்.

(எ.டு)

உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னால்
எடுத்ததுவும் பள்ளிக் கியையப்-படுத்ததுவும்
அந்நாள் எறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும்
பொன்னா வரைஇலை காய்பூ.

இதில் உடுத்தது - பொன் (பொன்னாடை)
மேய்த்தது - ஆ (பசு)
எடுத்தது - வரை (மலை)
படுத்தது - இலை (ஆலிலை)
எறிந்தது - காய் (விளங்காய்)
இரந்தது - பூ (அன்பர்கள் இடும் பூ; பூமி)

என முறையே பெயரும் பயனிலையும் அமைந்து வந்தது.

● 255. எதிர்நிரல் நிறைப் பொருள்கோளை விளக்கி எழுதுக.

எழுவாய்ச் சொற்களை ஒரு வரிசைப்படுத்தி, அவற்றிற்குரிய பயனிலைகளை எதிர் நிலையாக அமைத்துப் பொருள்கொள்வது எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

[எ.டு] களிறும் கந்தும் போல நளிகடல்
கூம்பும் கலனும் தோன்றும்
தோன்றல் மறந்தோர் துறைகெழு நாட்டே.

இதில் களிறு - கலன் (கப்பல்): கந்து-கூம்பு (பாய்மரம்) என முறை மாறி (வரிசையில் இல்லாமல்) வருவதால் எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் ஆகும்.

Koviloor Digital Library

பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறீஇ முறையுனும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரல்நிறை நெறியே (ந. சூ. 414)

● 256. பூட்டுவிற் பொருள்கோளை விளக்கி எழுதுக.

இறுதிச் சொல்லை முதற்சொல்லோடு இயைத்துப் பொருள் கொள்வது பூட்டுவிற் பொருள் கோளாகும். [பூட்டுவில் - நாண் பூட்டப்பட்ட வில்]

[எ.டு] திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்து படின் பெரிதாம் ஏதம்-உறந்தையர்கோன்
தண்ணார மார்பன் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

இதில், 'கதவு திறந்திடுமின்' என இறுதிச்சொல்லை முதற் சொல்லோடு இயைத்துப் பொருள் கூறுதலால் பூட்டுவிற் பொருள்கோள் ஆயிற்று:

எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்
பொருள்நோக் குடையது பூட்டுவில்லாகும் [ந. சூ. 415]

● 257. தாப்பிசைப் பொருள்கோள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

செய்யுளில் ஒரு சொல் அல்லது சில சொற்கள் நடுவே அமைந்து ஊசலின் கயிறுபோல முன்னும் பின்னும் சென்று, இயைந்து பொருள் கொள்ளச்செய்வது தாப்பிசைப் பொருள்கோள் ஆகும்-

(எ.டு) உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊன் உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

இதில், 'ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை எனவும் ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு எனவும் இடையே உள்ள ஊன்' என்ற சொல் இருபுறமும் சென்று இயைந்து பொருள் தந்தது.

Koviloor Digital Library

● 258. அளைமறிபாப்புப் பொருள்கோள் எவ்வாறு வரும்? எடுத்துக்காட்டுத் தருக.

ஒரு செய்யுளின் இறுதிச்சொற்கள் தலைகீழாய் இடையிலும் முதலிலும் சென்று இயைந்து பொருள் தருவது அளைமறிபாப்புப் பொருள்கோள் ஆகும்.

(எ.டு)

தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித்
தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியில்
சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணி நலிய முன்செய்த வினையென்றே
முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்தும் நெறிமுன்னி
ம்யலா தாரே.

இதில் வாழ்ந்த பொழுதினே வானெய்தும் நெறி முன்னி முயலாதார்; மூழ்ந்த பிணி நலிய முன்செய்த வினை என்றே முனிவார்; சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியில் சுழல்வார்; தாழ்ந்த உணர்வின ராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார் எனத் தலைகீழாய்த் இடையிலும் முதலிலும் சென்று இயைந்து பொருள் தந்தது,

விளக்கம் : அளை—புற்று; பாப்பு—பாம்பு; அளைமறி பாப்பு—புற்றில் தலைவைத்து வணங்கும் பாம்பு. பாம்பு புற்றில் தலையை வைத்தவுடன் தலையைப் புற்றின் வாயை நோக்கித் திருப்பிக்கொண்டு தன் உடலை மெதுவாக உள்ளே இழுக்கும். அப்போது உடலின் இடைப்பாகமும் இறுதிப்பாகமும் தலையுடன் உராய்ந்து கொண்டு செல்லும். அது போலச் செய்யுளின் இறுதி, முதலாக நிலைமாறி நின்று இடையில் உள்ள சொற் களும் முதலில் உள்ள சொற்களும் இயைந்து பொருள் கொள்ளுமாறு அமைவதால்-அளைமறிபாப்புப் பொருள் கோள் என்று பெயர் பெற்றது.

Koviloor Digital Library

செய்யுள் இறுதி மொழியிடை முதலிலும்
எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே (ந. சூ. 417)

● 259. கொண்டு கூட்டுப் பொருள்கோள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

ஒரு செய்யுளில் பல அடிகளிலும் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருள் தொடர்ச்சிக்கேற்பக் கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோள்.

[எ.டு]

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.

இதில்,

'வங்கத்துச் சென்றார் வரின்' அஞ்சனத்தன்ன
பைங்கூந்தலையுடைய தலைவியினது மாமேனியில்
தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட கோழி

வெண்முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம் எனக் கூட்டுக.

[பசலை—பிரிவினால் உண்டாகும் நிறவேறுபாடு]

யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே [ந. சூ. 418]

● 260. அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்பது யாது? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

பொருளுக்கு ஏற்ற வகையில் செய்யுள் அடிகளை எடுத்துக் கூட்டிப் பொருள் கொள்ளுமாறு வருவதும், செய்யுளின் எந்த அடியை இறுதியிலும் இடையிலும் முதலிலும் இயைத்துக் கூறினாலும் பொருளும், ஓசையும் மாறாமல் வருவதும் அடிமறிமாற்றுப் பொருள்கோளாம்.

Koviloor Digital Library

[எ.டு] மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யான்வாழு மாறே.

இதில் எந்த அடியை எங்கே கூட்டினாலும், பொருளும், ஓசையும் வேறுபடாமல் வந்துள்ளது. ஆகவே இஃது அடிமறிமாற்றுப் பொருள்கோளாகும்.

ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்
யாப்பு ஈறு இடைமுதல் ஆக்கினும் பொருள்இசை
மாட்சியும் மாறா அடியவும் அடிமறி [ந. சூ. 419]

உறுப்பிலக்கண விளக்கம்

[Analysis of words]

● 261. பகுபதத்தின் உறுப்புகள் யாவை? விளக்குக.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பவை பகுபதத்தின் உறுப்புகளாம்.

1. பகுதி : [Root] சொல்லின் முதல் நிலையாய் இருப்பது. வினைச்சொல்லில் கருத்தாவின் செயலைக் குறிப்பது.

2. விகுதி [Termination] : சொல்லின் கடைசியாய் இருப்பது. வினைச்சொல்லின் விகுதிகள் திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

3. இடைநிலை (Middle Particle) : இடைநிலை பெயரிடைநிலை என்றும், வினையிடைநிலை என்றும் இருவகைப்படும். பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் நிற்பது இடைநிலை ஆகும். வினையிடைநிலைகள் காலத்தைக் காட்டும்.

4. சாரியை (Eubhonic Particle) : விகுதிக்கும் இடை நிலைக்கும் இடையே வரும் இணைப்பு இடைச்சொல்லே

Koviloor Digital Library

சாரியை ஆகும். விகுதியைச் சார்ந்து வருவதனால் சாரியை எனப் பெயர் பெற்றது.

5. சந்தி [Combination] : பகுதியும், இடைநிலையும் சேரும்பொழுது தோன்றல், திரிதல், கெடுதல் என்ற விதிப்படி வரும் எழுத்துகளே சந்தியாக வரும்.

6. விகாரம் (Changes in letters inversification) : பகுதியும், இடைநிலையும் சந்திக்கும்போது ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும். விகாரம் [மாற்றம்] பகுதியிலும், இடைநிலையிலும், சந்தி எழுத்திலும் ஏற்படும்.

● 262. பகுபத உறுப்பிலக்கணம். சொற்கள் :

1. நடந்தனன்=நட+த்+த்+அன்+அன். நட—பகுதி, ஈற்றில் உள்ள அன்—விகுதி, அதற்குமுன் உள்ள அன்—சாரியை, த்—இறந்தகால இடைநிலை, த்—சந்தி, 'த்' 'ந்' ஆக மாறியது விகாரம்.

2. படித்தேன்=படி+த்+த்+ஏன். படி—பகுதி, ஏன்—விகுதி, த்—இறந்தகால இடைநிலை, த்—சந்தி,

3. தேற்றாதான்=தேற்று+ஆ+த்+ஆன். தேற்று—பகுதி, ஆன்—படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி. 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை, த்—எழுத்துப்பேறு.

4. தந்தேன்=தா+த்+த்+ஏன். தா—பகுதி. ஏன்—தன்மை ஒருமை வினைமுற்று விகுதி, த்—இடைநிலை, த்—சந்தி, 'த்' 'ந்' ஆகியது விகாரம்.

5. உவக்கின்றாள்=உவ+க்+கின்று+ஆள். உவ—பகுதி. கின்று - நிகழ்கால இடைநிலை, ஆள்-படர்க்கை பெண்பால் வினைமுற்று விகுதி, 'க்' சந்தி.

6. காட்டுகேன்=காட்டு+க்+ஏன். காட்டு—பகுதி. ஏன்—விகுதி, க்—எதிர்கால இடைநிலை.

7. தொடேன்=தொடு+ஆ+ஏன், தொடு—பகுதி, ஆ எதிர்மறை இடைநிலை, ஏன்—தன்மை வினைமுற்று விகுதி. இடைநிலை 'ஆ' புணர்ந்து கெட்டது.

Koviloor Digital Library

8. நல்கிய= நல்கு+ய்+இன்+அ நல்கு — பகுதி இன்—இடைநிலை, அ—பெயரெச்ச விகுதி, ய்-என்பது சந்தி. இடைநிலை மறைந்தது.

9. இறைஞ்சிய = இறைஞ்சு + இன்+ய்+அ. இறைஞ்சு—பகுதி, அ—பெயரெச்ச விகுதி, இன்—இறந்த கால இடைநிலை. 'ய்' உடம்படுமெய்.

10. ஒசிந்த=ஒசி+த்+த்+அ. ஒசி-பகுதி, அ-பெயரெச்ச விகுதி, த்—இடைநிலை, த்—சந்தி, 'த்' 'ந்' ஆக மாறியது விகாரம்.

11. தந்தனன்=தா+த்+த்+அன்+அன். தா-பகுதி, அன்—விகுதி, த்—இடைநிடை, அன்—சாரியை, த்-சந்தி, த்' 'ந்' ஆனது விகாரம்.

12. போயினான்=போ+ய்+இன்+ஆன். போ—பகுதி, ஆன்—விகுதி, இன்—இடைநிலை, ய்—சந்தி.

13. அழைப்பான்=அழை+ப்+ப்+ஆன். அழை—பகுதி, ஆன்—விகுதி, ப்—இடைநிலை, ப்—சந்தி.

14. உகந்து=உக+த்+த்+உ. உக - பகுதி, உ—வினையெச்ச விகுதி, த்—இடைநிலை, த்—சந்தி, 'த்', 'ந்', ஆனது விகாரம்.

15. ஈட்டிய=ஈட்டு+இன்+ய்+அ. ஈட்டு- பகுதி, இன்—இடைநிலை. இறந்தகாலம் காட்டியது. ய்—உடம்படுமெய், அ—விகுதி.

16. உண்ணாய்=உண்+ஆய் உண் பகுதி. ஆய்—முன்னிலை விகுதி.

17. வருதிர்=வா+ர்+த்+இர்= வா—பகுதி. இர்—முன்னிலை விகுதி, இர்—சந்தி, த்—எழுத்துப்பேறு.

18. நின்மே=நில்+ம்+ஏ. நில்—பகுதி, ஏ—முன்னிலை விகுதி, ம்—எழுத்துப்பேறு.

Koviloor Digital Library

19. விட்டான் = விடு + ஆன், விடு-பகுதி. ஆன்-விகுதி. பகுதியின் ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது.

20. திருமினான் = திரும் + இன் + ஆன். திரும்—பகுதி ஆன்—விகுதி, இன்—இறந்தகால இடைநிலை.

21. சென்றான் = செல் + ற் + ஆன். செல்—பகுதி ஆன்—விகுதி, ற்—இறந்தகால இடைநிலை. செல், சென் என்று ஆகியது விகாரம்,

22. வெளவினான் = வெள + வ் + இன் + ஆன், வெள—பகுதி. ஆன்—விகுதி, இன்-இடைநிலை, வ்—சந்தி.

23. பொருநினான் = பொருந் + இன் + ஆன். பொருந்—பகுதி, ஆன்—விகுதி, இன்—இடைநிலை.

24. கேட்டான் = கேள் + ட் + ஆன். கேள்—பகுதி, ஆன்—விகுதி, ட்—இறந்தகால இடைநிலை பகுதியின் ஈற்றெழுத்து ள், ட் ஆக மாறியது விகாரம்.

25. வாழ்கிலேன் = வாழ் + க் + இல் + ஏன். வாழ்-பகுதி, ஏன்-விகுதி, இல்-எதிர்மறை இடைநிலை, க் – சந்தி.

சொற்றொடர் வரலாறு

● 263. சொற்றொடர் (Sentence) என்பது என்ன?

சொற்கள் சேர்ந்து நின்று முழுக்கருத்தைத் தெரிவிப்பது வாக்கியம் அல்லது சொற்றொடர் எனப் படும். சொற்றொடரில் முக்கியமாக எழுவாயும் பயனிலையும் இருக்கும். பல கருத்துகள் இருந்தாலும் முடிந்த கருத்து ஒன்றுதான் இருக்கும்.

சொற்றொடர் உறுப்புகள் மூன்று; எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்.

● 264. எழுவாய் (Subject) என்றால் என்ன?

எழு—வாக்கியம் எழுவதற்கு, வாய்-இடம். எழுவாய் என்பது வாக்கியம் உண்டாவதற்கு இடமாக இருப்பது.

Koviloor Digital Library

இது வாக்கியத்தில் தொழிலைச் செய்கின்ற கருத்தாவைக் குறிக்கும் சொல்லாகும்.

(எ.டு) ஔவையார் நல்வழியை இயற்றினார்.

இவ்வாக்கியத்தில் இயற்றுதலாகிய தொழிலைச் செய்யும் கருத்தா, ஔவை என்பது தெரிகிறது. ஔவை என்னும் சொல்லே இங்கு எழுவாயாகும்.

பெரும்பாலும் பெயர்ச்சொல்லே எழுவாயாக வரும். சிறுபான்மை நிகழ்கால வினையெச்சமும் எழுவாயாக வரும்.

(எ.டு) வேலனுக்குப் பாடத்தெரியும்—
(வேலனுக்குப் பாட்டுத் தெரியும்)

பாட (நிகழ்கால வினையெச்சம்) என்பது எழுவாய்.

● 265. ஒரு வாக்கியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய் வருமா?

ஒரு வாக்கியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய் இருத்தலும் உண்டு. எழுவாய்கள் அடுக்கி வந்தால் பயனிலை பன்மையில் முடியும்.

(எ டு) சேர, சோழ, பாண்டியர் தமிழை வளர்த்தனர்.

● 266. எழுவாய் இல்லாமல் சொற்றொடர் வருமா?

எழுவாய் இல்லாமல் சொற்றொடர் அமைவதில்லை. தற்கூற்றில் மட்டுமே தன்மை, முன்னிலை, எழுவாய் மறைந்து வரும். அப்படி மறைந்து நிற்கும் எழுவாய் 'தோன்றா எழுவாய்' எனப்படும்.

[எ.டு]
திருக்குறளைப்படி—(நீ-முன்னிலை-தோன்றா எழுவாய்)
திருக்குறளைப் படிக்கிறேன்— (நான்-தன்மை-தோன்றா எழுவாய்)

● 267. பயனிலை (Predicate) என்பது என்ன?

பயன் –எழுவாயின் பயன், நிலை நிற்கும் இடம்.

Koviloor Digital Library

பயனிலை என்பது எழுவாயின் பயனைத் தன்னிடத்தே நிலைத்திருக்கச் செய்வது. இஃது எழுவாய் [கருத்தா] செய்யும் தொழிலைக் காட்டி வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்கும் சொல்லாகும்.

[எ.டு]

சேரன் செங்குட்டுவன் கனகவிசயனை வென்றான். சேரன் செங்குட்டுவன்— எழுவாய். வென்றான்— பயனிலை.

● 268. செயப்படுபொருள் [Object] என்பது என்ன?

செய்-எழுவாய் செய்தலை; படுபொருள்-அடையும் பொருள். செயப்படுபொருள் என்பது எழுவாய் செய்யும் தொழிலை ஏற்கும் சொல்லாகும். இஃது இரண்டாம் வேற்றுமைப் பெயர்ச் சொல்லாகவே இருக்கும்.

[எ.டு] இளங்கோ சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

இளங்கோ—எழுவாய்; செய்த தொழிலை ஏற்றது சிலப்பதிகாரம். அதனால் சிலப்பதிகாரத்தை என்னும் சொல்லே செயப்படுபொருள்.

● 269. பயனிலையைக் காணும் முறை யாது?

வாக்கியத்தின் கருத்தை முடித்து நிற்கும் சொல்லே பயனிலை ஆகும்.

● 270. செயப்படுபொருளைக் காணும் முறையாது?

பயனிலையுடன் யாரை, எதை, எவற்றை எனும் சொற்களில் பொருத்தமான ஒன்றைச் சேர்த்துக் கேட்டால், கிடைக்கும் பதிலே செயப்படுபொருளாகும்.

[எ.டு]

சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையை இயற்றினார்.

இயற்றினார்—என்பது பயனிலை. எதை இயற்றினார் என்று கேட்டால், மணிமேகலையை என்னும் பதில் கிடைக்கிறது. இதுவே, செயப்படுபொருள் ஆகும்.

Koviloor Digital Library

வாக்கிய வகைகள்

● 271. வாக்கியங்கள் (Sentence) எத்தனை வகைப்படும்?

தனிவாக்கியம், கூட்டுவாக்கியம், கலப்புவாக்கியம் என்று வாக்கியம் மூன்று வகைப்படும்.

● 272. தனிவாக்கியம் [Simple Sentence] எவ்வாறு வரும்? விளக்குக.

1. ஒரு எழுவாயும் ஒரே முற்றுப் பயனிலையும் உள்ள வாக்கியம் தனிவாக்கியம்.

[எ.டு] காக்கை கரைகிறது. வளவன் படித்தான்.

2. ஓர் எழுவாய், ஒரு முற்றுப்பயனிலை, ஒரு செயப்படுபொருள் உள்ள வாக்கியமும் தனிவாக்கியம் ஆகும்.

[எ.டு] இராசராசன் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினான்.

3. பல எழுவாய்கள் ஒரு முற்றுப்பயனிலையைப் பெற்று வருவதும் தனிவாக்கியம். இதில் 'உம்' என்னும் இடைச்சொல் வரும்.

(எ.டு) போப்ஐயரும் வீரமாமுனிவரும் கால்டுவெல் ஐயரும் தமிழைப் போற்றினர்.

● 273. கூட்டுவாக்கியம் [Compound Sentence] அல்லது தொடர் வாக்கியம் எவ்வாறு வரும்?

ஓர் எழுவாயும் பல முற்றுப் பயனிலைகளும் சேர்ந்து நிற்பது கூட்டுவாக்கியம் அல்லது தொடர் வாக்கியம் ஆகும்.

[எ.டு] தமிழர்கள் தனிப்பண்பு உடையவர்கள்; வீரத்தில் சிறந்தவர்கள்; நன்றி மறவாதவர்கள்; விருந்தோம்பலிற் சிறந்தவர்கள்.

Koviloor Digital Library

● 274. கலப்பு வாக்கியம் [Complex Sentence] [கலவை வாக்கியம்] எவ்வாறு வரும்?

ஒரு தலைமை வாக்கியமும் ஒன்று அல்லது பல துணைவாக்கியங்களும் கலந்து வருவது கலப்புவாக்கியம் ஆகும். இவ்விரண்டு வாக்கியங்களும் கூடும்போது— என்று, என்பது முதலிய இணைப்புச் சொற்களுள் ஒன்று இடையில் வரும்.

(எ.டு) திருவள்ளுவர், "ஒருவனுக்குப் பணிவும் இன்சொல்லும் வேண்டும்" என்று கூறியுள்ளார்.

இராமன் இராவணனைப் பார்த்து, "இன்று போய் நாளை வா" என்று கூறினான்.

முதன்மை வாக்கியத்தைத் தொடர்ந்து பல சார்பு வாச்கியங்கள் வருதலும் உண்டு.

நேர்க்கூற்று, அயற்கூற்று

● 275. நேர்க்கூற்று [Direct action] எவ்வாறு வரும்?

ஒருவர் நேரில் கூறியபடியே ஒரு சொல்லையும் மாற்றாமல் தன்மை இடத்திற்கேற்பக் கூறுவது நேர்க் கூற்றாகும். நேர்க்கூற்றை மேற்கோள் குறியிட்டு எழுதுதல் வேண்டும்.

(எ.டு) திருநாவுக்கரசர், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார்.

● 276. அயற்கூற்று (Indirect action) எவ்வாறு வரும்?

நேர்க்கூற்றின் பொருள் மாறுபடாதவாறு ஆங்காங்கு சொல்லை மாற்றிப் படர்க்கையிடத்திற்கேற்பக் கூறுவது அயற்கூற்று ஆகும். அயற்கூற்றில் இரட்டை மேற்கோள் குறி இராது. அயற்கூற்றில் 'ஆகச்சொன்னான்,

Koviloor Digital Library

என்பதாகக் சொன்னான், என்று சொன்னான், ஆகும் என்றான்' என்பன போன்ற சொற்கள் வந்து முடியும்.

(எ.டு) திருநாவுக்கரசர் தம் கடன் பணிசெய்து
கிடப்பதே என்றார்.

அவர், தாம் கூட்டத்திற்குப் பேச வருவதாகச் சொன்னார்.

● 277. நேர்க்கூற்று வாக்கியத்தை அயங்கூற்று வாக்கியமாக மாற்றும்போது கவனிக்க வேண்டியவை யாவை? சொற்கள் எவ்வாறு மாறும்?

நேர்க்கூற்று	அயற்கூற்று
இது	அது
இவை	அவை
இன்று	அன்று
இப்பொழுது	அப்பொழுது
இங்கு	அங்கு
இதனால்	அதனால்
நேற்று	முன்னாள்
நாளை	மறுநாள்
நான்	தான் (தாம்)
நாம், நாங்கள்	தாம், தாங்கள்
நீ	அவன், அவள்
நீங்கள்	அவர்கள்

செய்வினை, செயப்பாட்டுவினை

● 278. செய்வினை (Active verb) எவ்வாறு வரும்?

செய்த பொருளுக்கு முதன்மை தருவது செய்வினை ஆகும்.

(எ.டு) கம்பர் இராமாயணத்தை இயற்றினார்.
தச்சன் நாற்காலியைச் செய்தான்.

Koviloor Digital Library

● 279. செயப்பாட்டுவினை [Passive verb] எவ்வாறு வரும்?

செய்யப்பட்ட பொருளுக்கு முதன்மை கொடுப்பது செயப்பாட்டு வினையாகும்.

(எ.டு) இராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டது.
நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது.

செய்வினையுடன் படு, உண் என்னும் துணை வினைகளைச் சேர்த்தால் செயப்பாட்டு வினையாக மாறும்.

செய்வினை முதல்வேற்றுமைக் கருத்தா. செயப்பாட்டு வினையில்— மூன்றாம் வேற்றுமை கருத்தாவாக மாறும்.

● 280. நிறுத்தக்குறிகள் (Punctuations)

நாம் பேசும் பொழுதும், படிக்கும் பொழுதும் கருத்து விளங்குமாறு, வேண்டிய இடங்களில் நிறுத்தியும், குரலைத் தாழ்த்தியும், உயர்த்தியும் பேசுகிறோம்; படிக்கிறோம். எழுதும் பொழுதும் கருத்து விளங்குமாறு அங்கங்கே சில குறிகளை இடுகிறோம். அவையே நிறுத்தக் குறிகளாம்.

1. முற்றுப்புள்ளி (Full stop) (.) : 1. வாக்கியத்தின் முடிவிலும், 2. சொற் குறுக்கங்களுக்குப் பின்னும், 3. தந்தை பெயர், ஊர்ப்பெயர் ஆகியவற்றைக் குறிக்கும் குறுக்கங்களை அடுத்தும், 4. முகவரியின் கடைசியிலும் முற்றுப்புள்ளி இடுதல் வேண்டும். 5. முற்றுப் புள்ளி இடும் இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

2. முக்காற்புள்ளி [Colon] (:) : 1. சிறு தலைப்புகளுக்குப் பின்னும், 2. வாக்கியத்தில் கூறிய ஒன்றை விரித்துக் கூறுமிடத்திலும் முக்காற்புள்ளி இடவேண்டும். இதற்கு மூன்று மாத்திரை நேரம் நிறுத்துதல் வேண்டும் என்பது பொருள்.

Koviloor Digital Library

3. அரைப்புள்ளி (Semicolon) (;) : 1. ஓர் எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடியும்போது, கடைசியில் உள்ள பயனிலையைத் தவிர்த்து ஏனைய பயனிலைகளின் பின்னாலும், 2. உடன்பாடு எதிர்மறைக் கருத்துகளை இணைத்துக் கூறும்போது இடையில் உள்ள பயனிலையை அடுத்தும் அரைப்புள்ளி இடவேண்டும். 3. எடுத்துக்காட்டு உவமை அணியில் முதலில் வரும். பயனிலையை அடுத்தும் அரைப்புள்ளி இடவேண்டும். அரைப்புள்ளி இடும் இடத்தில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்துதல் வேண்டும்.

4. காற்புள்ளி (Comma) (,) : 1. பொருள்களை எண்ணும்போது காற்புள்ளி இடவேண்டும். 2. வினையெச்சத்தின்பின் பொருள் விளக்கத்திற்காக காற்புள்ளி இடவேண்டும். 3. இணைமொழிகளின் இடையில் காற்புள்ளி இடவேண்டும். 4. மேற்கோள் குறி தொடங்கு முன் காற்புள்ளி இடவேண்டும். 5. எனவே, ஆயினும், ஆகையால், எனினும், என்றாலும், ஆகவே, ஆதலின் போன்ற இணைப்புச் சொற்களுக்குப்பின் காற்புள்ளி இடவேண்டும். 6. கடிதத்தில் வரும் விளிக்குப் பின்னரும் காற்புள்ளி இடவேண்டும். 7. முகவரியில் குறிப்பிடும் வீட்டு எண், தெரு முதலியவற்றுக்குப்பின் காற்புள்ளி வரும். இக்குறியிடும் இடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்துதல் வேண்டும்.

5. வினாக்குறி (Question mark) (?) : வினா வாக்கியத்தின் முடிவில் வினாக்குறி இடவேண்டும். இக்குறியிட்ட இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்துதல் வேண்டும்.

6. உணர்ச்சிக்குறி (Interjection mark) (! : 1. வியப்பு, அச்சம், உவகை, இரக்கம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொற்களை அடுத்தும் இக்குறி இடவேண்டும். 2. விளியை அடுத்தும் இக்குறி இடலாம். இக்குறி இட்ட இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

Koviloor Digital Library

7. மேற்கோள்குறி (Double qoutation) (''—'')

1. நேர்க்கூற்று தொடங்கும் இடத்திலும், முடியும் இடத்திலும், 2. மேற்கோளை எடுத்தாளும் போது முன்னும் பின்னும் இரட்டை மேற்கோட்குறி இட வேண்டும். 3. நேர்க்கூற்றுக்குள் நேர்க்கூற்று வரும் போதும், சிறப்புப் பெயர்கள், குறியீடுகள் ஆகிய வற்றைக் குறிக்கும் போதும் ஒற்றை மேற்கோள் குறியிட வேண்டும்.

281. ஒற்றை மேற்கோள்குறி எங்கு வரும்? விடை முன்பத்தியில் காண்க.

புணர்ச்சி
[Combination]

282. புணர்ச்சியாவது யாது?

ஒரு சொல்லுடன் மற்றொரு சொல் வந்து கூடிக் குழைவது—பொருந்தி நிற்பது புணர்ச்சி எனப்படும். புணர்ச்சிக்கு இரண்டு சொற்கள் வேண்டும். ஒரு சொல் நிற்கும். மற்றொரு சொல் வந்து சேரும். நிற்கும் மொழி நிலைமொழி எனப்படும். வந்து சேரும் மொழி வருமொழி என்று பெயர் பெறும். நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் பொருத்தமாகச் சேர்வ தையே 'புணர்ச்சி'யென இலக்கண நூல் கூறுகிறது.

மெய்யுயிர் முதலீறாம் இருப தங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே (ந. சூ. 151)

283. புணர்ச்சி எழுத்து வகையால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

புணர்ச்சி எழுத்து வகையால் நான்கு வகைப்படும். அவையாவன :

Koviloor Digital Library

1. உயிர்முன் உயிர்—வாழை+இலை.
2. உயிர்முன் மெய்—வாழை+பழம்.
3. மெய்முன் உயிர்—பொன்+ஒளி.
4. மெய்முன் மெய்—பொன்+தாலி.

● 284. பொருள் வகையால் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

வேற்றுமைப் புணர்ச்சியென்றும், அல்வழிப்புணர்ச்சி யென்றும் பொருள் வகையால்—புணர்ச்சி இரண்டு வகைப்படும்.

● 285. உயிரீறு—மெய்யீறு; விதியீறு—இயல்யீறு இவற்றை விளக்கி எழுதுக.

ஈறு—ஈற்றெழுத்தாகும். மொழியின் ஈற்றெழுத்தாக உயிர் அல்லது உயிர்மெய்யெழுத்து வருமானால் உயிரீறு எனப்படும்.

(எ.டு) 'ஆடு' ஈற்றெழுத்து 'டு'. இது, ட்+உ=டு. உகரம் சொல்லின் இறுதியில் உள்ளது. இஃது உயிரீறு எனப்படும்.

மொழியின் ஈற்றெழுத்து மெய்யாக வருமானால் மெய்யீறாகும். மண் என்னும் சொல்லின் ஈற்றெழுத்து ணகரமெய். இது மெய்யீறாகும்.

இயல்பீறு :- இயல்பாக நிற்பது, மாறுபடாதது. நான் என்னும் மொழியின் ஈற்றில் னகரம் இயல்பாக நின்றது.

விதியீறு :- புணர்ச்சி விகாரத்தால் வருவது.

நூல் + முகம் = நூன்முகம். நிலைமொழியின் ஈற்றெழுத்தாகிய லகரம், னகரமாகத் திரிந்து நின்றது விதி யீறாகும்.

● 286. உயிர்முதல் மெய்முதல், என்றால் என்ன?

Koviloor Digital Library

சொல்லின் முதலில் உயிரெழுத்து வருமானால் உயிர் முதல் எனப்படும்.

(எ.டு) அன்னை, ஆறு, எழில்.

சொல்லின் முதலில் மெய்யெழுத்து வருமானால் மெய்முதல் எனப்படும்.

(எ-டு) தந்தை — உயிர்மெய்யில் மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னுமாய் அமைந்திருத்தலின் மெய் முதலாயிற்று.

● 287. இருவகைப் புணர்ச்சிகள் யாவை? சான்றுகாட்டி விளக்குக.

இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என்று புணர்ச்சி இருவகைப்படும்.

நிலைமொழியும் வருமொழியும் எந்தவித மாறுபாடு மில்லாமல் சேர்ந்து நிற்பதே இயல்பு புணர்ச்சியாகும்.

(எ-டு) மரம்+பெரிது=மரம்பெரிது.

ஒளி+மணி=ஒளிமணி.

நிலைமொழியும் வருமொழியும் தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய விகாரங்கள் உண்டாகுமாறு கூடி நிற்பது விகாரப்புணர்ச்சியாகும்.

[எ.டு] பூ+கொடி=பூங்கொடி—மெய் தோன்றியது.

பொன்+சிலை=பொற்சிலை—ஈற்றுமெய் திரிந்தது

மரம்+வேர்=மரவேர்— ஈற்றுமெய் கெட்டது.

● 288. வேற்றுமைப் புணர்ச்சியாவது யாது?

வேற்றுமை உருபுகள் மொழிக்கு இடையில் மறைந்து நின்றேனும், வெளிப்படையாக நின்றேனும் பதங்கள் தம்முள் பொருந்தும் தொடர்ச்சியே வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

Koviloor Digital Library

'ஐ' முதலிய உருபுகள் மறைந்து நிற்க— நிலைமொழியும் வருமொழியும் சேர்வது வேற்றுமைத் தொகையாகும். (தொக்கு நிற்பது தொகை)

(எ.டு) நாற்காலி செய்தான்.
சோறு உண்டான் தொகை.

நாற்காலியைச் செய்தான் என்றும், சோற்றை உண்டான் என்றும் விரியும்.

வேற்றுமை உருபுகள் மறையாமல் வெளிப்பட்டு நிற்க, நிலைமொழியும் வருமொழியும் பொருத்தமுறக் கூடுவது வேற்றுமைவிரி எனப்படும். இதனைத் தொகாநிலைத் தொடர் எனவும் கூறுவர்.

● 289. அல்வழிப் புணர்ச்சியாவது யாது?

வேற்றுமை அல்லாத வழியில் சொற்கள் புணர்வது அல்வழிப் புணர்ச்சியாகும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் தனியாக உருபு இன்மையால், இவ்விரண்டு வேற்றுமைகளும் அல்வழிப் புணர்ச்சியில் சேரும்.

(எ.டு) வட்டமுகம், காய்கதிர், பொல்லா மனிதர், கண்ணன் வந்தான், பூங்கோதை.

● 290. அல்வழிப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

அல்வழிப்புணர்ச்சி தொகைநிலைத் தொடர், தொகா நிலைத் தொடர் என்று இரண்டு வகைப்படும்.

உவம உருபுகள், இடைநிலைகள், பண்புருபுகள், உம்மைகள், மற்றும் சில சொற்கள் தொக்குவர, நிலைமொழியும் வருமொழியும் கூடி நிற்பதே தொகை நிலைத் தொடர் எனப்படும்.

(எ.டு) கருங்குதிரை–பண்புத்தொகை.
(கருமையாகிய குதிரை)

Koviloor Digital Library

நிலைமொழி வருமொழிக்கிடையே சொல் மறைந்து நிற்காமல்—பொருத்தமுறக் கூடி நிற்பது தொகாநிலைத் தொடராகும்.

(எ,டு) படித்த பையன்—பெயரெச்சத் தொடர்.

291, அல்வழிப்புணர்ச்சியில் வரும் தொகைநிலைத் தொடர்களை விளக்குக.

1. வினைத்தொகை — கொல்யானை—வினைச் சொல்லின் காலம்காட்டும் இடைநிலை தொக்கது.
2. பண்புத்தொகை — பசும்புல். (பண்புருபு தொக்கது)
3 உவமத்தொகை — மலர்முகம். (உவம உருபு தொக்கது.)
4. உம்மைத்தொகை — புத்தகம் எழுதுகோல், (இடையினும் ஈற்றினும் உம்மைகள் தொக்கு நின்றன)
5. அன்மொழித்தொகை — கார்குழல் வந்தாள். (பிறமொழிகள் தொக்கு நின்றன)

292. தொகாநிலைத் தொடர்கள் யாவை?

1. எழுவாய்த் தொடர் — கோதை வந்தாள்.
2. விளித்தொடர் — கண்ணா... வா.
3. பெயரெச்சத்தொடர் — செய்த நூல்.
4. வினையெச்சத்தொடர் — கற்றுத் தேர்வேன்.
5. தெரிநிலை வினைமுற்றுத்தொடர்— வந்தான் இளங்கோ.
6, குறிப்புவினைமுற்றுத்தொடர் — பெரியன் சாத்தான்.

Koviloor Digital Library

7. இடைச்சொற்றொடர் — மற்றொன்று.

8. உரிச்சொற்றொடர் — நனிதின்றான்.

9. அடுக்குத்தொடர் — பாம்பு! பாம்பு!

வேற்றுமை ஐம்முதல் ஆறாம் அல்வழி
தொழில் பண்புஉவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளிஈரெச்சம் முற்று இடைஉரி
தமுவுதொடர் அடுக்கு எனஈ ரேழே (ந. சூ. 152)

● 293. மொழிக்கு ஈராக வரும் எழுத்துகள் யாவை?

உயிரெழுத்துகளுள் 'எ' நீங்கலாக ஏனைய பதினொன்றும், 'ங்' நீங்கலாக உள்ள மெல்லின எழுத்துகள் ஐந்தும், இடையின மெய்யெழுத்துகள் ஆறும் ஆக இருபத்திரண்டு எழுத்துகளும் மொழிக்கு ஈற்றெழுத்தாக வரும். குற்றியலுகரமும் மொழிக்கு ஈற்றெழுத்தாக அமைந்து வரும்

(எ.டு) உயிர் எழுத்துகள்—11

பல, பலா, கிளி, தீ, கொடு, பூ, சே, காலை, நொ, கோ, கௌ.

மெல்லினம்—5. உரிஞ், மண், வெரிந், மரம், பொன்.

இடையினம்—6. தாய், வேர், கால், தெவ், வாழ், வாள்.

குற்றியலுகரம்—நான்கு, காசு, காடு, கத்து, உப்பு, பற்று.

● 294. தோன்றல் விகாரமாவது யாது?

நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது புதிதாக ஓர் எழுத்து அல்லது ஒரு சாரியை தோன்றுவது தோன்றல் விகாரமாகும்.

[எ.டு] வாழை+பழம்=வாழைப்பழம்.

கீரை+கறி=கீரைக்கறி. இத்தொடர்களில் புதிதாக ஓர் எழுத்து தோன்றியது.

Koviloor Digital Library

புளி+பழம்=புளியம்பழம். அம் சாரியை புதிதாகத் தோன்றியது.

295. திரிதல் விகாரமாவது யாது?

நிலைமொழியும் வருமொழியும் புணரும் பொழுது ஓர் எழுத்து, வேறோர் எழுத்தாகத் திரிந்து [மாறுபட்டு] நிற்பதே திரிதல் விகாரமாகும்.

(எ.டு) கல்+சிலை=கற்சிலை.

நிலைமொழியின் ஈற்றெழுத்தாகிய லகரம், றகரமாக மாறுபட்டது.

296. கெடுதல் விகாரம் என்பது யாது?

சொற்கள் புணரும் பொழுது நிலைமொழியின் ஈற்றெழுத்து மறைந்து (கெட்டு) புணர்வது கெடுதல் விகாரம் எனப்படும்.

நிலம்+வலயம் = நிலவலயம்— நிலைமொழியீற்று மெய் மகரம் கெட்டது.

பல+பொருள்=பல்பொருள்—நிலைமொழி ஈற்றுயிர் கெட்டது.

குறிப்பு : தோன்றல், திரிதல், கெடுதல் இம்மூன்றும் புணர்ச்சி விகாரமாகும்.

297. செய்யுள் விகாரங்கள் எவை?

செய்யுளில் அடி, தொடை முதலியவற்றை நோக்கி வரும் மாறுபாடுகள் செய்யுள் விகாரம் எனப்படும்.

செய்யுள் விகாரம் ஆறுவகைப்படும். அவையாவன:

1. வலித்தல் விகாரம், 2. மெலித்தல் விகாரம், 3. நீட்டல் விகாரம், 4. குறுக்கல் விகாரம், 5. விரித்தல் விகாரம், 6. தொகுத்தல் விகாரம். அடி, தொடை நோக்கி

Koviloor Digital Library

முதற்குறை, இடைக்குறை, கடைக்குறையும் செய்யுளில் வரும்.

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தல் வரும்செய்யுள் வேண்டுழி [ந. சூ. 155]

● 298. வலித்தல் விகாரம் எவ்வாறு வரும்?

செய்யுளில் அடி, தொடை (எதுகை, மோனை, இயைபு) நோக்கி, செய்யுளில் உள்ள மெல்லெழுத்து தனக்கு இனமான வல்லின மெய்யாகத் திரிவது வலித்தல் விகாரம்.

"அரக்கரோர் அழிவுசெய்து கழிவரேல் அதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக்கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ?"

இரண்டாம் அடியில் இயல்பாக வரவேண்டிய குரங்கு என்ற சொல், முதலடியில் உள்ள அரக்கர் என்ற சொல்லை நோக்கி எதுகைக்காகக் குரக்கு என விகாரப் பட்டு வந்ததால் வலித்தல் விகாரமாயிற்று.

● .299. மெலித்தல் விகாரமாவது யாது?

ஒரு சொல்லில் உள்ள வல்லெழுத்து அடி, தொடை நோக்கி அதற்கு இனமான மெல்லின மெய்யாகத் திரிந்து நிற்பது மெலித்தல் விகாரமாகும்,

(எ.டு) "தண்டையின் இனக்கிளி கடிவோள்
பண்டையள் அல்லள் மானோக் கினளே"

இப்பாடலின் முதலடியில் தட்டை என்றே வர வேண்டும். இரண்டாம் அடியின் பண்டையள் அல்லள் என்ற சொல்லிற்கு எதுகைப் பொருத்தம் வேண்டி 'தண்டை' என்று விகாரப்பட்டு வந்ததால் மெலித்தல் விகாரமாயிற்று. (தட்டை—கிளியோட்டும் கருவி)

● 300. நீட்டல் விகாரம் என்பது யாது?

Koviloor Digital Library

ஒரு சொல்லில் உள்ள குற்றெழுத்து அடி, தொடை நோக்கி நெட்டெழுத்தாக நீண்டு வருவது—நீட்டல் விகாரமாகும்.

(எ.டு) 'மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே'

இப்பாடல் அடியில் 'நிழல்' என்று வரவேண்டிய சொல் 'நீழல்' என்று நீண்டது நீட்டல் விகாரமாயிற்று.

● 301. குறுக்கல் விகாரம் எவ்வாறு வரும்? சான்று காட்டி விளக்குக.

ஒரு சொல்லில் உள்ள நெட்டெழுத்து அடி, தொடை, நோக்கி குற்றெழுத்தாக விகாரப்பட்டு வருவது, குறுக்கல் விகாரமாகும்.

(எ,டு)
...யானை...எருத்தத்து இருந்த இலங்கு இலைவேல் தென்னன் திருத்தார் நன்றென்றேன் தியேன்.

'தீயேன்' என்று இருக்க வேண்டிய சொல் செய்யுளின் இறுதிச்சீர் நோக்கி, 'தியேன்' என்று குறுகிற்று. இவ்வாறு நெட்டெழுத்து, குற்றெழுத்தாகக் குறுகி நிற்பது குறுக்கல் விகாரமாம்.

● 302. விரித்தல் விகாரம் எவ்வாறு வரும்? சான்று காட்டுக.

ஒரு சொல் அடி, தொடை நோக்கி விரிந்து நிற்பது விரித்தல் விகாரம் ஆகும்.

(எ.டு) ஒரு நாள் பழகினும் பெரியோர்க் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

வீழ்க்குமே என்பது இங்கு வீழ்க்கும்மே என்று விரிந்தது. இறுதிச்சீர் ஈரசையாகும் பொருட்டும், இசை நயம் கருதியும் மகரம் விரிந்ததால், இது விரித்தல் விகாரமாயிற்று.

Koviloor Digital Library

● 303. தொகுத்தல் விகாரமாவது யாது?

சொல் அல்லது சொற்றொடர் அடி, தொடை நோக்கி எழுத்துக் குறைந்து வருவது தொகுத்தல் விகாரமாகும்.

(எ.டு) தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.

'தொட்டது அனைத்து' என்றும் 'கற்றது அனைத்து' என்றும் வர வேண்டியவை, 'தொட்டு' 'கற்று' என வந்து தொகுத்தல் விகாரமாயிற்று.

● 304. முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை—இவற்றை விளக்குக.

முதற்குறை : செய்யுளில் வரும் ஒரு சொல்லின் முதல் எழுத்து அடி, தொடை நோக்கிக் குறைந்து வருவது முதற்குறையாகும்.

'மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி'

தாமரை இதழ் என்னும் தொடர், மரையிதழ் என்று முதலெழுத்து நீங்கி, முதற்குறை விகாரமாயிற்று.

இடைக்குறை : செய்யுளில் வரும் சொல்லின் இடை எழுத்து, அடி, தொடை நோக்கிக் குறைந்து வருவது, இடைக்குறையாகும்.

(எ.டு) 'என்னனைக் கிலங்கு மார்பம் ஈந்தானை'

இங்கு அன்னைக்கு என்ற தொடரின் நடுவெழுத்து குறைந்து, அனைக்கு என்றாகி இடைக்குறை விகாரமாயிற்று.

கடைக்குறை : செய்யுளில் வரும் ஒரு சொல்லின் ஈற்றெழுத்து அடி, தொடை நோக்கிக் குறைந்து வருவது கடைக்குறையாகும்.

(எ.டு) 'நீல்உண் துகிலிகை கடுப்ப'

Koviloor Digital Library

'நீலம்'—இதன் இறுதியில் உள்ள 'அம்' குறைந்து 'நீல்' என நின்று கடைக்குறையாயிற்று.

குறிப்பு : முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை ஆகிய மூன்றும் பகாப்பதத்தில் மட்டுமே வரும்.

ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே [ந. சூ. 156]

● 305. மெய்+ஞான்றது. கை+நீண்டது. மெய்+மாட்சி. கை + நீட்சி. இச்சொற்கள் எவ்வாறு புணரும்? புணர்ச்சி விதி கூறுக.

அல்வழி.	மெய் + ஞான்றது	= மெய்ஞ்ஞான்றது.
	கை + நீண்டது	= கைந்நீண்டது.
வேற்றுமை.	மெய் + மாட்சி	= மெய்ம்மாட்சி.
	கை + நீட்சி	= கைந்நீட்சி.

என வரும்.

எண்மூ எழுத்தீற்று எவ்வகை மொழிக்கும் குற்றெழுத்தின் பின்னால் நிற்கும் யகர மெய்யும்—ஓரெழுத்தொரு மொழியில் வரும் ஐயும், மொழியீறாகுமானால்—மெல்லினம் வருமொழியானால்,மெல்லினம்மிகும் என்பது விதி. இவ்விதிப்படி மெல்லினம் மிகுந்து வந்தது.

● 306. வினாப் பெயர், வினாக்களின் முன்வரும் வல்லினம் எவ்வாறு புணரும்?

'யா' என்னும் வினாப் பெயர் முன்னும்—ஆ, எ, ஒ என்னும் மூன்றீற்று வினாக்களின் முன்னும் வரும். வல்லினம் இயல்பாக வரும்.

[எ.டு]

நம்பியா	+ கொடுத்தான்	= நம்பியா கொடுத்தான்?
பாலனா	+ பாடினான்	= பாலனா பாடினான்?
சோழனே	+ கொடுத்தான்	= சோழனே கொடுத்தான்?
கம்பனோ	+ பாடினான்	= கம்பனோ பாடினான்?

ஈற்றுயா வினாவிளிப் பெயர் முன் வலி இயல்பே. (ந. சூ. 160)

Koviloor Digital Library

● 307. உடம்படு மெய்யை [Cunjoining consonants] விளக்கி எழுது.

நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உயிரெழுத்துகள் வருமாயின், அவ்வெழுத்துகள் ஒன்றுபடுவதில்லை. விட்டிசைத்தே நிற்கும். அவ்வெழுத்துகளை உடன்படுத்தும் மெய்யாக யகரமும் வகரமும் தோன்றும். இந்த எழுத்துக்களை உடன்படுமெய் என்று இலக்கண நூலார் கூறுவர்.

மணி + அழகு = மணியழகு—யகர உடன்படுமெய்

பலா + இலை =பலாவிலை—வகர உடன்படுமெய்

● 308. யகர, வகர உடம்படு மெய்கள் தோன்றும் இடங்களை விளக்கி எழுதுக.

'இ, ஈ, ஐ' முன்னர் உயிர் எழுத்து வந்தால் யகரம் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

'அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ'—ஆகிய உயிரெழுத்துகள் நிலைமொழியீறாக நிற்க வருமொழி உயிரெழுத்தாயின் வகரம் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

'ஏ' என்னும் உயிரெழுத்தின்முன் உயிரெழுத்து வருமொழி முதலானால், யகரம் அல்லது வகரம் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

[எ.] இ. கனி (இ) + உதடு=கனியுதடு
ஈ. தீ (ஈ) + எழில்=தீயெழில்
ஐ. விலை (ஐ) + ஏற்றம்=விலையேற்றம்
இ, ஈ, ஐ முன் யகரம் உடும்படு மெய்யானது.
அ. பல + ஆடுகள்=பலவாடுகள்
ஆ. பலா + இலை=பலாவிலை
உ. நடு + ஏடு=நடுவேடு
ஊ. பூ + இதழ்=பூவிதழ்
ஒ. நொ + அழிவு=நொவ்வழிவு
ஓ. கோ + இல்=கோவில்

Koviloor Digital Library

(ஔ) கௌ+இழிவு=கௌவிழிவு
(கௌ—மனவருத்தம்)

அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ முன் வகரம் உடம்படு மெய்யாக வந்தது.

அவனே+இவன்=அவனேயிவன்
தே + ஆரம் = தேவாரம்.

'ஏ' முன் யகரமும் வகரமும் உடம்படு மெய்யாக வந்தன.

இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வரின் வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும். (ந. சூ. 162)

● 309. பொதுப்பெயர்கள் யாவை? உயர்திணைப் பெயர்கள் யாவை? இப்பெயர்களின் முன் வல்லினம் எவ்வாறு புணரும்?

சாத்தன், கொற்றன், ஆண், முடவன், சாத்தி, கொற்றி, பெண், முடத்தி என்பன பொதுப்பெயர்கள்.

நம்பி, விடலை, ஊரன்—உயர்திணைப் பெயர்கள். இவற்றின் முன் வல்லினம் வந்தால் இருவழியும் திரியாது இயல்பாகும்.

(எ.டு) சாத்தன் தலைவன், சாத்தன்கை.
ஊரன் குறியன், ஊரன்கை.
சாத்தி குறியள், சாத்திகண்.
நம்பி குறியன், நம்பிகை.
விடலை குள்ளன், விடலைதலை.

● 310. யகர, ரகரவீற்று உயர்திணைப் பெயர்கள் ,வருமொழி வல்லின மெய்களுடன் புணரும் நிலையை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

தாய் என்னும் யகரவீற்றுப் பெயர் முன் வல்லினம் இயல்பாக வரும்.

Koviloor Digital Library

தாய்+கை	=	தாய்கை
தாய்+பெரியவள்	=	தாய்பெரியவள்
தாய்+செவி	=	தாய்செவி
தாய்+கரியள்	=	தாய்கரியள்.

அவர் என்னும் ரகரவீற்றுப் பெயர், முன் வல்லினம் இயல்பாகும்.

அவர்+கரியர்	=	அவர்கரியர்
அவர்+பெரியர்	=	அவர்பெரியர்

● **311. உயர்திணைப் பெயர்களில் விகாரப்புணர்ச்சிகளுள் நான்கினை விளக்குக.**

மெய்யீறும் உயிரீறுமாகிய உயர்திணைப் பெயர்களுள் சில பெயர்கள் நாற்கணங்களோடு புணரும் பொழுது, நிலைமொழிகள், வருமொழிகள் விகாரப் படுதலும் உண்டு.

1. கபிலன்+பரணன் = கபிலபரணன்.
   வடுகன்+நாதன்=வடுகநாதன்.
2. கந்தன்+கோட்டம்=கந்தகோட்டம்,
   ஆசீவகர்+பள்ளி=ஆசீவகப்பள்ளி.
3. வாணிகர்+தெரு=வாணிகத்தெரு.
   சமணர்+பள்ளி=சமணப்பள்ளி.
4. மக்கள்+பண்பு=மக்கட்பண்பு.

● **312. எகரவினா முச்சுட்டின் முன்னர் உயிர் வரின் எவ்வாறு புணரும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக**

1. எகர வினாவின் முன் உயிரெழுத்து வரின் வகரம் தோன்றும்.

எ+உயிர்=எவ்வுயிர். எ+அணி=எவ்வணி

2. சுட்டெழுத்தாகிய அ, இ, உ இவற்றின் முன் உயிர் வரின் வகரம் தோன்றும்.

Koviloor Digital Library

அ+ஆடை=அவ்வாடை. இ+அணி=இவ்வணி.
உ+அணி=உவ்வணி. உ+ஆடு=உவ்வாடு.

● 313. யகரவினா முச்சுட்டின் முன்னர் நாற்கணங்களும் வரின் எங்ஙனம் புணரும்?

வினா எழுத்தாகிய எகரத்தின் முன்னும், சுட்டெழுத்தாகிய அ, இ, உ இவற்றின் முன்னும் உயிரெழுத்து வந்தால் வகரம் தோன்றும்.

உயிரெழுத்தைத் தவிர மற்றவெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் வந்தால்— வந்த எழுத்தே தோன்றும்.

1. எ+அணி=எவ்வணி. இ+ஓடம்=இவ்வோடம்.
   அ+ஆடு=அவ்வாடு. உ+அணி=உவ்வணி.

2. எ+குதிரை=எக்குதிரை—வல்லினம்
   எ+மனிதன்=எம்மனிதன்—மெல்லினம்
   எ+ஙனம்=எங்ஙனம்.
   இ+கட்டிடம்=இக்கட்டிடம்—வல்லினம்
   அ+பக்கம்=அப்பக்கம்.
   இ+வகை=இவ்வகை--இடையினம்.

● 314. சுட்டெழுத்து நீண்டால் இடையில் பெறும் எழுத்துகள் யாவை? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

செய்யுளில் சுட்டெழுத்து நீண்டால் யகரம் தோன்றும்.

(எ.டு) அ+இடை=ஆயிடை. சுட்டு நீண்டது. யகரம் தோன்றியது.

எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே (ந. சூ. 163)

Koviloor Digital Library

● 315. குற்றியலுகரவீற்றின் முன் உயிர் வரின், எவ்வாறு புணரும்?

குற்றியலுகரச் சொற்களின் முன்னே உயிரெழுத்தை முதலாகவுடைய சொற்கள் வந்தால், குற்றியலுகரம் கெட்டு, நிலைமொழியீற்றிலுள்ள மெய்யின்மேல் வருமொழி முதலின் உயிர் சேர்ந்து புணரும்.

[எ.டு] வரகு + அருமை = வரகருமை.
காசு + அருமை = காசருமை.
மரபு + உயர்வு = மரபுயர்வு.

● 316. குற்றியலுகரவீற்றின் முன் யகரம் வரின், எவ்வாறு புணரும்?

குற்றியலுகரச் சொற்களின் முன்னால் யகரத்தை முதலாகக் கொண்ட சொல் வந்தால், உகரம் இகரமாகத் திரியும்.

[எ.டு] நாகு+யாது=நாகியாது.
நினக்கு+யான்=நினக்கியான்.

● 317. முற்றியலுகரம், குற்றியலுகரப் புணர்ச்சி விதியைப் பெற்று வருமா? எடுத்துக்காட்டுத் தருக.

முற்றியலுகரமும் குற்றியலுகரப் புணர்ச்சி விதியைப் பெற்றுப்புணரும். உயிர்வரின், முற்றியலுகரத்தின் உகரம் கெடும். நிற்கும் மெய்யுடன் உயிர் வந்து கூடும்.

[எ.டு] செலவு+ஆனது=செலவானது.
கதவு+யாது=கதவுயாது.

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றும் மற்றொரோ வழி (ந. சூ. 164)

● 318. உயிரீற்றின் முன் வல்லினம் எவ்வாறு புணரும்?

இயல்பீறாகவும், விதியீறாகவும் நின்ற உயிர்முன் வருமொழி வல்லினம் (க, ச, த, பக்கள்) வந்தால் பெரும்பாலும் வல்லெழுத்து மிகுந்து வரும்.

Koviloor Digital Library

ஆடுஉ + குறியன் = ஆடுஉக்குறியன்
செட்டி + தெரு = செட்டித்தெரு. } இயல்பீறு

ஒற்றை + கல் = ஒற்றைக்கல்
வட்டம் + கல் = வட்டகல் } விதியீறு

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும் விதவாதன மன்னே [ந. சூ. 165]

● 319. மரப்பெயர் முன் வல்லினம் வரின் எவ்வாறு புணரும்?

உயிரினை ஈராகக் கொண்ட மரப்பெயர் நிலை மொழியாய் நிற்க, வருமொழியின் முதலெழுத்து வல்லின மெய்யானால், அம்மெய்யெழுத்து இனமான மெல்லின மெய்யெழுத்து இடையில் தோன்றும்.

(எ.டு) விள + காய் = விளங்காய்.
மா + கொம்பு = மாங்கொம்பு.
மா + பழம் = மாம்பழம்.

மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து
வரப்பெறு நவுமுள வேற்றுமை வழியே. [ந. சூ. 166]

● 320. பல, சில எனும் இவை தம்முன் தாம்வரின் எவ்வாறு புணரும்?

பல, சில என்னும் இவ்விரு சொற்களும் தம்முன் தாம் வருமானால், 1. இயல்பாகும், 2. மிகும், 3. அகரம் கெட, லகரம், றகரமாகத் திரிந்து புணரும்.

பல + பல = பலபல சில + சில = சிலசில (இயல்பு)
பல + பல = பலப்பல -- சில + சில = சிலச்சில (மிகல்)
பல + பல = பற்பல -- சில + சில = சிற்சில [அகரம் கெட லகரம், றகரமாயிற்று)

பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகரம் ஏக
லகரம் றகரம் ஆகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலும் உளபிற. (ந. சூ. 170)

Koviloor Digital Library

● 321. பல சில வாகிய சொற்களின் முன் பிற சொற்கள் வரின் எவ்வாறு புணரும்?

பல, சிலவாகிய சொற்களின் முன் பிற சொற்களுள் யாதானும் ஒன்று வந்தால் அகரம் விகற்பமாவதுண்டு.

பல + கலை = பலகலை   பல + அணி = பலவணி.
பல + கலை = பல்கலை   பல + அணி = பல்லணி.
பல + நாள் = பன்னாள்   பல + வளை = பல்வளை.

● 322. தேங்காய் – இச்சொல்லைப் பிரித்தெழுதிப் புணர்ந்த வகையினை விளக்குக.

தெங்கு + காய் = தேங்காய்.   வேற்றுமைப் புணர்ச்சி.

தெங்கு என்னும் மென்றொடர்க் குற்றியலுகர மொழியின் முன், காய் என்னும் சொல் வந்து புணரின், நிலைமொழியின் முதல் நீண்டு, கு என்னும் ஈற்று உயிர்மெய் கெட்டுப் புணரும் என்ற விதிப்படி தேங்காய் என்று புணர்ந்தது.

தெங்கு நீண்டு ஈற்றுயிர் மெய்கெடும் காய்வரின் (ந. சூ. 187)

● 323. தேங்குழல், தேமொழி – விதி கூறுக.

தேன் + குழல் = தேங்குழல், தேன் + மொழி = தேமொழி

தேன் என்னும் சொல் நிலைமொழியாயிருக்க, வல்லினம் முதன் மொழியாக வந்தால், னகரமெய் இயல்பாவதோடு கெடும். வரும் வல்லினத்திற்கு இனமான மெல்லெழுத்து மிகுந்து வரும் என்ற விதிப்படி, தேன் + குழல் = தேங்குழல் என்று புணர்ந்தது.

தேன் என்னும் நிலைமொழியின் ஈற்று னகரம் கெட்டு 'மொழி' என்னும் வருமொழியோடு இயல்பாகப் புணர்ந்தது.

தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி அழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி   (ந. சூ 214)

Koviloor Digital Library

● 324. இகர ஐகார வீற்று அஃறிணைப் பெயர்களின் முன் வல்லினம் வரின் எவ்வாறு வரும்?

1. இகர ஐகாரவீற்று அஃறிணைப் பெயர்களின் முன் வல்லினம் வரின், அல்வழியில் இயல்பாகும். எழுவாய்த் தொடரிலும் உம்மைத் தொகையிலும் இயல்பாகும்.

(எ.டு) 1.பருத்தி குறிது, யானை கரிது. எழுவாய்த் தொடர்.

2. பொதுவிதியால் மிகும். பண்புத்தொகையிலும் உவமைத் தொகையிலும் வல்லினம் மிகுந்து வரும்.

(எ.டு) மாசித்திங்கள், சாரைப்பாம்பு— பண்புத்தொகை.

காவிக்கண், பனைக்கை— உவமைத்தொகையில் வல்லெழுத்து மிகுந்தது.

3. மிகுந்தும் மிகாமலும் (விகற்பமாக) வரும்.

கிளிகுறிது, கிளிக்குறிது, தினைகுறிது, தினைக்குறிது என எழுவாய்த் தொடரில் விகற்பித்து வந்தன.

● 325. அல்வழியில் இயல்பாகப் புணரும் குற்றியலுகரங்கள் யாவை? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

வன்றொடர்க் குற்றியலுகரத்தை தவிர, ஏனைய ஐந்து விதமான குற்றியலுகரங்களும் அல்வழிப்புணர்ச்சியில் வல்லெழுத்து முதலில் வரின் இயல்பாகப் புணரும்.

(எ.டு) நாகு+கடிது=நாகுகடிது—நெடில் தொடர்க் குற்றியலுகரம்

எஃகு+சிறியது=எஃகுசிறியது—ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

வரகு+தீது=வரகுதீது—உயிர்தொடர்க்குற்றியலுகரம்.

குரங்கு+பெரிது=குரங்குபெரிது—மென்றொடர்க் குற்றியலுகரம்.

எய்து+பொருள்=எய்துபொருள்—இடைத்தொடர்க் குற்றியலுகரம் முன் இயல்பாயின.

Koviloor Digital Library

● 329. நெடில்தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் இவற்றின்முன் நாற்கணமும் வேற்றுமையில் எவ்வாறு புணரும்?

நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களுள் டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே-என்பது நூற்பா.

நெடில்தொடர்க் குற்றியலுகரத்திலும் உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்திலும், உகரத்திற்குப் பற்றுக் கோடாக உள்ள ட்-ற் ஆகிய இரு எழுத்துகளும் வேற்றுமையில் இரட்டித்து வரும்.

ஆடு + கால் = ஆட்டுக்கால்.
பாறு + கால் = பாற்றுக்கால்.

நெடில் தொடரில் வல்லினம் வர—டகரம், றகரம் இரட்டித்து வந்தன

முருடு + கால் = முருட்டுக்கால்
முயிறு + கால் = முயிற்றுக்கால்

உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்தில் டகரம், றகரம் இரட்டித்து வந்தன. ஏனைய கணங்களோடும் இவ்வாறே பெரும்பான்மை இரட்டித்து வரும்.

● 327. மென்றொடர்க் குற்றியலுகரம் வேற்றுமைப் புணர்ச்சியில் எவ்வாறு புணரும்?

ஏழாம் வேற்றுமை இடப்பொருளை உணர்த்தி வரும் மென்றொடர்க் குற்றியலுகரங்கள் முன் வரும் வல்லினம், மிகும். இவ்விதி அல்வழிப்புணர்ச்சிக்காம்.

(எ.டு)
அங்குக் கொண்டான். எங்குச் சென்றான். வலிமிகுந்தது.

வேற்றுமைப் புணர்ச்சியில் சில மென்றொடர்க் குற்றியலுகரங்கள் தமக்கினமான வன்றொடராக ஆகா.

மருந்து + பை = மருத்துப்பை வன்றொடராயது.

Koviloor Digital Library

வண்டு+கால்=வண்டுக்கால் } மென்றொடராகவே
பந்து+ திரட்சி=பந்துத்திரட்சி } நின்றன.

மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொடர் ஆகா மன்னே. [ந. சூ. 184]

328. திசைப்பெயரோடு திசைப்பெயர், புணரும்போது எத்திசைப் பெயரோடு எத்திசைப் பெயர் புணரும்?

நிலைமொழி பெருந்திசையாகும். வருமொழி கோணத் திசையாகும். நிலைமொழியாய் நிற்பன வடக்கும் தெற்குமேயாகும். வருமொழி மேற்கும் கிழக்குமே ஆகும்.

வடக்கு+மேற்கு=வடமேற்கு
வடக்கு+கிழக்கு=வடகிழக்கு
தெற்கு+மேற்கு=தென்மேற்கு
தெற்கு+கிழக்கு=தென்கிழக்கு

வடக்கு என்ற நிலைமொழி ஈற்றுயிர் மெய்யும் ககர வொற்றும் கெடும். வருமொழியான மேற்கு, கிழக்குடன் இயல்பாகப் புணரும்.

தெற்கு என்ற நிலைமொழியின் ஈற்றுயிர் மெய்கெட றகரம் னகரமாகும். பின் இயல்பாகப் புணரும்.

மேலும் தெற்குவடக்கு—வடக்குத்தெற்கு—கிழக்கு மேற்கு—மேற்குக்கிழக்கு—எனப் பொதுவிதியும் பெறும்.

329. மேற்கு, கிழக்கு என்னும் சொற்கள் நிலைமொழி யானால் அவை எவ்வாறு புணரும்?

திசையோடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற—என்பது நூற்பா.

பிற என்ற மிகைச் சொல்லால், தெற்கு என்பதன் ஈற்றயல் எழுத்தாகிய றகரம் னகரமாகவும், மேற்கு

Koviloor Digital Library

என்பதன் றகரம் லகரமாகவும் திரியும். மேற்கு என்பதன் றகரம், தகரம் வரும்போது திரிவதில்லை. கிழக்கு என்பதன் ழகரத்து அகரங்கெட முதல் நீண்டு வரும்.

(எ.டு) மேற்கு + கடல் = மேல்கடல்
மேற்கு + வீதி = மேல்வீதி
குடக்கு + கடல் = குடகடல்
கிழக்கு + கரை = கீழ்க்கரை
கிழக்கு + திசை = கீழ்த்திசை

மேலும் கீழைக்குளம், கீழைச்சேரி, மேலைக்குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெற்றும் வரும்.

● 330. பூ என்னும் சொல்லின் முன் வரும் வல்லினம் எவ்வாறு புணரும்?

பூ என்னும் பலபொருட் பெயர்ச்சொல் முன் வல்லினம் வந்தால் பொதுவிதியால் க, ச, த, ப, மிகும்; மேலும் வல்லினத்திற்கினமாகிய மெல்லினமும் மிகுந்து வரும்.

பூ + கொடி = பூக்கொடி — பொதுவிதி பெற்றது.
பூ + கொடி = பூங்கொடி — மெல்லினம் மிகுந்து வந்தது

பூப்பெயர் முன்னின மென்மையும் தோன்றும் (ந. சூ. 200)

● 331. வேல் + எறிந்தான், சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி கூறுக.

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான் என வரும். நிலை மொழியின் ஈற்றில் மெய்யெழுத்துள்ளது. வருமொழி உயிர் முதல். நிலைமொழியீறும் வருமொழி முதலும் ஒன்றுபட்டு இணைந்தது. இஃது இயல்பு புணர்ச்சி ஆகும்.

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்பது சூத்திரம்

● 332. தனிக்குறில் முன் உயிர் வரின் ஒற்று எவ்வாறாகும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

Koviloor Digital Library

தனிக்குறில் முன் உயிர்வரின் ஒற்று இரட்டும்.
மண் + அரிது = மண்ணரிது
பொன் + ஒளி = பொன்னொளி
கல் + எறிந்தான் = கல்லெறிந்தான். ஒற்று இரட்டியது.

தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டும் [ந. சூ. 205]

● 333. சிறு கட்களிறு, பொற்றகடு–பிரித்தெழுதி, புணர்ச்சி விதி கூறி விளக்குக.

சிறுகண் + களிறு = சிறுகட்களிறு.
பொன் + தகடு = பொற்றகடு
—இவை வேற்றுமைப் புணர்ச்சியாகும்,

ணகார, னகாரங்கள் நிலைமொழி ஈறானால் வருமொழியில் வல்லினம் வரின் ணகாரம் டகாரமாகவும்—னகாரம் றகரமாகவும் திரியும் என்பது விதி.

ணனவல்லினம் வரட் டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு; அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே. (ந. சூ. 209)

—என்பது நன்னூல் நூற்பா. இவ்விதிப்படி புணர்ந்தது.

● 334. தூணன்று, அரசனன்மை, பசுமணன்று-பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி கூறி விளக்குக.

தூண் + நன்று = தூணன்று
அரசன் + நன்மை = அரசனன்மை
பசுமண் + நன்று = பசுமணன்று

என அல்வழிப் புணர்ச்சியிலும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் தனிக்குறில் ஒன்றனையும் சாராது—ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்து வரும் ணகார, னகார மெய்கள் வருமொழிக்கு முதலாக நகரம் வந்தால், நகரம் திரிந்து, கெட்டுப் புணரும்.

Koviloor Digital Library

தூண் + நன்று = தூண் (+ ந்) அ + நன்று = தூணன்று எனப் புணர்ந்தது.

குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரம் திரிந்துழி நன்னும் கேடே. [ந. சூ. 210]

● 335. மகர ஈற்றின்முன் நாற்கணமும் வரின் எவ்வாறு புணரும்? விளக்கம் தருக.

மகர ஈற்றுச் சொற்களின் முன் நாற்கணமும் வர இறுதியில் உள்ள மகரமெய் கெட்டு விதியுயிர் ஈறாய் நின்று—இயல்பு உயிரீறு போலப் புணரும்.

இயல்பு உயிரீற்றுப் புணர்ச்சி விதிகள். 1. உயிர் வரின் உடம்படுமெய் பெறும். 2. வல்லினம் வரின் அவைமிகும். 3. மெல்லினமும் இடையினமும் வரின்—அவை இயல்பாகப் புணரும்.

வேற்றுமையில் உயிரும், இடையினமும், வல்லினமும் வர, மகர மெய் கெடும்.

(எ.டு)
மரம் + அடி = மரவடி—உயிர்முதல்—உடம்படு மெய்.
மரம் + வேர் = மரவேர்—இடையினமுதல்—இயல்பாதல்.
மரம் + நார் = மரநார்—மெல்லினமுதல் இயல்பாதல்.

மவ்வீறு ஒற்றொழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும். [ந. சூ. 219]

● 336. வட்டம் + ஆழி, வட்டம் + கல்—சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி கூறுக.

வட்டம் + ஆழி = வட்டவாழி. உயிர்முதல்
வட்டம் + கல் = வட்டக்கல். வல்லினமுதல்.

இவ்விரு சொற்களும் மகர ஈற்றுச் சொற்கள். அல்வழிப் புணர்ச்சியில் பண்புத்தொகையில் உவமத் தொகையில் உயிரும், இடையினமும் வல்லினமும் முதன்மொழியாகவரின்—மகரமெய் கெடும். இயல்பாகப்

Koviloor Digital Library

புணரும் என்ற விதிப்படி மகரம் கெட்டு விதியுயிர் ஈராக நின்று, முன்னது உடம்படுமெய் பெற்றுப் புணர்ந்தது. பின்னது வல்லினம் மிக்குப் புணர்ந்தது.

337. குளம்+கரை, வலம்+இடம், உண்டனம்+அடியேம் புணர்த்தி எழுதி விதி கூறி விளக்குக.

1. குளம்+கரை=குளக்கரை என்றும் குளங்கரை யென்றும் வேற்றுமைப்புணர்ச்சியில் மவ்வீறு அழிந்து வீதியீறாய் நின்று வல்லினம் மிக்குப் புணர்ந்தது.

வன்மைக்கினமாத் திரிபவும் ஆகும் என்பதால் மெல்லொற்று வந்தது.

வலம்+இடம்=வலமிடம்.

உண்டனம்+அடியேம்=உண்டனமடியேம்.

என அல்வழிப் புணர்ச்சியில் உயிரும் இடையின மும் வர—மகரம் கெடாது இயல்பாகப் புணர்ந்தது.

வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்
அல்வழி உயிரிடை வரின்இயல் பும்உள. (ந. சூ. 220)

338. அகம்+செவி, அகம்+கை, சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி கூறுக.

அகம்+செவி=அகஞ்செவி.

அகம்+கை=அங்கை, என வரும்.

அகம் என்னும் இடப்பெயர் முன் செவி, கை என்னும் சினைப்பெயர்கள் வந்தால் நிலை மொழியிறுதி மகரம் வன்மைக்கு இனமாகத் திரியும். மேலும் நடுநின்ற மகர மெய்யும் அதன் மேலேறிய அகரவுயிரும் கெடும் என்னும் விதிப்படி புணர்ந்தது.

'அகமுணர்ச் செவிகை வரின்இடை யனகெடும். [ந. சூ. 222]

அகஞ் செவி யெனவும் அகங்கை யெனவும் வரும்.

Koviloor Digital Library

● 339. யகர, ரகர, ழகர மெய்களின் முன் வல்லினம் வரின் எவ்வாறு புணரும்?

யகர, ரகர, ழகர மெய்களின் முன் க, ச, த, பக்கள் வந்தால் அவ்வழிப் புணர்ச்சியில் 1. இயல்பாகப் புணரும். 2. வல்லெழுத்துமிக்குப் புணரும்

வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினமாவது, மெல்லினமாவது மிகுந்துவரல் விதியாம்.

வேய் + குறித = வேய்குறிது.
நீர் + கனல் = நீர்கனல்.
வீழ் + புனல் = வீழ்புனல்.
அல்வழியில் இயல்பாக வந்தது.

மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி.
கார் + பருவம் = கார்ப்பருவம்.
காழ் + படிவம் = காழ்ப்படிவம்.
அல்வழியில் வல்லினம் மிகுந்தது.

நாய் + கால் = நாய்க்கால்.
தேர் + தலை = தேர்த்தலை.
பூழ் + செவி = பூழ்ச்செவி.
வேற்றுமையில் வல்லினம் மிகுந்தது.

வேய் + குழல் = வேய்க்குழல் — வேய்ங்குழல்.
ஆர் + கோடு = ஆர்க்கோடு — ஆர்ங்கோடு.
வேற்றுமைப் புணர்ச்சியில் உறழ்ந்தன.

யரழ முன்னர்க் க ச த ப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை
மிகலும் இனத்தொடு உறழ்தலும் விதிமேல் [ந. சூ. 224]

● 340. கல் + குறை, முள் + குறை, சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி கூறுக.

Koviloor Digital Library

கல்+குன்றை=கற்குறை; முள்+குறை=முட்குறை எனப் புணரும். இவை வேற்றுமைப் புணர்ச்சியாம். வேற்றுமைப் புணர்ச்சியில் லகார ளகாரங்கள் இரண்டும் றகார, டகாரமாகத் திரியும் என்ற விதிப்படி கற்குறை, முட்குறையெனப் புணர்ந்தது.

● 341. அல்வழியில் லகர, ளகரவீறு எவ்வாறு புணரும்? எடுத்துக் காட்டுத் தருக.

அல்வழிப் புணர்ச்சியில் லகர, ளகரங்கள் றகர, டகரங்களாவதோடு உறழ்ந்து வரும்.

கல்+குறிது=கல்குறித்து. கற்குறிது.
முள்+குறிது=முள்குறிது—முட்குறிது என வரும்.

● 342. னகர, லகரங்களின் முன் தகரம் வரின் எவ்வாறு புணரும்?

னகர, லகரங்களின் முன் தகரம் வரின் றகரமாகும்.

பொன்+தீது=பொன்றீது. கல்+தீது=கற்றீது. என வரும்.

லளவேற் றுமையில் றடவும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலிவரி னாம்மெலி
மேவினணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப [ந. சூ. 227]

● 343. னகர லகரங்களின் முன் வரும் நகரம் எவ்வாறு திரியும்?

னகர, லகரங்களின் முன் வரும் நகரம் னகரமாகும்.

பொன் + நன்று = பொன்னன்று. கல் + நன்று= கன்னன்று என வரும்.

● 344. ணகர, ளகரங்களின் முன்வரும் தகரம் எவ்வாறு புணரும்?

ணகர ளகரங்களின் முன்வரும் தகரம் டகரமாகத் திரியும்.

மண்+தீது=மண்டீது. முள்+தீது=முட்டீது என வரும்.

Koviloor Digital Library

மண் + நன்று = மண்ணன்று.
முள் + நன்று = முண்ணன்று எனவும் வரும்.
னலமுன் றனவும் ணளமுன் டணமும்
ஆகுந் தநக்கள் ஆயுங் காலே என்பது நன்னூல்.

● 345. வல்லெழுத்து மிகும் இடங்கள்

1. 'அ, இ' என்னும் சுட்டெழுத்தின் பின்னும், 'எ' என்னும் வினாவெழுத்தின் பின்னும் வரும் வல்லினம் மிகும்.

அ + பந்து = அப்பந்து.
இ + கிளை = இக்கிளை.
எ + சிறுவன் = எச்சிறுவன்?

2. அந்த, இந்த, எந்த என்னும் சுட்டுத்திரிபுகளின் பின் வரும் வல்லினம் மிகும்.

அந்த + குருவி = அந்தக்குருவி.
இந்த + சிறுமி = இந்தச்சிறுமி.
எந்த + புலி = எந்தப்புலி?

3. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களை பின்வரும் வல்லினம் மிகும்.

அப்படி + கூறு = அப்படிக்கூறு.
இப்படி + பார் = இப்படிப்பார்.
எப்படி + சொல் = எப்படிச்சொல்?

4. அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்.

அங்கு + கூறு = அங்குக்கூறு.
இங்கு + செல் = இங்குச்செல்.
எங்கு + போனாய் = எங்குப் போனாய்?

5. அவ்வகை, இவ்வகை, எவ்வகை என்னுஞ் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்.

Koviloor Digital Library

அவ்வகை + கூடு = அவ்வகைக்கூடு.
இவ்வகை + தோப்பு = இவ்வகைத்தோப்பு.
எவ்வகை + பால் = எவ்வகைப்பால்?

6. ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகும்.

ஆண்டு + போனான் = ஆண்டுப்போனான்.
ஈண்டு + கவனி = ஈண்டுக்கவனி.
யாண்டு + கண்டான் = யாண்டுக்கண்டான்?

7. இனி, தனி என்ற சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்.

இனி + பேசு = இனிப்பேசு.
தனி + காடு = தனிக்காடு.

8. மற்று, மற்ற, மற்றை என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்.

மற்று + சில = மற்றுச்சில.
மற்ற + குருவி = மற்றக்குருவி.
மற்றை + பழம் = மற்றைப்பழம்.

9. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

கந்தனை + கேள் = கந்தனைக்கேள்.
பந்தை + தேடு = பந்தைத்தேடு.
பாட்டை + பாடு = பாட்டைப்பாடு.

10. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

தயிர் + குடம் = தயிர்க்குடம்.
சிறை + பறவை = சிறைப்பறவை.

(தயிர் + ஐ + உடைய + குடம்; சிறை + ஐ + உடைய + பறவை)

Koviloor Digital Library

11. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

பருத்தி + துணி = பருத்தித்துணி.
[பருத்தி + ஆல் + ஆன + துணி]
ஓலை + பாய் = ஓலைப்பாய்.
[ஓலை + ஆல் + ஆன + பாய்]

12. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும். பள்ளிக்கு + போ = பள்ளிக்குப்போ.

வேலைக்கு + கூலி = வேலைக்குக் கூலி.

13. நான்காம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

கூலி + தொழில் = கூலித்தொழில்.

14. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

வாய் + சொல் = வாய்ச்சொல்.
விழி + புனல் = விழிப்புனல்.

15. ஆறாம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

குதிரை + கால் = குதிரைக்கால்.
நாய் + தலை = நாய்த்தலை.

16. ஏழாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகும்.

குடி + பிறந்தார் = குடிப்பிறந்தார்.

17. ஏழாம் வேற்றுமை விரியில் 'இடை' என்னும் உருபின் பின் வரும் வல்லினம் மிகும்.

நல்லாரிடை + புக்கு = நல்லாரிடைப்புக்கு.

Koviloor Digital Library

18. ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும் வல்லினம் மிகும்.

நீர் + பாம்பு = நீர்ப்பாம்பு.
மலை + குகை = மலைக்குகை.

19. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மிகும். வன்றொடர்க் குற்றியலுகரத்தில் அல்வழி, வேற்றுமை ஆகிய இரு வழியிலும் வல்லினம் பெரும்பாலும் மிகும் என அறிக.

படித்து + பார் = படித்துப்பார்.
சுக்கு + தூள் = சுக்குத்தூள்.
அச்சு + கூலி = அச்சுக்கூலி.

20. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின்வரும் வல்லினம் மிகும்.

காணா + காட்சி = காணாக்காட்சி.
செய்யா + செயல் = செய்யாச்செயல்.

21. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

சதுர + பலகை = சதுரப்பலகை.
யாழ் + கருவி = யாழ்க்கருவி.
புது + சேலை = புதுச்சேலை.
துவர் + காய் = துவர்க்காய்.
மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி.

22. இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

கன்று + குட்டி = கன்றுக்குட்டி.
சாரை + பாம்பு = சாரைப்பாம்பு.
கார் + பருவம் = கார்ப்பருவம்.
மார்கழி + திங்கள் = மார்கழித்திங்கள்.
கொச்சை + சொல் = கொச்சைச் சொல்.

Koviloor Digital Library

23. குறிலைச் சார்ந்து வரும் ஆகாரம், முற்றிய லுகரம் முதலியவற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.

கனா + கண்டேன் = கனாக்கண்டேன்.
இரா + பகல் = இராப்பகல்.
நடு + தெரு = நடுத்தெரு.
கனு + கால் = கனுக்கால்.

24. அல்வழியில் உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

மலர் + கண் = மலர்க்கண்.
கார் + குழல் = கார்க்குழல்.
பனை + கை = பனைக்கை.
வேய் + தோள் = வேய்த்தோள்.

25. 'ஆய், போய்' என்னும் யகரவீற்று வினையெச்சச் சொற்களின் பின்வரும் வல்லினம் அல்வழியில் மிகும்.

நன்றாய் + சொல் = நன்றாய்ச்சொல்.
போய் + பார் = போய்ப்பார்.

26. இகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சத்தின் பின்வரும் வல்லினம் மிகும்.

அன்றி + சொல் = அன்றிச்சொல்.
இன்றி + பேசு = இன்றிப்பேசு.
தேடி + திரி = தேடித்திரி.

27. அகரஈற்று வினையெச்சத்தின் பின்வரும் வல்லினம் மிகும்.

நடிக்க + போ = நடிக்கப்போ.
என + கூறினான் = எனக்கூறினான்.
தேட + சொல் = தேடச்சொல்.
மெல்ல + தேடு = மெல்லத்தேடு.

Koviloor Digital Library

28. ய், ர், ழ் ஆகியவற்றுக்குப் பின் வரும் வல்லினம் சில இடங்களில் மிகும்.

மோர் + குழம்பு = மோர்க்குழம்பு.
தமிழ் + பாடல் = தமிழ்ப்பாடல்.
தாய் + குலம் = தாய்க்குலம்.

29. மென்றொடர்க் குற்றியலுகரத்தின் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.

பாம்பு + சட்டை = பாம்புச்சட்டை.
குரங்கு + கூட்டம் = குரங்குக்கூட்டம்.
பஞ்சு + கொட்டை = பஞ்சுக்கொட்டை.
மருந்து + பை = மருந்துப்பை.

30. தனிநெடில்களாகவுள்ள ஓரெழுத்தொருமொழியின் பின் அல்வழி, வேற்றுமை ஆகிய இரண்டிடங்களிலும் வல்லினம் பெரும்பாலும் மிகும்.

தீ + பற்றியது = தீப்பற்றியது.
ஈ + சிறகு = ஈச்சிறகு.
பூ + கொய் = பூக்கொய்.
ஆ + பயன் = ஆப்பயன்.
கை + பணம் = கைப்பணம்.
மை + கூடு = மைக்கூடு.

31. அரை, பாதி, எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்ச்சொற்களின் பின் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

அரை + காசு = அரைக்காசு.
பாதி + சோறு = பாதிச்சோறு.
எட்டு + தொகை = எட்டுத்தொகை.
பத்து + பாட்டு = பத்துப்பாட்டு.

32. முற்றியலுகரத்தில் வேற்றுமையில் வல்லினம் மிகும்.

அரவு + படம் = அரவுப்படம்.

Koviloor Digital Library

33. உரிச்சொற்றொடரில் வல்லினம் மிகும்.

கடி + கமலம் = கடிக்கமலம்

34. புணர்ச்சியில் ட, ற ஒற்று இரட்டிக்கும் நெடிற்றொடர், உயிர்த் தொடர்க்குற்றியலுகரச் சொற்களுக்குப்பின் வரும் வல்லினம் மிகும்.

ஆடு+கால் = ஆட்டுக்கால்
முரடு+பையன் = முரட்டுப்பையன்
ஆறு+பாய்ச்சல் = ஆற்றுப்பாய்ச்சல்
கிணறு+தவளை = கிணற்றுத்தவளை

35. 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திற்குப் பின் வரும் வல்லினம் மிகும்.

பெய்யா+கொடுக்கும்=பெய்யாக்கொடுக்கும்
[பெய்து கொடுக்கும்]

36. விதி உயிரீறாக நிற்கும் சொற்களுக்குப்பின் வரும் வல்லினம் மிகும்.

சங்க+பலகை = சங்கப்பலகை
மர+சட்டம் = மரச்சட்டம்
வட்ட+கல் = வட்டக்கல்
ஒற்றை+கொம்பு=ஒற்றைக்கொம்பு
பண்டை+காலம்=பண்டைக்காலம்

37. முன்னர், பின்னர் என்னும் சொற்களுக்குப் பின் வரும் வல்லினம் மிகும்.

முன்னர்+செய்=முன்னர்ச்செய்
பின்னர்+கூறு=பின்னர்க்கூறு.

● 346 வல்லெழுத்து மிகா இடங்கள்

1. அது, இது என்னும் சுட்டுச்சொற்களின் பின் அல்வழி, வேற்றுமை என்னும் இரண்டிடங்களிலும் வல்லினம் மிகாது.

Koviloor Digital Library

அது+சிறிது=அதுசிறிது
இது+பெரிது=இதுபெரிது
அது+கொடு=அதுகொடு
இது+செய்=இதுசெய்.

2. எது, ஏது, யாது என்னும் வினாச்சொற்களின் பின்வரும் வல்லினம் மிகாது.

எது+போல்=எதுபோல்?
ஏது+காசு = ஏதுகாசு?
யாது+சொல்=யாதுசொல்?

3. அவை, இவை என்னும் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகாது.

அவை+காண்=அவைகாண்
இவை+பார்=இவைபார்.

4. எவை, யாவை என்னும் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகாது.

எவை+பறவை=எவை பறவை?
யாவை+செய்தன=யாவை செய்தன?

5. அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.

அவ்வளவு+பேச்சு=அவ்வளவுபேச்சு.
இவ்வளவு+பொருள்=இவ்வளவுபொருள்
எவ்வளவு+கடுகு=எவ்வளவுகடுகு?

6. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின்பின் வல்லினம் மிகாது.

அத்தனை+கிழங்கு=அத்தனைகிழங்கு
இத்தனை+தேன்=இத்தனைதேன்
எத்தனை+பேர்=எத்தனைபேர்?

7. படி என்னும் இடைச்சொல்,வினைச்சொல்லு சேர்ந்து வருகையில் வல்லினம் மிகாது.

Koviloor Digital Library

பாடும்படி+கூறு=பாடும்படி கூறு.
செய்யும்படி+சொல்=செய்யும்படிசொல்.

8. பல, சில என்னும் சொற்களின்பின் அல்வழி, வேற்றுமை இருவழியிலும் வல்லினம் மிகாது.

சில+கற்றார்=சிலகற்றார்
சில+தந்தான்=சிலதந்தான்.
பல+பொருள் – பலபொருள்.
பல+பெற்றான்=பலபெற்றான்.

9. வினாவை உணர்த்தும் ஆ, ஓ, ஏ, யா என்னும் வினாவெழுத்தின் பின்வரும் வல்லினம் மிகாது.

அவனா+போனான்=அவனாபோனான்?
அவனோ+செய்தான்=அவனோ செய்தான்?
அவனே+செய்வான் = அவனே செய்வான்?
யா+கொண்டான்=யா கொண்டான்?

10. ஏகாரம் இடைச்சொல்லாய் வந்தாலும் வல்லினம் மிகாது.

அவனே+சொன்னான்=அவனே சொன்னான்.

11. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.

பறவை+பிடித்தான்=பறவை பிடித்தான்.
தண்ணீர்+குடித்தான்=தண்ணீர் குடித்தான்.

12. மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஒடு, ஓடு ஆகியவற்றின் பின் வல்லினம் மிகாது.

முருகனொடு+போ=முருகனொடு போ.
கந்தனோடு+பேசு=கந்தனோடு பேசு.

13. நான்காம் வேற்றுமைத்தொகையில் உயர் திணைப் பெயர்கள் முன் வரும் வல்லினம் மிகாது.

Koviloor Digital Library

கண்ணகி+கணவன்=கண்ணகி கணவன்.
சிறுவர்+தந்தை=சிறுவர் தந்தை.

14. ஐந்தாம் வேற்றுமையின் சொல் உருபுகளாக இருந்து, நின்று என்பவைகளின் பின்வரும் வல்லினம் மிகாது.

வீட்டிலிருந்து+தேடு=வீட்டிலிருந்து தேடு.
ஊரினின்று+செல்=ஊரினின்றுசெல்.

15. ஆறாம் வேற்றுமை உருபுகளின் பின்வரும் வல்லினம் மிகாது.

வேலனது+சட்டை=வேலனது சட்டை.
முருகனுடைய+பை=முருகனுடைய பை,
என+கைகள்=எனகைகள்.

16. பொதுப்பெயர், உயர்திணைப் பெயர்களுக்குப் பின் வரும் வல்லினம் மிகாது.

கண்ணகி+சிறியள்=கண்ணகிசிறியள்.
வள்ளி+தலை=வள்ளிதலை.
தாய்+பெரியவள்=தாய்பெரியவள்.

17. தெரிநிலைப்பெயரெச்சம், குறிப்புப்பெயரெச்சம், எதிர்மறைப்பெயரெச்சம் முதலிய அகரஈற்றுப் பெயரெச்சங்களின் பின்வரும் வல்லினம் மிகாது. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர மற்றெல் லாப் பெயரெச்சங்களின் பின்னும்வரும் வல்லினம் மிகாது.

வந்த+சிறுவன்=வந்தசிறுவன்.
படித்த+பையன்=படித்தபையன்.
பெரிய+கல்லூரி=பெரியகல்லூரி.
நல்ல+பிள்ளை=நல்லபிள்ளை.

18. வினைமுற்றுகளின் பின்வரும் வல்லினம் மிகாது.

பேசின+கிளிகள்=பேசினகிளிகள்.
வந்தது+பசு=வந்ததுபசு.

Koviloor Digital Library

19. செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் பின்வரும் வல்லினம் மிகாது.

காணிய + சென்றான் = காணிய சென்றான்.

20. 'அம்ம' என்னும் இடைச்சொல்லின் பின் வரும் வல்லினம் மிகாது [அம்மகேள்]

அம்ம + சாத்தா = அம்மசாத்தா.

21. ஆ, மா என்பவற்றின் பின்னும், கேண்மியா என்பதிலுள்ள மியா என்னும் முன்னிலை அசைச் சொல்லின் பின்னும், ஆகாரவீற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை வினைமுற்றின் பின்னும் வரும் வல்லினம் மிகாது.

ஆ + பெரிது = ஆபெரிது.
மா + சிறிது = மாசிறிது.
கேண்மியா + கந்தா = கேண்மியாகந்தா.
உண்ணா + குதிரை = உண்ணாகுதிரை.

('உண்ணா' என்பது எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்று)

22. வன்றொடர்க்குற்றியலுகரம் அல்லாத எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.
உலகு + களித்தது = உலகுகளித்தது.
புலி + பெரிது = புலிபெரிது.

23. விளித்தொடரில் வல்லினம் மிகாது.
நம்பீ + போ = நம்பீபோ.
அண்ணா + பார் = அண்ணாபார்.

24. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.
இரவு + பகல் = இரவுபகல்.
கபிலன் + பரணன் = கபிலபரணன்.

Koviloor Digital Library

25. வினைத்தொகையில் வன்றொடர்க்குற்றியலுகரத்திற்குப்பின் வரும் வல்லினம் மிகாது.

ஈட்டு+புகழ்=ஈட்டுபுகழ்.
கூப்பு+கரம்=கூப்புகரம்.

மற்ற வினைத்தொகையிலும் வல்லினம் மிகாது.

இடி+சுவர்=இடிசுவர்.
தாழ்+குழல்=தாழ்குழல்.

26. இரட்டைக்கிளவியிலும் அடுக்குத் தொடரிலும், வல்லினம் மிகாது.

சலசல, பளபள, கலகல, பாம்பு பாம்பு,

27. யகர, ரகர, ழகர மெய்யீறுகளின் முன் வல்லினம் அல்வழியில் மிகாது.

வேய்+குட்டை=வேய்குட்டை.
யாழ்+பெரிது=யாழ்பெரிது.

28. அல்வழியில் உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

பேய்+பிசாசு=பேய்பிசாசு.
சீர்+சிறப்பு=சீர்சிறப்பு.
இகழ்+புகழ்=இகழ்புகழ்.

29. வன்றொடர்க் குற்றியலுகரமும் மென்றொடர்க் குற்றுயலுகரத்தில் வேற்றுமைப்பொருளிலும் தவிர— மற்றக் குற்றியலுகரங்களின் பின்னும்மென்றொடர்க் குற்றியலுகரத்தில் அல்வழியிலும் வல்லினம் மிகாது.

மாடு+பாய்ந்தது=மாடுபாய்ந்தது.
எஃகு+கடிது=எஃகுகடிது.
வரகு+சிறிது=வரகுசிறிது.
வந்து+போனான்=வந்துபோனான்.
பெய்து+போயிற்று=பெய்துபோயிற்று.

Koviloor Digital Library

30. சில முற்றியலுகரச் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகாது.

உறவு+கழிந்தது=உறவு கழிந்தது.
இரவு+போயிற்று=இரவு போயிற்று.

31. வன்றொடர்க் குற்றியலுகரங்களாகிய எட்டு, பத்து என்பவை அல்லாத எண்ணுப்பெயர்கள் சிலவற்றின் பின் வரும் வல்லினம் மிகாது.

ஒன்று+தா=ஒன்றுதா
ஒரு+பெட்டி=ஒருபெட்டி
இரண்டு+பொருள்=இரண்டுபொருள்
இரு+குதிரை=இருகுதிரை
மூன்று+குரங்கு=மூன்றுகுரங்கு
நான்கு+பைகள்=நான்கு பைகள்
ஐந்து+பழம்=ஐந்துபழம்
ஆறு+பானை=ஆறுபானை
ஏழு+குளம்=ஏழுகுளம்
ஒன்பது+சுவடிகள்=ஒன்பது சுவடிகள்.

3. பொருள் இலக்கணம்

● 347. அகப்பொருள் என்பது யாது?

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம்முள் அனுபவிக்கும் இன்பத்தைப் பற்றிக் கூறுவது அகப்பொருள் எனப்படும். வெளியார்க்குக் கூற இயலாததாய் உள்ளத்தால் மட்டுமே உணர்ந்து அனுபவிக்கத் தக்கதாக இருப்பதால் இஃது அகப்பொருள் எனப்பட்டது.

Koviloor Digital Library

● 348 புறப்பொருளாவது யாது?

புறப்பொருளாவது, புறத்தார்க்குக் கூறக்கூடியதாய் அமைந்த அறம், பொருள் ஆகியவற்றைப் பற்றிக் கூறுவது.

● 349. அகப்பொருள் திணைகள் யாவை?

அகப்பொருள் திணைகள் ஐந்து வகைப்படும். திணை என்றால் ஒழுக்கம் என்பதாகும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாம், அவற்றுடன் கைக்கிளை, பெருத்திணை என்பனவற்றைச் சேர்த்து ஏழாகவும் கூறுவதுண்டு.

● 350. திணைகளின் முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள்—இவற்றை விளக்குக.

முதற்பொருள் : ஒவ்வொரு திணைக்கும் உரிய நிலமும், பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

கருப்பொருள் : ஐந்து நிலங்களுக்கும் உரிய தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், உணவு, பறவை, விலங்கு ஊர், நீர், பூ, மரம், பண், யாழ், பறை, தொழில் ஆகிய பதினான்கும் கருப்பொருள்கள் ஆகும்.

உரிப்பொருள் : ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய அக ஒழுக்கம் உரிப்பொருள் எனப்படும்

● 351. நிலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலம் ஐந்து வகைப்படும்.

1. குறிஞ்சி: மலையும், மலையைச் சார்ந்த இடமும்.
2. முல்லை: காடும், காடு சார்ந்த இடமும்.
3. மருதம் : வயலும், வயல் சார்ந்த இடமும்.
4. நெய்தல் : கடலும், கடல் சார்ந்த இடமும்.
5. பாலை : மணல் செறிந்த பெருவழியும், அதைச் சார்ந்த இடமும்.

Koviloor Digital Library

● 352. பொழுது எத்தனை வகைப்படும்? விளக்குக.

பெரும்பொழுது, சிறுபொழுது என்று பொழுது இரண்டு வகைப்படும். பெரும்பொழுது என்பது, ஆண்டின் கூறுபாடு ஆகும். சிறு பொழுது என்பது ஒரு நாளின் கூறுபாடாகும்.

பெரும்பொழுது :

1. இளவேனில்	—சித்திரை,	வைகாசி	மாதங்கள்
2. முதுவேனில்	—ஆனி,	ஆடி	,,
3. கார்	—ஆவணி,	புரட்டாசி	,,
4. குளிர்	—ஐப்பசி,	கார்த்திகை	,,
5. முன்பனி	—மார்கழி,	தை	,,
6. பின்பனி	—மாசி,	பங்குனி	,,

சிறுபொழுது :

1. காலை, 2. நண்பகல், 3. எற்பாடு, 4. மாலை, 5. யாமம், 6. வைகறை என ஆறு வகையாகும்.

சூரியன் உதித்தது முதல் பத்து நாழிகை வரை (ஆறு மணி முதல் பத்து மணி வரை) காலை.

பகல் பத்து நாழிகை முதல் இருபது நாழிகை வரை (பத்து மணி முதல் இரண்டு மணி வரை) நண்பகல்.

பகல் இருபது நாழிகை முதல் முப்பது நாழிகை வரை (இரண்டு மணி முதல் ஆறு மணி வரை) எற்பாடு.

சூரியன் மறைந்தது முதல் பத்து நாழிகை வரை (ஆறு மணி முதல் இரவு பத்து மணி வரை) மாலை.

இரவு பத்து நாழிகை முதல் இருபது நாழிகை வரை (பத்து மணி முதல் இரண்டு மணி வரை) யாமம்.

இரவு இருபது நாழிகை முதல் சூரியன் உதிக்கும் நேரம் வரை (இரண்டு மணி முதல் ஆறு மணி வரை) வைகறை.

Koviloor Digital Library

● 353. ஐவகைத் திணைகளுக்கும் உரிய முதற்பொருள்கள் யாவை?

1. குறிஞ்சி : நிலம்-மலையும் மலைசார்ந்த இடமும். பெரும்பொழுது—குளிர்காலம், முன்பனிக்காலம். சிறு பொழுது—யாமம்.

2. முல்லை : நிலம்-காடும் காடு சார்ந்த இடமும். பெரும்பொழுது-கார்காலம். சிறுபொழுது-மாலைக்காலம்

3. மருதம் : நிலம்-வயலும் வயல்சார்ந்த இடமும். பெரும்பொழுது-ஆறு பெரும்பொழுதுகள். சிறுபொழுது-வைகறை, காலை.

4. நெய்தல் : நிலம்—கடலும் கடல்சார்ந்த இடமும். பெரும்பொழுது-ஆறு பெரும்பொழுதுகள். சிறுபொழுது-எற்பாடு.

5. பாலை : நிலம் — மணலும் மணல் சார்ந்த வெளியும். பெரும்பொழுது—இளவேனில், முதுவேனில், பின்பனி. சிறுபொழுது—நண்பகல்.

● 354. ஐவகை நிலங்களுக்கும் உரிய கருப்பொருள்களுள் ஆறு ஆறு எழுதுக.

1. குறிஞ்சி : 1. தெய்வம்—முருகன்; 2. மக்கள்—பொருப்பன், வெற்பன், கொடிச்சி; 3. விலங்கு-யானை, புலி, கரடி; 4. பூ—குறிஞ்சிப்பூ, காந்தள், வேங்கை; 5. யாழ்—குறிஞ்சியாழ்; 6. உணவு—மலைநெல், தினை.

2. முல்லை : 1. தெய்வம்—திருமால்; 2. மக்கள்—நாடன், தோன்றல், இடையர்; 3. விலங்கு—மான், முயல்; 4. பூ—முல்லைப்பூ; 5. யாழ்—முல்லையாழ்; 6. ஊர்—பாடி, சேரி.

3. மருதம் : 1. தெய்வம்—இந்திரன்; 2. மக்கள்—ஊரன், மகிழ்நன்; 3. விலங்கு—எருமை, நீர்நாய்; 4. பூ—தாமரைப்பூ, குவளைப்பூ; 5. யாழ்—மருதயாழ்; 6. ஊர்—பேரூர், மூதூர்.

Koviloor Digital Library

4. நெய்தல் : 1. தெய்வம்—வருணன்; 2. மக்கள்—சேர்ப்பன், துறைவன்; 3. விலங்கு—சுறாமீன், முதலை; 4. பூ—நெய்தல், புன்னை, தாழை; 5. யாழ்—விளரி யாழ்; 6. உணவு—மீன், உப்புகளை மாற்றுதலால் வரும் பொருள்கள்.

5. பாலை: 1. தெய்வம்-துர்க்கை; 2. மக்கள்-விடலை மறவர்; 3. விலங்கு—செந்நாய்; 4. பூ—குரா அம்பூ, மரா அம்பூ; 5. யாழ்—பாலையாழ்; 6. உணவு—வழிப் பறித்தன; கொள்ளையடித்தன.

● 355. ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருள்கள் யாவை?

1. குறிஞ்சி : தலைவனும் தலைவியும் காண்டலும் காண்டற்குரிய நிமித்தமும்.
2. முல்லை : தலைவனும் தலைவியும் அன்புற்று இருத்தலும் அதற்குரிய நிமித்தமும்.
3. மருதம் : ஊடலும் ஊடல் நிமித்தமும்.
4. நெய்தல் : இரங்கலும் இரங்கல் நிமித்தமும்.
5. பாலை : பிரிதலும் பிரிதல் நிமித்தமும்.

● 356. புறப்பொருள் திணைகள் யாவை? விளக்குக.

புறப்பொருள் திணைகள் பன்னிரண்டு. அவை யாவன:

1. வெட்சித்திணை : பகைவர் பசுக்கூட்டங்களைக் கவர்தல். இவ்வீரர்கள் வெட்சிமாலை சூடுவது வழக்கம்.

2. கரந்தைத்திணை : பகைவர் கவர்ந்த பசுக்களை மீட்டல். இவ்வீரர் கரந்தைப் பூவைச் சூடுவர்.

3. வஞ்சித்திணை : பகைவர் நாட்டின்மேல் படையெடுத்துச் செல்லல். இவ்வீரர் வஞ்சிப்பூவைச் சூடுவர்.

Koviloor Digital Library

4. காஞ்சித்திணை : படையெடுத்து வந்த பகைவர், நாட்டில் புகாதவாறு எதிர்சென்று தடுத்தல். இவ்வீரர் காஞ்சிப்பூச் சூடுவர்.

5. உழிஞைத்திணை : பகைவர்களுடைய மதிலை வளைத்துப் போர் புரிதல். இவ்வீரர் உழிஞைப்பூச் சூடுவர்.

6. நொச்சித்திணை : பகைவர் மதிலைக் கைப்பற்றாத வாறு காத்தல். இவ்வீரர் நொச்சிப்பூச் சூடுவர்.

7. தும்பைத்திணை : இருதிறத்து வீரரும் பரந்த போர்க்களத்தில் எதிர்எதிர் நின்று போர் புரிதல். இரு திறத்தாரும் தும்பைப் பூவைச் சூடுவர்.

8. வாகைத்திணை : பகைவரை வென்றவர் வெற்றி விழாக் கொண்டாடுவர். இவர்கள் வாகைப்பூச் சூடுவர்.

9. பாடாண்திணை : ஒருவனுடைய புகழ், கல்வி, ஈகை முதலியவற்றைப் புகழ்ந்து பாடுதல். பாடப்படும் ஆண் மகனின் ஒழுகலாறு—பாடாண்திணையாம்.

10. பொதுவியல்திணை : மேற்கூறிய புறத்திணை களுக்குப் பொதுவாய் அமைந்தனவும், அவற்றுள் அடங்காதனவும் பற்றிக் கூறுதல்.

11. கைக்கிளைத்திணை : ஒருதலைக்காமம். ஆண், பெண் ஆகியோர்களில் ஒருவரிடம் மட்டும் தோன்றும் அன்பு.

12. பெருந்திணை : பொருந்தாக் காமம். ஒத்த தலைவனும், தலைவியும் அல்லாதார் இடத்து உண்டா கும் அன்பு.

Koviloor Digital Library

4. யாப்பு இலக்கணம்

● 357. யாப்பிலக்கணம் [Prosody] என்றால் என்ன?

செய்யுள் இயற்றுவதற்கு உரிய விதிகளையும், விதிவிலக்குகளையும் கூறும் நூலுக்கு யாப்பிலக்கணம் என்று பெயர். யாத்தல்—கட்டுதல்.

● 358. செய்யுளின் உறுப்புகள் யாவை?

செய்யுளின் உறுப்புகள் : 1. எழுத்து, 2. அசை, 3. சீர், 4. தளை, 5. அடி, 6. தொடை என்ற ஆறும் ஆகும்.

● 359. அசை என்பது யாது?

எழுத்துகள் தனித்தோ, இணைந்தோ தக்க ஒலியுடன் சீருக்கு உறுப்பாகி நின்றால் அசை எனப்படும்.

அசைந்து நிற்றலின் அசையாம்.

● 360. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

அசை இரண்டு வகைப்படும். அவை : 1. நேரசை 2. நிரையசை என்பன.

● 361. நேரசை என்பது என்ன?

தனிக்குற்றெழுத்து அல்லது தனி நெட்டெழுத்து, மெய்யெழுத்துடன் சேர்ந்தோ, சேராமலோ வருவது நேரசையாகும்.

[எ.டு] அ—தனிக்குற்றெழுத்து
கல்—தனிக் குற்றெழுத்தும் மெய்யெழுத்தும்
ஆ—தனி நெட்டெழுத்து
ஆல்—தனிநெட்டெழுத்தும் மெய்யெழுத்தும்

● 362. நிரையசை என்பது யாது?

Koviloor Digital Library

இருகுறில் அல்லது குறில்நெடில் இணைந்து மெய்யெழுத்தோடு சேர்ந்தோ, சேராமலோ வருவது நிரையசையாகும்.

[எ.டு] திரு — இருகுறில்
அருள் — இருகுறிலும் மெய்யும்
பலா — குறிலும் நெடிலும்
கலாம் — குறிலும் நெடிலும் மெய்யும்.

● 363. சீர் எனப்படுவது யாது?

அசைகள் ஒன்றோ, இரண்டோ, மூன்றோ, நான்கோ இயைந்து நிற்பது சீர் ஆகும். சீர்பட நிற்றலின் சீராம்.

● 364. ஈரசைக் சீர்களை விளக்குக?

நேரசையோடு நேரசையும், நிரையசையோடு நேரசையும், நிரையசையோடு நிரையசையும், நேரசை யோடு நிரையசையும் இயைந்து நின்று ஈரசைச் சீர்கள் நான்கு ஆகும்.

குறிப்பு : [அவற்றை முறையே,
நேர் நேர்
நிரை நேர்
நிரை நிரை
நேர் நிரை
என மனப்பாடம் செய்து கொள்க]

365. இயற்சீர் என்பது யாது? அதன் வேறு பெயர் என்ன?

ஈரசைச் சீரே இயற்சீர் ஆகும். அதன் வேறு பெயர் ஆசிரிய உரிச்சீர். அகவற்சீர் எனவும் பெயர் பெறும்.

● 366. இயற்சீரை வாய்பாட்டு முறையில் எவ்வாறு கூறுவர்?

நேர் நேர்—தேமா. நிரை நேர்—புளிமா.

Koviloor Digital Library

நிரை நிரை— கருவிளம், நேர் நிரை – கூவிளம் என இயற்சீரை வாய்பாட்டு முறையில் கூறுவர்.

● 367. அகவற்பாவுக்கு உரிய சீர்கள் யாவை?

மாச்சீரும், விளச்சீரும் ஆசிரியப்பாவுக்குரிய சீர்களாம்.

● 368. வெண்பாவுக்குரிய சீர்கள் யாவை?

இயற்சீரும், காய்ச்சீரும் வெண்பாவுக்குரியன.

● 369, காய்ச்சீராவது யாது?

இயற்சீர்களின் இறுதியில் நேர் அசையைச் சேர்க்க காய்ச்சீர் வரும், அது பின்வருமாறு ஆகும் :

நேர் நேர் நேர்	—	தேமாங்காய்
நிரை நேர் நேர்	—	புளிமாங்காய்
நிரை நிரை நேர்	—	கருவிளங்காய்
நேர் நிரை நேர்	—	கூவிளங்காய்

குறிப்பு : காய்ச்சீரை 'வெண்சீர்' எனவும் வழங்குவர்.

● 370. வஞ்சிப்பாவுக்கு உரிய சீர்கள் யாவை?

இயற்சீர்களின் இறுதியில் நிரை அசையைச் சேர்க்கக் கனிச்சீர் கிடைக்கும். இது வஞ்சிப்பாவுக்கு உரிய சீர் ஆகும். அது வருமாறு :

நேர் நேர் நிரை	—	தேமாங்கனி
நிரை நேர் நிரை	—	புளிமாங்கனி
நிரை நிரை நிரை	—	கருவிளங்கனி
நேர் நிரை நிரை	—	கூவிளங்கனி

குறிப்பு : கனிச்சீரை 'வஞ்சியுரிச்சீர்' எனவும் வழங்குவர்.

● 371. நாலசைச் சீர்களையும் அவற்றின் வாய்பாடுகளையும் எழுதுக.

Koviloor Digital Library

நாலசைச் சீர்கள் :

நேர் நேர் நேர் நேர்	— தேமாந்தண்பூ
நிரை நேர் நேர் நேர்	— புளிமாந்தண்பூ
நிரை நிரை நேர் நேர்	— கருவிளந்தண்பூ
நேர் நிரை நேர் நேர்	— கூவிளந்தண்பூ
நேர் நேர் நிரை நேர்	— தேமாநறும்பூ
நிரை நேர் நிரை நேர்	— புளிமாநறும்பூ
நிரை நிரை நிரை நேர்	— கருவிளநறும்பூ
நேர் நிரை நிரை நேர்	— கூவிளநறும்பூ
நேர் நேர் நேர் நிரை	— தேமாந்தண்ணிழல்
நிரை நேர் நேர் நிரை	— புளிமாந்தண்ணிழல்
நிரை நிரை நேர் நிரை	— கருவிளந்தண்ணிழல்
நேர் நிரை நேர் நிரை	— கூவிளந்தண்ணிழல்
நேர் நேர் நிரை நிரை	— தேமாநறுநிழல்
நிரை நேர் நிரை நிரை	— புளிமாநறுநிழல்
நிரை நிரை நிரை நிரை	— கருவிள நறுநிழல்
நேர் நிரை நிரை நிரை	— கூவிளநறுநிழல்

● 372. சீர்களின் எண்ணிக்கையை விளக்கிக் கூறுக.

சீர்களின் எண்ணிக்கை

மாச்சீர்	2	பூச்சீர்	8
விளச்சீர்	2	நிழற்சீர்	8
காய்ச்சீர்	4	ஓரசைச்சீர்கள்	2
கனிச்சீர்	4		

ஆக, சீர்களின் எண்ணிக்கை 30 ஆகும். (நேரசை நிரையசை, இவ்விரண்டு சீர்களும் வெண்பாவின் ஈற்றில் வரும்)

● 373. தளை என்பது யாது?

சீர்கள் ஒன்றோடொன்று இயைந்து கட்டுப்பட்டு நிற்பது தளை எனப்படும்.

Koviloor Digital Library

குறிப்பு : தொடர்ந்து நிற்கும் இரு சீர்களுக்கு இடையே உள்ள கட்டுக்கோப்பே தளையாகும்.

● 374. தளை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

ஆசிரியத்தளை, வெண்டளை, கலித்தளை, வஞ்சித் தளை எனத் தளை நான்கு வகைப்படும்.

● 375. ஆசிரியத்தளை எத்தனை வகைப்படும்? விளக்குக.

ஆசிரியத்தளை 1. நேரொன்றாசிரியத்தளை, 2. நிரையொன்றாசிரியத்தளை என இரு வகைப்படும்.

[எ.டு] வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பெறாஅ
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப
ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தரு தானைச் சேர லாதனை
யாங்ஙன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறங்கொடுத் திறத்தி
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே.

இதில் முதலடியில்,

'வையங் காவலர்' என நேர்முன் நேர் இயைந்து நேரொன்றாசிரியத் தளையாயிற்று.

'காவலர் வழிமொழிந்'து என நிரைமுன் நிரை இயைந்து நிரையொன் றாசிரியத்தளையாயிற்று.

குறிப்பு : ஆசிரியப்பாவில் இவ்விரண்டு தளையும் பெரும்பாலும் வருமாயினும், சிறுபான்மை வெண்டளையும் கலித்தளையும் வரும்.

● 376. வெண்டளை எத்தனை வகைப்படும்? விளக்குக.

வெண்டளை இயற்சீர் வெண்டளை எனவும் வெண்சீர் வெண்டளை எனவும் இருவகைப்படும்.

Koviloor Digital Library

மாச்சீர் முன் நிரையசை வந்து இயைந்து நிற்பதும் விளச்சீர் முன் நேரசை வந்து இயைந்து நிற்பதும் இயற்சீர் வெண்டளை எனப்படும்.

காய்ச்சீர் முன் நேரசை வந்து இயைந்து நிற்பது வெண்சீர் வெண்டளையாகும்.

(எ.டு) உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

இதில் 'உள்ளுவ தெல்லாம்' என விளச்சீர் முன் நேரசை வந்து பொருந்தி இயற்சீர் வெண்டளையாயிற்று.

'தெல்லாம் உயர்வுள்ளல்' என மாச்சீர் முன் நிரையசை வந்து பொருந்தி இயற்சீர் வெண்டளை யாயிற்று.

'உயர்வுள்ளல் மற்றது' எனக் காய்ச்சீர் முன் நேரசை வந்து பொருந்தி வெண்சீர் வெண்டளையாயிற்று.

குறிப்பு : ஆசிரியப்பா, கலிப்பா முதலியவற்றில் அவ்வவற்றிற்குரிய தளையோடு மற்றத் தளைகளும் விரவி வரலாம். ஆனால், வெண்பாவில் வேற்றுத்தளை ஒரு போதும் வாராது.

● 377. கலித்தளை என்பது யாது?

காய்ச்சீர் முன் நிரையசை வந்து இயைந்து நிற்பது கலித்தளையாகும்.

உனக்கவன்றன் செயல்காட்ட நாளைநீ
யொளித்திருந்தால்
எனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாம்
காண்கின்றாய்
மனக்கவலை யொழிகென்றுமறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியா ரெழுந்தருளிப் போயினார்.

இதில் 'உனக்கவன்றன் செயல்காட்ட' எனக் காய்ச்சீரின் முன் நிரையசை வந்தமை காண்க.

Koviloor Digital Library

இப்பாவில் பெரும்பான்மையான தளைகள் கலித் தளைகள்; சிறுபான்மை கலித்தளை அல்ல. ஆயினும் பெரும்பான்மை பற்றிக் கலிப்பா எனல் வேண்டும். இவ்வாறு, நாற்கடியாய் வரும் கலிப்பாவினைக் கொச்சகக் கலிப்பா என்பர்.

● 378. வஞ்சித் தளையை விளக்குக.

கனிச்சீரின் முன் நிரையசை வந்து பொருந்தி நிற்பின் ஒன்றிய வஞ்சித்தளை ஆகும்.

கனிச்சீரின் முன் நேரசை வந்து பொருந்தி நிற்பின் ஒன்றாத வஞ்சித்தளை ஆகும்.

[எ.டு] வஞ்சியடிகள் :

இல்லறமெனத் துறவறமெனச்
சொல்லறம்பிற துணையன்றெனப்
பவக்கடலுள் துவக்கறுப்பான்
காவிரியிடைப் பூவிரிபொழிற்
சில மந்திகள் சினைதாவப்
பல தெங்கின் பழக்குலையுதிர
அடர்கமுகின் மிடறொடிதரத்
தேமாங்கனி சிதறுபுவிழ
முடப்பலவின் குடக்கனியுக
அரம்பைக்கனி வரம்பிற்புக
வயன்மருங்கின் மலர்ப்பொய்கையுள்
துயில்வலம்புரி துண்ணனவுறத்
தாஅட்டாமரைத் தவிசுறைதரு
தூஉட்டோதிமம் பேஎட்டுடனெழ
மயிற்சேவல் மனம்களிப்பக்
குயிற்பேடைக் குலமொளிப்ப
மழைமுகிலென முழவதிர்தரு
திருவரங்கப் பெருநகருள்
அரவணைமிசை அறிதுயிலமர்ந்
தருள்புரி

Koviloor Digital Library

சுரிதம் :

திருநா ரணனைச் சேர்ந்தனம்
சரணார விந்தம் தஞ்சமென் றிரந்தே.

இதில் 'இல்லறமெனத் துறவறமென' என்று கனிச்சீர் முன் நிரையசை வந்து பொருந்தி ஒன்றிய வஞ்சித்தளை ஆயிற்று.

'காவிரியிடைப் பூவிரிபொழில்' என்று கனிச்சீர் முன் நேரசை வந்து பொருந்தி ஒன்றா வஞ்சித்தளையாயிற்று.

● 379. அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை? விளக்குக.

அடி ஐந்து வகைப்படும். அவையாவன :

1. குறளடி, 2. சிந்தடி, 3. அளவடி, 4. நெடிலடி. 5. கழிநெடிலடி.

இரண்டே சீர்களை கொண்டது குறளடி;
மூன்று சீர்க்களைக் கொண்டது சிந்தடி;
நான்கு சீர்களைக் கொண்டது அளவடி;
ஐந்து சீர்களைக் கொண்டது நெடிலது;
ஆறு சீர்களும் அதற்கு மேலும் கொண்டது
கழிநெடிலடி :

(எ-டு) 1. குறளடியால் வந்த செய்யுள் :

கண்ணன் திருவடி
திண்ணம் அழியா
வண்ணம் தருமே.

2. சிந்தடியால் வந்த செய்யுள் :

அன்று மூலம் ஆதியாய்
இன்று காறும் ஏழையேன்
நன்று தீது நாட.லேன்
தின்று தீய தேடினேன்.

Koviloor Digital Library

3. அளவடியால் வந்த செய்யுள் :

வினையுடை யரக்காரம் இருந்தை வெந்துகச்
சனகியென் றொருதழல் நடுவண் தங்கலான்
அனகன்கை அப்பெனும் அளவில் ஊதையால்
கனகநீ டிலங்கைநின் றுருகக் காண்டியால்.

4. நெடிலடியால் வந்த செய்யுள் :

சூடை யின்மணி கண்மணி யொப்பது தொன்னாள்
ஆடை யின்கண் இருந்தது பேரடை யாளம்
நாடி வந்தென தின்னுயிர் நல்கிய நம்பா
கோடிஎன்று கொடுத்தனள்
மெய்ப்புகழ் கொண்டாள்

5, கழிநெடிலடியால் வந்த செய்யுள்கள்:

□ பொங்கரின் நுழைந்து வாவிப்
புகுந்துபங் கயந்து மூவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல் இயங்கும் அன்றே.

□ மட்டாருந் தென்களந்தைப் படிக்காசான்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும் பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும்
வாய்மணக்கும் துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டினுறு நளினந் தானே.

● 380. தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

தொடை ஐந்து வகைப்படும். அவை யாவன :

Koviloor Digital Library

1. மோனைத்தொடை, 2. எதுகைத்தொடை. 3. முரண்தொடை, 4. இயைபுத்தொடை, 5. அளபெடைத்தொடை.

குறிப்பு : இயைபுத்தொடையும், அளபெடைத் தொடையும் இங்கு விளக்கமின்றி விடப்படுகிறது.

● 381. மோனைத் தொடை என்பது யாது?

முதலெழுத்துகள் ஒன்றி வருவது மோனத்தொடை யாகும்.

● 382. மோனைத்தொடை (Alliteration) எத்தனை வகைப் படும்? அவை யாவை?

மோனைத்தொடை : 1. அடிமோனை, 2. இணை மோனை, 3. பொழிப்பு மோனை, 4. ஒருஉமோனை, 5. கூழை மோனை, 6. மேற்கதுவாய் மோனை, 7. கீழ்க் கதுவாய் மோனை, 8. முற்றுமோனை என எட்டு வகைப் படும்.

(எ–டு) □ அடிமோனை :

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

இதில் முதலடி முதலெழுத்தும், இரண்டாமடி முத லெழுத்தும் ஒன்றி நிற்கின்றன. ஆதலால் இது அடி மோனை.

குறிப்பு : மற்ற மோனைகளை அடிதோறும் காண்க: இவ்வாறே எதுகைத்தொடையும் முரண் தொடையும் வரும்.

இணை மோனை முதலான ஏழு மோனைகளும் அளவடியில்தான் விளங்கித் தோன்றும். மற்ற அடி களிலும் உண்டெனக் கொள்க.

முதல் இரண்டு சீர்கள் ஒன்றி வருதல் இணை, (1-2)

முதலும் மூன்றும் ஒன்றி வருவது பொழிப்பு. (1–3)

Koviloor Digital Library

முதலும் நான்கும் ஒன்றி வருவது ஒரூஉ (1-4)

முதல் மூன்று சீர்கள் ஒன்றி வருவது கூழை. (1-2-3)

முதலொடு மூன்றும் நான்கும் ஒன்றி வருவது மேற்கதுவாய் (1-3-4)

முதலொடு இரண்டும் நான்கும் ஒன்றி வருவது கீழ்க்கதுவாய் (1-2-4)

நான்கு சீர்களும் ஒன்றி வருவது முற்று (1-2-3-4)

☐ இணை மோனை :

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

☐ பொழிப்பு மோனை :

கோளில் பொறியில் குணமிலவே என்குணத்தான்
தாளை வணங்காத் தலை

☐ ஒரூஉ மோனை :

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

☐ கூழை மோனை :

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

☐ மேற்கதுவாய் மோனை :

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

☐ கீழ்க்கதுவாய் மோனை :

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

Koviloor Digital Library

□ முற்று மோனை :

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

● 383. எதுகைத் தொடையாவது யாது?

இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

● 384. எதுகைத் தொடை [Rhyme] எத்தனை வகைப்படும்? விளக்குக.

எதுகைத்தொடை எட்டு வகைப்படும். அவை யாவன : 1. அடியெதுகை, 2. இணையெதுகை, 3. பொழிப்பெதுகை, 4. ஒரூஉவெதுகை, 5. கூழை யெதுகை, 6. மேற்கதுவாயெதுகை, 7. கீழ்க்கதுவா யெதுகை, 8. முற்றெதுகை என்பன.

1. அடியெதுகை :

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

2. இணையெதுகை :

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவற் கேடு.

3. பொழிப்பெதுகை :

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

4. ஒரூஉ வெதுகை :

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

5. கூழையெதுகை :

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

Koviloor Digital Library

6. மேற்கதுவாயெதுகை :

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

7. கீழ்க்கதுவாயெதுகை :

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

8. முற்றெதுகை :

இடும்பைக் கிடும்பைப் படுப்பர் இடும்பைக்
கிடும்பைப் படாஅ தவர்.

● 385. முரண்தொடை என்பது யாது? விளக்குக.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தில் மாறுபட்ட சொற்கள் இயைந்து வருவது முரண்தொடை எனப் படும். இதுவும் மோனைகள், எதுகைகள் போலவே எட்டு வகைப்படும்.

[எ.டு] இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

குறிப்பு : இது போலவே, மற்ற முரண்தொடைகளும் வந்தவழிக் காண்க.

● 386. அலகிடுதல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

ஒரு செய்யுளின் அசை, சீர்களைப் பிரித்துத் தனித் தனி நிறுத்திக்காட்டி வாய்பாடும் கூறி, தளையும் குறித்தலே அலகிடுதல் ஆகும்.

[எ.டு] மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

தேமா	புளிமா	புளிமா	கருவிளங்காய்
நேர்நேர்	நிரைநேர்	நிரைநேர்	நிரைநிரைநேர்
மோப்பக்	குழை யும்	அனிச் சம்	முகந் திரிந்து

Koviloor Digital Library

தேமா	புளிமா	நிரைபு
நேர்நேர்	நிரைநேர்	
நோக்கக்	குழையும்	விருந்து

மோப்பக் குழையும்–மாமுன் நிரை–இயற்சீர்வெண்டளை.

குழையு மனிச்சம்–மாமுன் நிரை–இயற்சீர்வெண்டளை.

மனிச்ச முகந்திரிந்து–மாமுன் நிரை–இயற்சீர்வெண்டளை.

முகந்திரிந்து நோக்க–காய்முன்நேர்–வெண்சீர் வெண்டளை.

நோக்கக் குழையும்–மாமுன்நிரை–இயற்சீர் வெண்டளை.

குழையும் விருந்து–மாமுன்நிரை–இயற்சீர் வெண்டளை.

இக்குறட்பா இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் விரவி, பிறப்பு என்னும் வாய்பாட்டால் முடிந்தது.

● 387. குறள் வெண்பாவின் இலக்கணம் யாது?

(i) இரண்டடியால் இயன்றதாய் வெண்டளை தவறாது இருத்தல் வேண்டும்.

(ii) முதலடியில் நான்கு சீரும் இரண்டாமடியில் மூன்று சீரும் வரல் வேண்டும்.

(iii) ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றால் முடிய வேண்டும்.

குறிப்பு : வெண்பாவின் இறுதி ஓரசைச்சீர் ஆகும். அது நேரசையாயின், 'நாள்' என்னும் வாய்பாடு.

நிரையசையாயின் 'மலர்' என்னும் வாய்பாடு.

நேரசையுடன் உகரம் சேர்ந்து நேர்பு என்பது போல் நிற்குமாயின், 'காசு' என்னும் வாய்பாடு. நிரையசையுடன் உகரம் சேர்ந்து நிரைபு என்பது போல் நிற்குமாயின், 'பிறப்பு' என்னும் வாய்பாடு.

Koviloor Digital Library

● 388. வெண்பாவின் வகைகள் யாவை?

வெண்பாவின் வகைகளாவன : 1. குறள்வெண்பா, 2. சிந்தியல் வெண்பா, 3. நேரிசை வெண்பா, 4. இன்னிசை வெண்பா, 5. பஃறொடை வெண்பா.

1. குறள்வெண்பா—இரண்டடி உடையது.
2. சிந்தியல்வெண்பா—மூவடி உடையது.
3. நேரிசை வெண்பா—நான்கடி உடையது.
4. இன்னிசை வெண்பா—நான்கடி உடையது.
5. பஃறொடைவெண்பா—பல அடிகள் உடையது. (5 முதல் 12 அடிகள்)

● 389. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?

பாக்களிலே வெண்பாதான் இலக்கணக் கட்டுப்பாடு மிகுதியாகக் கொண்டது. விதிவிலக்குகள் அற்றது. முல்லைப் பூப்போலத் தனித்தன்மை கொண்டது.

இதன் ஓசை—செப்பலோசை
ஈற்றடி—முச்சீர்
ஏனையடி—நாற்சீர்
சீர்கள்—வெண்சீர், இயற்சீர்
தளை—வெண்டளையே வரவேண்டும்.
பிற தளைகள் வரவே கூடாது.
ஈற்றுச்சீர்—நாள், மலர், காசு, பிறப்பு என்னும்
வாய்பாட்டால் முடிய வேண்டும்.

ஈற்றடி முச்சீராய் ஏனைய நாற்சீராய்
ஆற்றலுறு செப்பல் அடிமனமாய்ப்—போற்றலுறு
வெண்டளையில் நாள்பிறப்பாய் வீசுமலர்க்கா சுடனே
மண்டுவதே வெண்பா மதி.

● 390. நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா—இவற்றை விளக்குக,

Koviloor Digital Library

□ நேரிசை வெண்பா :

1. வெண்டளை தவறாது அடிதோறும் நான்கு சீரால் வரும்; 2. நான்கடியாய் வரும; 3. இரண்டாமடியின் ஈற்றில் தனிச்சொல் பெற்று வரும்; 4. ஈற்றடி மூச்சீராய் வரும்; 5. நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டால் முடியும்.

□ இன்னிசை வெண்பா :

நேரிசை வெண்பாப் போன்றே வரும். ஆனால், இரண்டாமடி இறுதியில் தனிச்சொல் பெறாது வரும்.

மூன்றாம் அடியில் தனிச்சொல் பெற்று வரும். எல்லா அடிகளிலும் தனிச்சொல் பெற்று வரும்.

● 391. வெண்பாவின் ஓசை யாது?

வெண்பாவின் ஓசை செப்பல் ஓசை.

● 392. அகற்பாவின் இலக்கணம் யாது?

1. அடிதோறும் நான்கு சீராக இருக்கும், 2. நேரொன்றாசிரியத்தளையாலும் நிரையொன்றாசிரியத்தளையாலும் இயற்சீர் வெண்டளையாலும் வரும்; 3. பெரும்பாலும் இயற்சீரால் அமையும்; 4. குறைந்தது மூன்றடி பெற்று வரும்; 5. இறுதி ஏ, என் என முடியும்.

● 393. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?

ஆசிரியப்பாவின் வகைகள்: 1. நேரிசையாசிரியப்பா, 2. இணைக்குறளாசிரியப்பா, 3. நிலைமண்டில ஆசிரியப்பா, 4. அடிமறிமண்டில ஆசிரியப்பா என்பனவாம்.

● 394. நேரிசையாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா — இவற்றை விளக்குக.

ஆசிரியப்பாவின் இலக்கணப்படி அமைந்து ஈற்றயலடி முச்சீராய் வருவது நேரிசையாசிரியப்பா.

Koviloor Digital Library

ஆசிரியப்பாவின் இலக்கணப்படி அமைந்து எல்லா அடிகளும் நாற்சீராய் வருவது நிலைமண்டில ஆசிரியப்பா.

● 395. ஆசிரியப்பாவின் ஓசை யாது?

ஆசிரியப்பாவின் ஓசை அகவல் ஓசை.

□ கலிப்பாவை விளக்குக.

நாற்சீரடியால், கலித்தளை பெரும்பாலும் பெற்று—பல அடிகளால் வருவது கலிப்பாவாகும். இதன் வகைகள் மிகப் பல.

● 396. வஞ்சிப்பாவை விளக்குக.

சிந்தடியாலும் குறளடியாலும் ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை ஆகியவை பெற்று, பல அடிகளோடு வரும். இறுதி ஆசிரியப்பாவைப் போல முடியும்.

● 397. மருட்பா என்பது யாது?

முதலடிகள் வெண்பா அடிகளாகவும் பின் அடிகள் ஆசிரிய அடிகளாகவும் அமையுமாறு பாடுவது மருட்பா வாகும்.

● 398. பொருள்வகையால் மருட்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பொருள் வகையால் மருட்பா நான்கு வகைப்படும்.

அவை : 1. புறநிலை வாழ்த்து, 2. கைக்கிளை 3. வாயுறை வாழ்த்து, 4. செவியறிவுறூஉ என்பன.

5. அணி இலக்கணம்

[Figure of speech]

● 399. அணி இலக்கணமாவது யாது?

புலவர்கள் தம் மனத்தில் தோன்றும் கருத்துகளைத் தம் கற்பனைத் திறத்தாலும் அனுபவத்தின் முதிர்ச்சி யாலும் புலமைப் பெருமைகளாலும் சொல்லழகு

Koviloor Digital Library

பொருளழகு, உணர்ச்சி நுட்பம் முதலானவை ஒன்று சேரப் பாடல் இயற்றும் பான்மையினை விரித்து விளக்கும் நூலே 'அணியிலக்கணம்' ஆகும்.

● 400. தன்மை நவிற்சி அணியாவது யாது?

ஒருவருடைய அல்லது ஒரு பொருளுடைய உண்மையான தன்மைகளை உள்ளபடியே அழகுற எடுத்துக் கூறுவது 'தன்மை நவிற்சி அணி' ஆகும்.

(எ.டு) செழித்தனள்; உரப்பினள்; சிறுகண் தீயுக
விழித்தனள்; வைதனள்; வெய்து உயிர்த்தனள்;
அழித்தனள்; அழுதனள்; அப்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தை— அக்கொடிய கூனியே.

இதில் இராமன் முடிசூடுவதைக் கேட்ட கைகேயி கூனிக்கு ஒரு பொன்மாலையைப் பரிசாகக் கொடுக்க— அது பொறாத கூனியின் செயல் தன்மைகள் கூறப் பட்டுள்ளன. ஆகவே, இது தன்மைநவிற்சி அணி எனப்படும்.

● 401. உவமானம், உவமேயம் என்பவற்றை விளக்குக.

விளக்க எடுத்துக் கொண்ட பொருள் 'உவ மேயம்' எனவும், அவ்விளக்கம் தர எடுத்துக்காட்டிய பொருள் 'உவமானம்' எனவும் வழங்கப்படும்.

(எ.டு) முத்துப் போன்ற பற்கள்.

இங்கு விளக்க எடுத்துக்கொண்ட பொருள் பற்கள். எனவே, 'பற்கள்' உவமேயம். அதற்கு எடுத்துக் காட்டிய பொருள் முத்து. எனவே, 'முத்து' உவமானம்.

குறிப்பு: உவமானமும், உவமேயமும், உவம உருபால் இணைக்கப்பட்டால் அதுவே உவமை அணி யாகும்.

● 402. உருவக அணியாவது [Metaphor] யாது?

உவமானமும் உவமேயமும் வெவ்வேறு பொருள் எனத் தோன்றாது ஒன்றுபோற் காட்டி உவமானத்தின்

Koviloor Digital Library

தன்மை முழுவதும் உவமேயத்தில் கரைந்து நிற்குமாறு கூறுவதே 'உருவக அணி' ஆகும்.

(எ.டு) கைம்மலர்: இச்சொற்றொடர் மலரின் தன்மையாகிய மென்மை முழுவதையும் கைக்கு உரிமையாக்கி, கைவேறு, மலர்வேறு என்று தோன்றாவண்ணம் 'கையாகிய மலர்' எனப்பொருள் தருதலின் உருவகம் ஆயிற்று.

அறிவொளி: இச்சொற்றொடர் ஒளியின் தன்மை முழுவதையும் அறிவுக்கு உரிமையாக்கி அறிவு வேறு, ஒளி வேறு என்று தோன்றாவண்ணம் 'அறிவாகிய ஒளி' எனப் பொருள் தருதலின் உருவகம் ஆயிற்று.

● 403. உவமை அணிக்கும் உருவக அணிக்கும் உள்ள வேற்றுமை யாது?

உவமை அணியில் உவமை முன் நிற்கும். விளக்கப் படும் பொருள் பின் நிற்கும். உருவக அணியில் பொருள் முன் நிற்கும்; உவமை பின் நிற்கும். உவமை அணியில் உவமஉருபு வெளிப்படையாகவும் மறைந்தும் வரும். உருவகத்தில் 'ஆகிய', 'என்னும்' என்ற சொற்கள் மறைந்தும் வெளிப்பட்டும் வரும்.

உவமை அணியை உருவக அணியாகவும், உருவக அணியை உவமை அணியாகவும் மாற்ற முடியும்.

● 404. பின் வரும் உருவகங்களை உவமை அணிகளாகவும், உவமை அணிகளை உருவகங்களாகவும் மாற்றி எழுதுக.

1. முகமதி, 2. சொல்லம்பு, 3. வேல்போன்ற கண், 4. குரங்கு மனம்.

1. முகமதி—முகமாகிய நிலவு; உருவக அணி. நிலவு போன்ற முகம்; உவமை அணி. நிலவு முகம் என்று வருவதும் உவமை அணி.

2. சொல்லம்பு-சொல்லாகிய அம்பு; உருவக அணி. 'அம்பு போன்ற சொல்'; உவமை அணி.

3. கண்வேல்-கண்ணாகிய வேல்; உருவக அணி.

Koviloor Digital Library

4. குரங்குமனம் உவமை அணி, மனக்குரங்கு— மனமாகிய குரங்கு; உருவக அணி.

● 405. உவமையணியை (Simile) விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.

இரண்டு பொருள்களுக்கு ஒப்புமை தோன்றச் சொல்வது உவமை அணியாகும். நாம் கூறும் பொருள் உவமேயம் எனப்படும். அதற்கு ஒப்புமையாகக் காட்டும் பொருள் உவமை எனப்படும். இவ்விரண்டிற்கும் உள்ள ஒப்புமையைக் காட்டும் சொல் உவமஉருபு எனப்படும். எந்த வகையில் ஒப்புமை என்பதை விளக்கும் சொல் லுக்கு பொதுத்தன்மை எனப்படும். உவமையணியில் இந்த நான்கும் வரும். உவமஉருபும் பொதுத் தன்மையும் மறைந்தும் வரலாம்; வெளிப்படையாகவும் வரலாம்.

(எ–டு) இழுக்க லுடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

● 406. எடுத்துக் காட்டு உவமையணியாவது யாது?

உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையே 'போல' என்ற பொருள் தரும் உவம உருபுகள் தொக்கு (மறைந்து) வருவது 'எடுத்துக்காட்டு உவமையணி, யாகும்.

(எ–டு) தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

தோண்டிய ஆழத்திற்கு ஏற்ப மணற்கேணியில் நீர் ஊறும் என்பது உவமானம். மக்களுக்குத் தாம் கற்ற அளவுக்கேற்ப அறிவு பெருகும் என்பது உவமேயம். இவை இரண்டிற்கும் இடையே 'அது போல' என்னும் உவமஉருபு மறைந்திருப்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

● 407. இல்பொருள் உவமை அணியாவது யாது?

இயற்கையில் இல்லாத ஒன்றை இருப்பது போலக் கற்பனை செய்து, அக்கற்பனைப் பொருளை உவமை யாகக் கூறுவது 'இல்பொருள் உவமை அணி' ஆகும்.

Koviloor Digital Library

(எ.டு) அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.

பாலைவனத்தில் நீரின்றி வற்றிப்போன மரம் மீண்டும் தளிர்த்தல் என்பது இல்லாத (நிகழாத) ஒன்று. உள்ளத்தில் அன்பற்ற உயிருக்கு உவமையாக்கப் பட்டிருக்கிறது. எனவே, இஃது இல்பொருள் உவமை அணியாகும்.

● 408. ஏகதேச உருவக அணியின் இலக்கணம் யாது? எடுத்துக் காட்டுத் தருக.

தொடர்புடைய பல பொருள்களை உருவகப் படுத்திக் கூறும்போது ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றை உருவகப் படுத்தாமல் விடுவது 'ஏகதேச உருவக அணி'யாகும்.

(எ.டு) "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடிசேரா தார்."

பிறவியைக் கடலாக உருவகப்படுத்தி, அதைக் கடக்க உதவும் இறைவனடியைத் தெப்பமாக உருவகப் படுத்தாமையால், இஃது ஏகதேச உருவகமாம்.

● 409. உயர்வுநவிற்சி அணியை (Hyperbole) விளக்கி எழுதுக.

கற்பவரும், கேட்பவரும் வியந்து நிற்கும்படி, பெரியதை மிகப் பெரியதென்றும், சிறியதை மிகச்சிறியது என்றும் அழகியல் உணர்வு மேலோங்கப் புனைந் துரைப்பதே 'உயர்வு நவிற்சி'யாகும். ஒன்றன் இயல்பை மிகச் சிறப்பித்துக் (அதீதப்படுத்தி) கூறுவது, உயர்வு நவிற்சியாகும். அயோத்தி மாநகர்ச் சிறப்பை வர்ணிக்கும் கம்பர்,

'புயல் தொடு நெடுநிலை மாடத்
தின்னகர் புகலுமா றெவனோ?'

Koviloor Digital Library

என்று கூறுகிறார். நீண்ட மாடங்கள் மேகத்தைத் தொடுகின்றன என்பது மிகைப்படக் கூறலாம். மிக உயரமான மாடங்கள் என்று கூற வந்த கம்பர், மேகத்தைத் தொடும் மாடம் எனறு சிறப்பிக்கிறார். இப்படி உயர்த்திக் கூறுவதில் ஓர் அழகு இருக்கிறது. இஃது உயர்வு நவிற்சி அணியாகும்.

● 410. வேற்றுமையணியாவது யாது?

ஏதேனும் ஓர் ஒற்றுமையுடைய இரு பொருள்களுக்கு இடையே வேற்றுமை கற்பித்துக் கூறல் வேற்றுமை அணியாகும்.

(எ.டு) மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

அனிச்சம் மென்மலர். மோந்து பார்க்கும் வெப்பமும் ஆற்றாது வாடிவிடும். விருந்தினர், மென்மையான தன்மை வாய்ந்தவர்; வருத்தம் பெறாதவர். இவை அனிச்சத்திற்கும் விருந்தினருக்கும் உள்ள ஒற்றுமை. மோந்தால் தான் அனிச்சம் வாடும். ஆனால், மாறுமுகம் கொண்டு பார்த்தாலும் போதும் விருந்தினர் வருத்தம் அடைவர். இவை அனிச்சத்திற்கும், விருந்தினருக்கும் உள்ள வேற்றுமை. எனவே, இஃது வேற்றுமையணி.

● 411. பிறிது மொழிதல் அணியை விளக்குக.

கருத்திலே ஒன்றைக் கொண்டு அது குறிப்பால் விளங்கித் தோன்றுமாறு வேறு ஒன்றைக் கூறுவதுபோல், பிறிதொரு பொருள்மேல் ஏற்றிக் கூறுவது பிறிது மொழிதல் அணியாகும்.

(எ.டு) இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

முள்மரத்தை இளையதாக இருக்கும்போதே களைய வேண்டும். முற்றியபின் அது களையும் கையைத்

Koviloor Digital Library

துன்புறுத்தும். இதில் முள்மரத்தைக் கூறினாராயினும் முள்மரத்தைச் சொல்ல வேண்டும் என்பது அவர் கருத்து அன்று. பகையை, அது வலிமையற்றிருக்கும் போதே அழித்து விடவேண்டும் என்பதுதான் கருத்து. எனவே, இஃது பிறிது மொழிதல் அணியாகும்.

● 412. நிரல் நிரையணியாவது யாது?

சில சொற்களை வரிசைப்படுத்தி அச்சொற்களோடு தொடர்புள்ளவற்றையும் முறையாக வரிசைப்படுத்தி அவ்வரிசைப்படி பொருள் கொள்ள வைத்தலே நிரல் நிரையணியாகும்.

(எ.டு) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

அன்பு, அறன் இரண்டையும் முறையாக நிறுத்தி அன்பே பண்பு எனவும், அறமே பயன் எனவும் அவ் வரிசைப்படியே கூறுதலின் நிரல்நிரையணியாகும்.

● 413. வேற்றுப் பொருள் வைப்பணியாவது யாது?

ஒரு சிறப்பான பொருளைக் கூறத் தொடங்கி அதனை வலியுறுத்தி முடிக்க, வேறொரு பொதுவான உண்மையை அதனோடு தொடர்புறுத்திக் கூறுதல் வேற்றுப் பொருள் வைப்பணியாகும்.

(எ.டு) வால்வினை நுதலிய மங்கலத்து நாள்
தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினான்
சூழ்வினை நான்முகத் தொருவன் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ

இராமன் மாவுரி உடுத்தான் என்ற சிறப்புப் பொருளை, எவ்வளவு உயர்ந்தவராயினும் ஊழ்வினை உறுத்த வந்து சேருமாயின், அது யாராலும் தடுக்கக் கூடியதன்று என்னும் பொதுப் பொருளோடு தொடர் புறுத்திக் கூறினமையின் வேற்றுப்பொருள் வைப்பணி யாகும்.

Koviloor Digital Library

● 414. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியொன்றின் மீது தன் கருத்தை ஏற்றி அழகுறக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும். (எ.டு)

மையறு மலரின் நீங்கியான் செய்மா தவத்தின் வந்து
செய்யவளிருந்தாள் என்று செருமணிக் கொடிகள்
என்னும் கைகளை நீட்டி அந்தக் கடிநகர்
கமலச்செங்கண்
ஐயனை ஒல்லை வாவென் றழைப்பது போன்றதம்மா.

மிதிலை நகரம் தன்னிடத்தே திருமகள் வளர்ந்து வருவதைக் குறிப்பாகச் சொல்ல, அவளைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு இராமனை விரைந்து வருக என்று அழைப்பது போலத் தன் கொடிகளாகிய கைகளை நீட்டி அழைத்தது என்பது இதன் பொருள்.

இயல்பாகக் கொடி அசைவதை-இராமனை அழைக்கவே அவ்வாறு அசைந்தது என்று தன் குறிப்பை அதன் மீது ஏற்றிக் கூறியதால், தற்குறிப்பேற்ற அணியாயிற்று.

● 415. வஞ்சப் புகழ்ச்சி [Irony] அணியாவது யாது?

ஒன்றைப் புகழ்வது போலப் பழித்தலும், பழிப்பது போலப் புகழ்தலும் வஞ்சப் புகழ்ச்சி அணியாகும்.

(எ.டு) பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே.

புலவர் யாவரும் வரையாது வழங்கும் மாரியொன்றிருக்க, பாரி பாரி என்றே புகழ்வது எவ்வளவு அறியாமை என்று பாரியைப் பழிப்பது போலப் புகழ்தலின் இது வஞ்சப் புகழ்ச்சி அணியாகும்.

● 416. இரட்டுற மொழிதல் அணியை விளக்கி, எடுத்துக்காட்டுத் தருக.

Koviloor Digital Library

ஒரு சொல் அல்லது சொற்றொடர் இருபொருள் படுமாறு கூறுவது இரட்டுற மொழிதல் அல்லது சிலேடை யணியாகும்.

(எ.டு)'வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செக்கோல மேனித் திருமலை ராயன்வரையில்
வைக்கோலும் மால்யானை யாம்.'

இச்செய்யுள் வைக்கோலுக்கும், யானைக்கும் சிலேடையாக அமைந்துள்ளது. வைக்கோல், நெற் களத்தில் வாரி அடிக்கப்படும். பிறகு, வீடு வந்து நெற் கோட்டையைச் சூழ்ந்திருக்கும். வைக்கோற்போரில் சிறந்து விளங்கும் யானை, போர்க்களத்தில் பகைவரை வாரி அடித்துக் கொல்லும்; பிறகு வந்து கோட்டையை அடையும்; போரில் மற்றைப் படைகளைக் காட்டிலும் சிறந்து விளங்கும் என, முதல் இரண்டடிகள் இரு பொருள் தருதலைத் தெரிந்து கொள்ளலாம்.

● 417. சொற்பொருள் பின் வரும் நிலையணியாவது யாது?

ஒரு செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் அதே பொருளில் வருமாயின், சொற்பொருட்பின்வரு நிலையணியாகும்.

(எ.டு)
நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்;நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

இதில் 'நோய்' என்ற சொல் மீண்டும் மீண்டும் அதே பொருளில் வந்துள்ளதைத் தெரிந்து கொள்ளலாம்.

● 418. மடக்கணியாவது யாது?

ஒரு பாடலில் வந்த சொற்றொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது மடக்கணியாகும்.

Koviloor Digital Library

[எ.டு] ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவரைச் சூழும் கலைசையே—மேவும்
அரிவையம் பாகத்தான் அரணொருமுன் றெய்தான்
அரிவையம் பாகத்தான் அகம்.

இப்பாடலில் 'அரிவையம் பாகத்தான்' என்ற தொடர் இருமுறை மடங்கி வந்துள்ளது.

அரி+ வை+ அம்பு+ ஆக= திருமால் கூர்மையான அம்பாக விளங்க எனவும்.

அரிவை+ அம்+பாகத்தான்=பார்வதியை அழகிய ஒரு பாகத்தில் உடையவன் எனவும்,

இருவேறு வகையில் பதம் பிரிந்து பொருள் தருதலை உணரலாம்.

419. சொற்பிரிப்பு முறை

சொற்டொர்ப் பிரிப்பில் தவறு ஏற்படுமானால் பொருள் மாறுபட்டுவிடும். பவணந்தியார் "புணர்மொழி இசைத்திரிபால் தெளிவு எய்தும்" என்று குறிப்பிட்டு உள்ளார். ஆகையால், சொற்றொடர்களைப் பிரித்தெழுதுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

(எ.டு] பயணிகள் சாப்பிடுமிடம் (உணவறை)
பயணி கள் சாப்பிடும் இடம் (மதுக்கடை)
பரிவால் (அன்பால்) பரி வால் (குதிரைவால்)

சில விதிமுறைகளைப் பின்பற்றினால் சொற்பிரிப்பு முறையில் ஏற்படும் பிழைகளையும் நீக்கலாம்.

1. வினைத்தொகை, பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, உம்மைத்தொகை, உவமைத் தொகை, வேற்றுமைத்தொகை, உருபும் பயனும் உடன் தொக்கதொகை, அன்மொழித்தொகை ஆகிய இத் தொகைகளைப் பிரித்தெழுதக் கூடாது. 'எல்லாத்

Koviloor Digital Library

தொகையும் ஒரு சொல் நடைய' என்று தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பா கூறுகிறது,

வினைத்தொகை	— காய்கதிர், அடுபோர்.
பண்புத் தொகை	— செவ்வாய், கருங்குழல்,
இருபெயரொட்டுப் பண்புத்தொகை	— சாரைப்பாம்பு — தென்னைமரம்.
உம்மைத்தொகை	— வெற்றிலை பாக்கு,இரவுபகல்
உவமைத்தொகை	— பவளவாய், மலர் முகம்.
வேற்றுமைத்தொகை	— நாற்காலி செய்தான். மலையருவி.

உருபும் பயனும் உடன்

தொக்கதொகை—பொற்குடம், தங்கக்காப்பு.

அன்மொழித்தொகை—பூங்கொடி பேசினாள்.

2. வேற்றுமை உருபுகளைப் பிரித்தெழுதக்கூடாது; சேர்த்தே எழுதவேண்டும்.

(எ.டு) என்னுடைய பேனா.
மதுரையிலிருந்து வந்தார்.

மதுரையில் இருந்து வந்தார் என்று உருபைப் பிரித்தெழுதினால், மதுரையில் தங்கிவிட்டு வந்தார் என்று பொருள்படும். ஆகையால் சேர்த்தெழுதுவதே முறையாகும்.

3. இடைச்சொல்லைப் பிரித்தெழுதக் கூடாது.

(எ.டு) அவர்தாம், அவன்தான் என்று எழுத வேண்டும்; அவர் தாம், அவன் தான் என்று எழுதக்கூடாது.

4. உடம்படு மெய்யைச் சில இடங்களிற் சேர்த்தே எழுத வேண்டும். பிரித்தெழுவது பிழையாகும்.

(எ,டு) வரவில்லை. வர இல்லை என்று எழுதினால், வருவதற்கு நான் இல்லை என்று பொருள்படும்.

Koviloor Digital Library

5. துணைவினையைச் சேர்த்தே எழுத வேண்டும்.

(எ.டு) வந்துவிடு, விட்டொழி.

6. 'கள் விகுதியைக் கூடிய மட்டிலும் பிரிக்காமல் எழுத வேண்டும்.

(எ.டு) அவர்கள் உண்டார்கள்.

அவர் கள் உண்டார். 'கள்' என்று எழுதினால் பொருள் மாறுபடும்.

7. இடம் இல்லாவிட்டால் பொருள் விளங்கும் முறையில் சொல்லைப் பிரித்தெழுத வேண்டும். 'கல்லெறிந்தான்' என்பதை, கல்லெ றிந்தான் என்று பிரிக்காமல், கல் லெறிந்தான் என்று பிரிக்கலாம்.

8. பெயர்ச் சொற்களைப் பிரித்தெழுதாமல், சேர்த்தே எழுத வேண்டும். திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், திருநீலகண்டர், மெய்கண்டார்.

9. மெய்யெழுத்துகளை இடப்பக்கத்தில் எழுதக் கூடாது.

● 420. பிழையான சொற்களும்—திருத்தங்களும்

பிழை	சரி	பிழை	சரி
ஆத்துக்கு	அகத்துக்கு	அழும்பு	அழிம்பு
அக்கிராரம்	அக்கிரகாரம்	ஆலையம்	ஆலயம்
அகாறணம்	அகாரணம்	ஆக்ஷி	ஆட்சி
அடமழை	அடைமழை	ஆம்படையான்	அகமுடையான்
அடமானம்	அடைமானம்	இடதுகை	இடக்கை
அதுகள்	அவை	இரும்பல்	இருமல்
அமக்களம்	அமர்க்களம்	இன்னாளில்	இந்நாளில்
அருவாமனை	அரிவாள்மனை	உடமை	உடைமை
அருகாமை	அருகில்	உத்திரவு	உத்தரவு
ஊரணி	ஊருணி	சாக்கடை	சாய்க்கடை

Koviloor Digital Library

பிழை	சரி
உலந்து	உலர்ந்து
எகனைமொகனை	எதுகைமோனை
எடக்கு	இடக்கு
எண்ணை	எண்ணெய்
ஒண்டியாய்	ஒன்றியாய்
ஒரவத்தி	ஒரகத்தி
ஒருவள்	ஒருத்தி
ஒத்தடம்	ஒற்றடம்
கடகால்	கடைக்கால்
கடப்பாறை	கடப்பாரை
கடேசி	கடைசி
கத்திரிக்கோல்	கத்தரிக்கோல்
கறடுமுறடு	கரடுமுரடு
காத்தாடி	காற்றாடி
காச்சல்	காய்ச்சல்
குடக்கூலி	குடிக்கூலி
குண்டுமணி	குன்றிமணி
குரவளை	குரல்வளை
கிடா	கடா
கைமாறு	கைம்மாறு
கைத்தரி	கைத்தறி
கேடயம்	கேடகம்
கோடாலி	கோடரி
கோர்த்து	கோத்து
கோர்வை	கோவை
சமயல்	சமையல்
சக்களத்தி	சகக்கிழத்தி
சிகப்பு	சிவப்பு
சிலவு	செலவு
சிறுவாடு	சிறுபாடு
சிக்காய்	சிகைக்காய்
சேதி	செய்தி
தக்காணை	தலையணை
சுந்திரன்	சுந்தரன்
சுவற்றில்	சுவரில்
தடுமாட்டம்	தடுமாற்றம்
தேவலை	தாழ்வில்லை
தின்மை	தீமை
தாவாரம்	தாழ்வாரம்
திரேகம்	தேகம்
தீவட்டி	தீவர்த்தி
துகை	தொகை
துடங்கு	தொடங்கு
துளிர்	தளிர்
துறுத்தி	துருத்தி
தொந்திரவு	தொந்தரவு
தொப்புள்	கொப்பூழ்
நஞ்சை	நன்செய்
நாத்தம்	நாற்றம்
நாணயம்	மெய்ம்மை, நாநயம்
நிலயம்	நிலையம்
நேத்தி	நேர்த்தி
நொங்கு	நுங்கு
பயிறு	பயறு
பதனி	பதநீர்

□□□

Koviloor Digital Library

படிக்க வேண்டிய வினாக்கள்

☐ ஆறாம் வகுப்பு மாணவர்கள் :

1 முதல் 16 வரை. 18 முதல் 33 வரை. 106 முதல் 133 வரை. 133 முதல் 137 வரை. 173 முதல் 176 வரை. 182 முதல் 191 வரை. 193, 196, 258 முதல் 265 வரை. 273, 274.

☐ ஏழாம் வகுப்பு மாணவர்கள் :

1 முதல் 16 வரை. 17 முதல் 33 வரை. 44, 45, 46. 52 முதல் 59 வரை. 61, 108, 130, 132, 173, 176, 182, 183, 191, 193, 194, 195, 203, 204 ஆகிய வினாக்கள்.

☐ எட்டாம் வகுப்பு மாணவர்கள் :

1 முதல் 5 வரை. 17. 29 முதல் 34 வரை. 107, 108, 133, 192, 203, 204, 103, 104, 105. 129, முதல் 132 வரை. 112 முதல் 128 வரை உள்ள எல்லா வினாக்களும். 141. 159 முதல் 170 வரை உள்ள வினாக்கள். 173 முதல் 176 வரை. 182, 183, 190. 194 முதல் 198 வரை உள்ள வினாக்கள். 209 முதல் 224 வரை உள்ள எல்லா வினாக்கள். 277, 278, 279, 281, 282, 283, 284, 285, 289. 290, 291, 292. 293 முதல் 303 வரை. 352, 353, 383, 386, 394, 395, 397, 398, 399, 403, 404.

☐ ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் :

1 முதல் 4 வரை. 34 முதல் 45 வரை. 61 முதல் 65 வரை. 78 முதல் 84 வரை. 141 முதல் 158 வரை. 172 முதல் 179 வரை. 180, 181, 190, 191, 192, 205. 207 முதல் 209 வரை. 254 முதல் 276 வரை எல்லா வினாக்களும் 277. 225 முதல் 234 வரை. 278 முதல் 289 வரை. 304, 352 முதல் 372 வரை. 373 முதல் 379 வரை. 401, 402, 405, 406, 407, 411, 419, 420.

Koviloor Digital Library

□ பத்தாம் வகுப்பு மாணவர்கள் :

1 முதல் 5 வரை. 34 முதல் 45 வரை. 48 முதல் 51 வரை. 73, 101, 106, 107, 108. 174 முதல் 180 வரை. 183 முதல் 189 வரை. 235 முதல் 250 வரை. 315, 316. 323, 324, பாவகை. 352 முதல் 391 வரை. 401, 408, 409. 410 முதல் 420 வரை. 342 முதல் 351 வரை.

சொற்றொடர் வரலாறு முழுவதும்.

□ +1, +2 வகுப்பு மாணவர்கள் :

61, 68, 101, 106, 107, 72, 73. 75 முதல் 94 வரை. 93 முதல் 97 வரை. 99, 100, 141, 159, 172, 173 முதல் 178 வரை. 181 முதல் 188 வரை. 191 முதல் 193 வரை. 197, 198, 199, 203, 204, 235, 236, 238, 239, 240, 242, 243, 244, 245, 246, 247, 248, 249, 250, 251, 252, 256, 257, 258 முதல் 275.

புணர்ச்சி இலக்கணம் 277 முதல் 287 வரை. 288 முதல் 299 வரை செய்யுள் விகாரம். 315, 316, 317, 318. 325, 330, 331, 340, 341, 342 முதல் 351 வரை. 352 முதல் 371 வரை. 374 முதல் 391 வரை. அணியிலக்கணம் 395 முதல் மற்ற எல்லாப் பகுதிகளும்.

+2 மாணவர்களுக்கு இலக்கணமாக நேரிடையான வினாக்கள் வருவதில்லை. இந்தப் பகுதிகளை அறிந்து கொண்டால் வினாக்களுக்கு ஏற்றவிடை அளிக்கலாம்.

எண்கள் வினாக்களைக் குறிக்கும்.

உரிய வினாக்களை குறித்துக்கொண்டு அந்தந்த வகுப்பு மாணவர்கள் படித்து அறிந்து கொள்ள வேண்டும். தமிழாசிரியர் அறிவுரையையும் கேட்டுக் கொள்வது நலம் பயக்கும்.

பத்தாம் வகுப்பு மாணவர்கள், ஒன்பதாம் வகுப்பிற்கான இலக்கணப் பகுதிகளையும் படிக்க வேண்டும். மறந்துவிடக்கூடாது.

அழகப்பா பல்கலைக்கழகம்
வளர் தமிழ் நூலகம்
காரைக்குடி.

□ வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்

Accession No. 18252

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஐந்திலக்கணம்

இந்த நூல்...

- ☐ எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக் கணத்தையும் எளிய நடையில் விளக்கிச் சொல்கிறது.
- ☐ மாணவர்க்கும், மற்றவர்க்கும் இலக்கணத்தில் தேவையான வற்றைத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது.
- ☐ செந்தேனில் ஊறிய சொற்கள்; தகுந்த எடுத்துக்காட்டுகள்; தெளிந்த ஆற்றொழுக்கான நடை; கவிதை நயம் காட்டும் சொல்லாட்சி-இவை நூலின் தனித்தன்மை.
- ☐ வினா, விடை முறையில் சிக்கலான இடங்களையும் மிக எளிமையாய் விளக்குகிறது இந்நூல்.
- ☐ மாணவர்களுக்கு — ஆசிரியர்களுக்கு — தமிழை உணர்ந்து கொள்ள விரும்புவார்க்கு உற்ற துணையாய் விளங்குகிறது இந்நூல்.
- ☐ இளைய தலைமுறைக்கு விலையிலா மணி போன்றது. கட்டாயமாக இருக்க வேண்டிய கையிருப்பைப் போல் அவசியமானது இந்த நூல்.

கிடைக்குமிடம் :

வெற்றிவேல் இல்லம்
255, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
தண்டையார்ப் பேட்டை மணிக்கூண்டுக்கருகில்,
வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.